**ப.து.ந.க.எண்.2129/2011**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 18.02.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.51/2015 **பொருள் எண்.01**

**பணித்துறை – திட்ட அனுமதி / கட்டிட அனுமதி விண்ணப்பங்கள் – தோராய அபிவிருத்திக் கட்டணம் வசூலிப்பது – வழிகாட்டுதல் வழங்குவது – மன்றத்தின் அனுமதி**

பணித்துறை சுற்றறிக்கையில் (சுற்றறிக்கை ப.து.ந.க.எண்.2129/2011 நாள்.12.12.2011) திட்ட அனுமதி வழங்கும் பொழுது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இந்த வழிமுறைகளில் திட்ட அனுமதி ஒப்புதல் வழங்கும் பொழுது சாலைகள், தெரு விளக்குகள் மற்றும் மழை நீர் வடிகால் அமைக்க வேண்டி சென்னை மாநகராட்சி வசூலிக்கப்படும் தோராய அபிவிருத்திக் கட்டணத்தை, தனியார் மனைப்பிரிவு மற்றும் இயக்குநர், நகரமைப்பு மற்றும் ஊரமைப்பு துறையினரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு ஆகியவற்றில் உள்ள மனைகளுக்கு வசூலிக்கலாம் என்று உள்ளது.

இதில் தெளிவாக, அரசுத் துறைகளால் உருவாக்கப்படும் மனைப்பிரிவுகள், 2011ல் சென்னை மாநகராட்சி எல்லையில் இருந்த மனைகள் மற்றும் ஏற்கனவே ஒப்புதல் பெற்றவை குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இது தொடர்பாக C.C.M.C Act, 1919-ல் உள்ள பிரிவு 218–ல் கீழ் கண்டவாறு உள்ளது.

> “If any private street or Part thereof is not leveled, paved, metalled, flagged, channeled, drained, conserved or lighted to the satisfaction of the Commissioner, the Commissioner may be notice required the owners of the such street or part and owners of buildings and lands fronting or abutting on such street to carry out the work which in his opinion may be necessary, and within such time as may be specified in such notice.
>
> If such work is not carried out within the time specified in the notice, the Commissioner may, if he thinks fit, execute it and the expenses incurred shall be paid by the owners in such proportions as may be settled by the Commissioner.”

அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் உள்ள மனைகளை பிரிக்கும் பொழுது சாலைக்கென நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஆனால், இச்சாலைகள் முறையாக அங்கு ஏற்படுத்தப்படாமல் விடப்படுகிறது. சாலை வசதி, தெரு விளக்கு மற்றும் தேவையான இடங்களில் மழைநீர் வடிகால் ஆகியவற்றை சென்னை மாநகராட்சி ஏற்படுத்துகிறது. ஆதலால் இம்மனைகளில் கட்டிடம் கட்ட வேண்டி திட்ட அனுமதி ஒப்புதல் வழங்கும் பொழுது தோராய அபிவிருத்திக் கட்டணம் சென்னை மாநகராட்சியால் வசூலிக்கப்படுகிறது.

இது தவிர, அரசுத் துறைகளான தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம் ஆகியவை இவ்வாறு மனைப்பிரிவுகளை உருவாக்கும் பொழுது, அரசுத் துறைகளே அம்மனைப்பிரிவில் ஒதுக்கப்படும் பாதைக்கான நிலத்தில் சாலை வசதி மற்றும் இதர கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி விடுகின்றன. இதற்கு உண்டான கட்டணங்களை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம் ஆகியவை சம்மந்தப்பட்ட மனை உரிமையாளர்களிடமே, மனை ஒதுக்கீடு செய்யும் பொழுது வசூலித்து விடுகின்றன.

இவ்வாறு உருவாக்கப்படும் சாலைகளை, சில காலங்களுக்கு அரசு துறைகள் பராமரித்து சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்து விடுகின்றன. அவ்வாறான சாலைகளை சென்னை மாநகராட்சி தன் வசம் எடுத்துக் கொள்ளும் பொழுது, சாலை வசதி ஏற்படுத்தாமல் இருப்பின், சம்மந்தப்பட்ட அரசுத் துறையிடம் அதற்கான கட்டணத்தை வசூலிக்கப்படுகிறது.

மனை உரிமையாளர்கள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டி சம்மந்தப்பட்ட அரசுத் துறைகளிடம் கட்டணங்களை செலுத்தி விடுவதால், அவ்வாறான கட்டணங்களை திட்ட அனுமதி / கட்டிட அனுமதி வழங்கும் பொழுது சென்னை மாநகராட்சி மீண்டும் வசூலிக்க வேண்டியது தேவையில்லை என்று கருதப்படுகிறது. இல்லையெனில் மனுதாரர் இரண்டு முறை கட்டணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்படும்.

மேலும், சென்னை மாநகராட்சியில் உள்ள பழைய எல்லைகளில் (அதாவது மண்டலம் 4,5,6,8,9,10 மற்றும் 13) உள்ள சாலைகளில் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் வேளச்சேரி, திருவான்மியூர், விருகம்பாக்கம், கொளத்தூர், கொடுங்கையூர் பகுதி நீங்கலாக, சென்னை மாநகராட்சி பராமரிப்பில் உள்ளவை பொது சாலைகள் ஆகும். இப்பகுதிகள் சென்னை மாநகராட்சி எல்லைப் பகுதியில் 1980 மற்றும் 1990 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டவை.

ஏற்கனவே சென்னை மாநகராட்சி 30 வருடங்களுக்கு முன் உருவாக்கி பராமரித்து வரும் சாலைகளுக்கு தற்பொழுது தோராய அபிவிருத்திக் கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டிய தேவை இல்லை என்று கருதப்படுகிறது

அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் உள்ள மனைகளில் கூட, தனியார் தன் மனைக்கு மட்டும் ஏற்கனவே வீடு கட்டுவதற்கு முறையாக ஒப்புதல் பெற்று இருப்பார். அவ்வாறான ஒப்புதல் பெற்ற மனையில் மேலும் கூடுதலாக கட்டுவதற்கோ அல்லது இடித்து விட்டு கட்டுவதற்கோ மீண்டும் விண்ணப்பம் அளிப்பார். இவ்வாறான விண்ணப்பங்களுக்கும் ஒப்புதல் வழங்கும் பொழுது தோராய அபிவிருத்திக் கட்டணம் வசூலிக்க வேண்டிய தேவையில்லை என்று கருதப்படுகிறது.

எனவே, மேலே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் திட்ட அனுமதி / கட்டிட அனுமதி விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் வழங்கும் பொழுது தோராய அபிவிருத்திக் கட்டணம் வசூலிப்பதற்கு கீழ்கண்ட வழிகாட்டுதலை பின்பற்றுவதற்கு,

கீழ்கண்ட பிரிவுகளில் உள்ள மனைகளுக்கு தோராய அபிவிருத்திக் கட்டணங்களை (சாலை, தெரு விளக்கு மற்றும் மழைநீர் வடிகால் அமைக்க வேண்டி) வசூலிக்கத் தேவையில்லை:

(அ) அரசுத் துறைகளான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் உள்ள மனைகள்.

(ஆ) சென்னை மாநகராட்சி மையப் பகுதிகளில் உள்ள (மண்டலம்–4,5,6,8,9,10 & 13) அங்கீகரிக்கப்படாத மனை பிரிவில் அமையாத மனைகள்.

(இ) ஏற்கனவே கட்டிடம் கட்டுவதற்காக முறையாக ஒப்புதல் வழங்கப்பட்டு கட்டிடம் கட்டப்பட்டு, வீட்டு வரி செலுத்தப்படும் மனைகள்.

மேற்கண்ட 'அ' முதல் 'இ' வரையுள்ள இனங்களுக்கு நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டம் 16.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு 20.02.2015 அன்று தீர்மான எண்.01/2015ன்படி நிலைக்குழு (நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.3.ந.க.எண்.பி2/4951 /2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 07.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.52/2015 **பொருள் எண்.02**

**மண்டலம்–3, வார்டு–24ல் சூரப்பட்டு, சண்முகபுரம், பாரதிதாசன் நகரில் அமைந்துள்ள பழுதடைந்த பள்ளிக்கூட கட்டிடங்களை இடிக்க அனுமதி.**

மண்டலம்–3, வார்டு–24ல் சூரப்பட்டு, சண்முகபுரம், பாரதிதாசன் நகரில் அமைந்துள்ள பள்ளிக்கூட கட்டிடத்தை ஆய்வு செய்ததில் இக்கட்டிடம் புழல் ஊராட்சி ஒன்றியத்தால் கட்டப்பட்டு மிகவும் பழுதடைந்துள்ளது. மேலும், இக்கட்டிடத்தை புதுப்பிக்க இயலாத நிலையுள்ளதால் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டிடத்தை இடித்து புதிய கட்டிடம் கட்டலாம் என கருதப்படுகிறது.

மண்டலம்–3, வார்டு குழுவில் மேற்கண்ட பழுதடைந்த பள்ளிக்கூட கட்டிடத்தை இடித்து புதிய கட்டிடம் கட்டுவதற்கு பரிந்துரைத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கட்டிடத்தின் விவரம் பின்வருமாறு

| வ. எண் | வார்டு–24 | மண்டலம்–3 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–3, வார்டு–24, சூரப்பட்டு, சண்முகபுரம், பாரதிதாசன் நகரில் அமைந்துள்ள பழுதடைந்த பள்ளிக்கூட கட்டிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1990–1991 ஆம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 1) 650 சதுர அடி (தரை தளம் மட்டும்)<br>2) 650 சதுர அடி (தரைதளம் மட்டும்) |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 1300 சதுர அடி |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | 8957+4614=ரூ.13,571/– |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | பயன்பாட்டில் உள்ளது |
| 7 | அந்த கட்டிடம் இடிப்பதற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | புதியதாக தரைதளம் + இரண்டு தளத்துடன் கூடிய பள்ளிக்கூட கட்டிடம் கட்டப்பட உள்ளது. |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம். | மிகவும் பழுதடைந்துள்ளது. புழல் ஊராட்சி ஒன்றியத்தால் கட்டப்பட்டுள்ள இந்த கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளது. இக்கட்டிடத்தை புதுப்பிக்க இயலாது. |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–3 |
| 10 | வார்டு குழு பரிந்துரை தீர்மான எண்/ நாள் | மண்டலம்–3, வார்டு குழு தீர்மான எண்.645, நாள். 09.07.2014 |

எனவே, மண்டலம்–3, வார்டு–24ல் சூரப்பட்டு, சண்முகபுரம், பாரதிதாசன் நகரில் அமைந்துள்ள பழுதடைந்த பள்ளிக்கூட கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு(கல்வி) மற்றும் நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.02.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.05/2015, நாள்17.02.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“20.02.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண். 27/15 நாள் 20.02.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்தரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.க.கு.ந.க.எண்.அ8/191/2015</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.02.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.53/2015 பொருள் எண்.03

**<u>தமிழ்நாடு திருத்திய ஊதிய விகித விதிகள் 2009 – வயது முதிர்வு ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு – ஓய்வு பெறும் தேதிக்கு அடுத்த நாள் ஊதிய உயர்வுக்கு தகுதியுடையவர்க்கு – கருத்தியலான ஊதிய உயர்வு – வழங்க அரசு ஆணை எண்.311, நிதித் (படிகள்) துறை, நாள்.31.12.2014ல் ஆணை வெளியிடப்பட்டது – அரசாணையை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த மன்றத்தின் அனுமதி</u>**

அரசு ஆணை எண்.311, நிதித் (படிகள்) துறை, நாள் 31.12.2014, திருத்திய ஊதிய விகித விதிகள் 2009 வயது முதிர்வு ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு ஓய்வு பெறும் தேதிக்கு அடுத்த நாள் ஊதிய உயர்வுக்கு தகுதியுடையவர்க்கு கருத்தியலான ஊதிய உயர்வு ஆணை வெளியிடப்பட்டது. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>ABSTRACT</u>**

Tamil Nadu Revised Scales of Pay Rules, 2009 – Grant of notional increment to Government Servants who retires on superannuation on the preceding day of increment due date – Orders – Issued.

---

**FINANCE (CMPC) DEPARTMENT**

G.O.Ms.No.311

Dated: 31-12-2014.
Margazi,16.
Thiruvalluvar Aandu, 2045.

**READ** :

1. G.O.Ms.No.234, Finance (PC) Department, dated: 1-6-2009.
2. G.O.Ms.No.123, Finance (PC) Department, dated: 10-4-2012.

-----

**<u>ORDER:</u>**

As per the provisions under Fundamental Rules 26 (a), the annual increments of the Government Servants are regulated in four quarters viz. 1st January, 1st April, 1st July and 1st October. However, there is no provision in the Fundamental Rules to sanction annual increments in the case of the Government Servants who have rendered one full year of service and retires on superannuation on the last date of completion of one year and their increment due date falls on the next day of superannuation. As such an anomalous situation arises in the case of those Government Servants who retires on the 31st March, 30th June, 30th September and 31st December, as the case may be, inspite of the fact that they have completed one full year of service which are countable for increment as per Fundamental Rules 26(a), (b), (bb), (c) and (d) as the case may be, and on the date of retirement.

2) The above issue was brought to the notice of Pay Grievance Redressal Cell constituted in the Government Order second read above by several Employees Association for due rectification. The Pay Grievance Redressal Cell, among others, has recommended that “when date of increment of a Government Servant falls due on the day following superannuation on completion of one full year of service, such service may be considered for the benefit of a notional increment purely for the purpose of pensionary benefits and not for any other purpose. Such concession may be made applicable prospectively”.

3) After careful consideration, the Government have decided to accept the above recommendation of Pay Grievance Redressal Cell. Accordingly, the Government direct that a Government Servant whose increment falls due on the day following superannuation, on completion of one full year of service which are countable for increment under Fundamental Rules 26, be sanctioned with one notional increment at the rate as described under rule 6 of Tamil Nadu Revised Scales of Pay Rules, 2009, purely for the purpose of pensionery benefits and not for any other purpose. The above concession of sanction of notional increment shall take prospective effect from the date of issue of this order.

4) Necessary amendment to the Fundamental Rules shall be issued by Personnel and Administrative Reforms Department separately.

(BY ORDER OF THE GOVERNOR)

**K. SHANMUGAM,**
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT.

எனவே, அரசாணை எண்.311, நிதித் (படிகள்) துறை, நாள் 31.12.2014னை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.02.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.38/2015, நாள்.23.02.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>ப.து.ந.க.எண்.அ4/ 4484/2015</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 09.02.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.54/2015 **பொருள் எண்.04**

**<u>சென்னை மாநகராட்சி–பணித்துறை – திரு.B.V.பாபு, செயற் பொறியாளர், திரு.R.ராஜேந்திரன், உதவி செயற் பொறியாளர் அவர்கள் இந்திய அரசின் நகர்புற வளர்ச்சி அமைச்சகத்தின் சார்பாக கருத்தரங்கம் மற்றும் போக்குவரத்தில் பயிற்சி தொடர்பான பயணத்தில் அரசு முறையில் கலந்து கொண்டதற்கு – பின்னேற்பு அனுமதி</u>**

இந்திய அரசின் நகர்புற வளர்ச்சி அமைச்சகத்தின் சார்பாக கருத்தரங்கம் மற்றும் போக்குவரத்தில் பயிற்சி படிப்பு பிரிவில் கலந்து கொள்ளும் பொருட்டு ஆங்காங் & சிங்கப்பூர் (Hongkong & Singapore )நகரில் பிப்ரவரி 1–10 ஆகிய நாட்களில் நடைபெற்ற கருத்தரங்கம் மற்றும் போக்குவரத்து பயிற்சி அதன் நவீன அம்சங்கள் மற்றும் சிறப்பு அம்சங்களை காண்பிக்கும் ஒரு பயிற்சி பயணம் ஆகும். இக்கருத்தரங்கம் மற்றும் பயிற்சி பயணத்தில் கலந்து கொள்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. மேலும், இந்நிகழ்ச்சியில் பல இந்தியப் பிரதிநிதிகள் மற்றும் நகர்புற மேம்பாட்டு துறை அரசு அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

சென்னை மாநகராட்சி முதன்மை செயலர்/ஆணையார் அவர்களின் 12.12.2014 நாளிட்ட ஆணையில் மேற்குறிப்பிட்ட கருத்தரங்கு மற்றும் போக்குவரத்து பயிற்சி பயணத்தில் கலந்து கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு திரு.B.V.பாபு, செயற் பொறியாளர், திரு.R.ராஜேந்திரன், உதவி செயற் பொறியாளர் பணித்துறை அவர்களை தேர்ந்தெடுத்து இக்கருத்தரங்கம் மற்றும் போக்குவரத்து பயிற்சி பயணத்தில் கலந்து கொள்ள அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆங்காங் & சிங்கப்பூர் நாட்டில் பிப்ரவரி 1 முதல் 10 வரை நடைபெற்ற கருத்தரங்கம் மற்றும் போக்குவரத்து பயிற்சி பயணத்திற்கான செலவினையும் மற்றும் தங்கும் செலவினையும் உலக வங்கி மூலம் மேற்கொள்ளப்பட்டது. சென்னை மாநகராட்சி மூலம், செலவினம் எதுவும் இல்லை. இக்கருத்தரங்கம் மற்றும் போக்குவரத்து பயிற்சி பயணத்தில் கலந்து கொள்வதற்கு திரு.B.V.பாபு, செயற் பொறியாளர், திரு.R.ராஜேந்திரன், உதவி செயற் பொறியாளர் ஆகிய இருவருக்கும் அரசாணை அளிக்கப்பட்டது.

எனவே, திரு.B.V.பாபு, செயற் பொறியாளர், திரு.R.ராஜேந்திரன், உதவி செயற் பொறியாளர் பணிகள் அவர்கள் ஆங்காங் & சிங்கப்பூர் நகரில் நடைபெற்ற கருத்தரங்கம் மற்றும் போக்குவரத்து பயிற்சி பயணத்தில் 01.02.2015 முதல் 10.02.2015 வரை கலந்துக்கொண்டதற்கும் அக்காலத்தை பணிக்காலமாக கருதவும் நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“20.02.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.29/2015, நாள்.20.02.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்தரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**க.து.ந.க.எண்.அ2/10398/2014–1**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 10.02.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.55/2015 பொருள் எண்.05

**LCD Projector – கல்வித்துறை – 92 சென்னை நடுநிலைப்பள்ளிகளுக்கு தேவையான Sony VPL Multi-Media Projector (LUMEN:3000) என்ற LCD Projector- ஐ DGS & D தொகையில் நிறுவுவதற்கு அனுமதி.**

மாண்புமிகு மேயர் அவர்களின் 2014 - 2015 ஆம் கல்வியாண்டின் நிதி நிலை அறிக்கை வரிசை எண்:20ல் 122 சென்னை தொடக்கப்பள்ளிகளுக்கும் மற்றும் 92-சென்னை நடுநிலைப்பள்ளிகளுக்கும் தேவையான LCD–தொலைக்காட்சி பெட்டி, மற்றும் ஒலிப்பெருக்கிக் கருவிகள் (PA System) 2014 - 2015 ஆம், கல்வியாண்டில் வழங்கலாம் என கருதப்பட்டுள்ளது. இன்றைய வேலையை நேற்றைய கருவியால் செய்யும் எந்த நாடும் முன்னேறாது என்பார்கள். இன்று கற்றல் கற்பித்தலில் எவ்வளவோ மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. குழந்தைகளை ஈர்த்திடும் வகையில் கல்வி அளிப்பதைக் கருத்தில் கொண்டு இன்றைய நவீன கற்றல் கற்பித்தலுக்குத் தேவையான, அவசியமான LCD - தொலைக்காட்சி பெட்டி, மற்றும் ஒலிப்பெருக்கிக் கருவிகள் (PA System) மிகவும் அவசியமாக தேவைப்படுகிறது.

இந்நிலையில் ஒரு பள்ளியில் உள்ள அனைத்து மாணவர்களும் ஒருங்கிணைந்து நிகழ்ச்சிகளை காண்பதற்கு ஏதுவாகவும், ஆசிரியர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்குவதற்கும், மாணவர்களுக்கு பாட சம்மந்தமான கற்றல், கற்பித்தல் நிகழ்வுகளை மேம்படுத்த குறுந்தகடுகள் மூலம் கற்பித்தலை மேற்கொள்வதற்காகவும், நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தும் விதமாக LCD தொலைக்காட்சிப் பெட்டிக்கு பதிலாக LCD Projector வழங்கலாம் என்ற கருத்து பணிந்து தெரிவிக்கப்பட்டு 23.05.2014 நாளிட்ட முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஆணையும் மற்றும் மன்றத் தீர்மான எண்:243/2014 நாள்:30.05.2014-ன்படி, மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு 109 சென்னை தொடக்கப்பள்ளிகளுக்கு கொள்முதல் செய்யப்பட்டு ஏற்கனவே, வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் 92-சென்னை நடுநிலைப்பள்ளிகளுக்கும் LCD தொலைக்காட்சிப் பெட்டிக்கு பதிலாக LCD Projector வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கீழ்கண்டுள்ளவாறு வேண்டப்படுகிறது.

92- சென்னை நடுநிலைப்பள்ளிகளுக்கு தேவையான Sony VPL Multi – Media Projector (LUMEN : 3000) என்ற LCD Projector-னை கொள்முதல் செய்வதற்கு ELCOT என்ற நிறுவனத்தின் விலைப்பட்டி மற்றும் DGS & D Rate - ன் விலைப்பட்டி கீழ்கண்டுள்ளவாறு கல்வித்துறையில் பெறப்பட்டுள்ளது.

**Quotation for ELCOT**

| Sl.No | Description | Unit Price (Rs) |
|---|---|---|
| 1 | 32481-OT–DLP -004A - Multimedia Projector with DLP Technology, 3000 Ansi Lumers, Resolution – XGA, Lamp Life – 4500 Hrs, Contrast Ratio 13000:1, Interfaces-S-VideoX1, Composite X1, Stereo Mini JackX1, VGAX1, Projection Method – Front and Rear, Projector Distance 1 mtr-12mtr, Features – Zooming, Keystone and Wall Color Correction, Accessories – Remote Control, Carry Case, VGA cable, Power card, Lens cap, and Manuals and Weight 2.2kg. | 33,000.00 |
| | VAT 14.5% | 4,785.00 |
| | Service Charge 5% of the Order Value | 1,650.00 |
| | Service Tax @ 12.36% of the Service Charges | 204.00 |
| | Advertisement Charges on the prorate basis (Appx.) 1% | 330.00 |
| | Total | 39,969.00 |

**Quotation for DGS & D RATE**

| Sl.No | Description | Unit Price (Rs) |
|---|---|---|
| 1 | 32481-OT–DLP-004A - Multimedia Projector with DLP Technology, 3000 Ansi Lumers, Resolution – XGA, Lamp Life – 4500 Hrs, Contrast Ratio 13000:1, Interfaces-S-VideoX1, Composite X1, Stereo Mini JackX1, VGAX1, Projection Method – Front and Rear, Projector Distance 1 mtr-12mtr, Features – Zooming, Keystone and Wall Color Correction, Accessories – Remote Control, Carry Case, VGA cable, Power card, Lens cap, and Manuals and Weight 2.2kg. | 25,310.00 |
| | VAT 14.5% | 3,670.00 |
| | Total | 28,980.00 |

மேற்கண்டுள்ள இரண்டு நிறுவனங்களின் விலைப்பட்டியினை ஒப்பீட்டு பார்த்ததில் ELCOT நிறுவனத்தின் விலையை விட DGS & D Rate– ன் விலைப்பட்டி குறைந்து காணப்படுகிறது. எனவே, 92 சென்னை நடுநிலைப்பள்ளிகளுக்கு தேவையான Sony VPL Multi – Media Projector (LUMEN:3000) என்ற LCD Projector கொள்முதல் செய்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது .

**DGS & D Rate - Sony VPL Multi – Media Projector (LUMEN : 3000) விவரங்கள்**

| Sl. No | Name of the Items | Qty | Total Amount |
|---|---|---|---|
| 1 | **Sony VPL Multi – Media Projector ( LUMEN : 3000 )** | **1** | **25,310** |
| | **Vat 14.5 %** | | **3,670** |
| | **Total** | | **28,980** |

எனவே ,

1. 2014 - 2015 ஆம், கல்வியாண்டில் 92 சென்னை நடுநிலைப்பள்ளிகளுக்கு தேவையான Sony VPL Multi–Media Projector (LUMEN:3000) என்ற LCD Projector–ஐ 2014-2015 ஆம், கல்வியாண்டில் DGS & D Rate (28,980 X 92 =26,66,160/-) தொகையில் விலைப்புள்ளி மூலம் கொள்முதல் செய்வதற்கு அனுமதியும்,
2. Sony நிறுவனம் எந்த டீலருக்கு (Authorization Letter) பரிந்துரைக்கப்படுகிறதோ அந்த டீலரின் மூலம் LCD Projector கொள்முதல் செய்வதற்கு அனுமதியும்,
3. கல்வி அலுவலர் அவர்களின் மூலம் கொள்முதல் செய்வதற்கு அனுமதியும்,
4. இச் செலவினத்தை துறை குறியீடு – E - பிரிவு எண் : 80 - 82 -01, கணக்கு குறியீடு எண் : 410-60-02-00 அலுவலக தளவாடங்கள் கணினிகள் என்ற மூலதன தலைப்பில் (Capital Budget ) - ல் செலவு மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.02.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.06/2015, நாள்17.02.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“23.02.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.35/2015, நாள்.23.02.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>இ.பொ.து.ந.க.எண்.பி1/ 309 /2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 09.02.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.56/2015 பொருள் எண்.06

**<u>சென்னை மாநகராட்சி – இயந்திர பொறியியல் துறை – அச்சகம் – அச்சகப்பணியாளர்கள் – அதிகப்படியான நேரம் வேலை செய்வதற்கு அரசு அச்சகத்தில் கடைபிடிக்கும் நெறி முறைகள் சென்னை மாநகராட்சி அச்சகத்தில் நடைமுறைபடுத்துவதற்கு அனுமதி.</u>**

சென்னை மாநகராட்சி அச்சகத்தில் தற்சமயம் சுமார் 41 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது சென்னை மாநகராட்சி விரிவுபடுத்தப்பட்டு கூடுதல் பணியை எதிர் கொண்டிருக்கும் நிலையில் அச்சகத்தில் அவ்வப்போது அவசர / அவசிய பணிகளில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனால் பணியாளர்களுக்கு அதிகப்படியான நேரப்பணிக்கு இரட்டிப்பு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. அதற்காக ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கீடு செய்து மன்றத்தின் அனுமதி அளிக்கப்பட்டு வருகின்றது.

சென்னை மாநகராட்சி அச்சகத்திற்கு மிகைநேரப் பணிக்காக 1999 – 2000ல் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட மிகைநேரப் பணிக்கான ஊதியம் ரூ.24,948/– க்கு தணிக்கை தடை (பத்திஎண்.55) எழுப்பி உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை மிகை நேரப்பணிக்காக ஊதியம் வழங்குவதற்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. பணியாளர்கள் கூடுதலாக பணி செய்யும் நேரத்திற்கு இரட்டிப்பு ஊதியம் வழங்க மன்றத்தின் மூலம் அனுமதிப் பெற முதன்மை செயலர் / ஆணையர் அவர்களுக்கு குறிப்பு வைக்கப்பட்டது. குறிப்பில் மிகை நேரப்பணி அனுமதித்தால் இரட்டிப்பு ஊதியம் வழங்க வேண்டும் என்பதால் மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் வழங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் எனவும், 11.05.2013 நாளிட்ட குறிப்புரையில் இணை ஆணையர் (பணிகள்) அவர்களால் அரசு அச்சகத்தில் நடைமுறைகள் எவ்வாறு பின்பற்றப்படுகிறது ? எனவும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் உதவி செயற்பொறியாளர் (அச்சகம்) மூலமாக இயக்குநர்/எழுது பொருள் மற்றும் அச்சகத்துறைக்கு கூடுதலாக பணி செய்யும் நேரத்தில் அரசு அச்சகத்தில் கடைப்பிடிக்கப்படுகின்ற நெறிமுறைகளை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதற்கு இயக்குநர் அவர்கள், ஆணையர் மூலமாக கடிதம் தமக்கு அனுப்புமாறு கோரப்பட்டது. அதன்படி முதன்மை செயலர் / ஆணையாளர் அவர்கள் மூலமாக இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சகத்துறை அண்ணா சாலை, சென்னை – 2க்கு கடிதம் அனுப்பப்பட்டது.

கடந்த ஆறு மாதத்திற்கு மேல் பதில் வராத சூழ்நிலையில் மீண்டும் இயக்குநர் எழுதுபொருள் மற்றும் அச்சகத்துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பிறகு 11.08.2014 அன்று இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சகத்துறை அவர்கள் முதன்மை செயலர் / ஆணையாளர் அவர்களுக்கு அரசு அச்சகத்தில் தற்போது கடைபிடிக்கும் நெறிமுறைகள் பற்றிய விவரங்களை எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டது. அக்கடிதத்தில் நிதிநிலை அறிக்கை மற்றும் தேர்தல் நேரங்களில் அதிகப்படியான நேரம் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறித்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. அரசு அச்சகத்தில் சாதாரண நாட்களில் பணியாளர்கள், கூடுதல் நேரம் பணி செய்ய நேர்ந்தால் அப்பணியாளர்களுக்கு ஈடு செய்யும் விடுப்பு அளிக்கப்படுகிறது.
2. பட்ஜெட் பணிக்கான வரவு–செலவு ஆவணம் அச்சிடும் நேரத்தில் அப்பணிக்காக ஈடுபடும் பணியாளர்களுக்கு ரூ.60/– வீதம் 10 நாட்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும் நிதிநிலை அறிக்கை தொடர்பான ஆவணங்கள் உள்ளிருப்பு காலத்தில் அச்சிடும்போது பணியார்களுக்கு மூன்று நாட்களுக்கான சிறப்புப்படியாக ரூ.225/– மற்றும் மூன்று வேளைக்கான உணவு மற்றும் சிற்றுண்டிக்காக ரூ.350/– வழங்கப்படுகிறது.
3. இரட்டிப்பு நேரதில் வழங்கப்படும் ஊதியம் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக நிறுத்தப்பட்டுள்ளது. புத்துணச்சிப்படியாக தேநீர்படி ரூ.200/– அனைத்து தொழில்நுட்ப பணியாளர்களுக்கும் கீழ்நிலை மேல்நிலை என்றில்லாமல் அனைவருக்கும் ஒரே மாதிரியாக வழங்கப்படுகிறது.

மேற்கண்ட, அரசு மைய அச்சகத்தில் பட்ஜெட் மற்றும் தேர்தல் நேரங்களில் அதிகப்படியான நேரத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் போல, சென்னை மாநகராட்சி இயந்திர பொறியியல் துறை அச்சகத்தில் பட்ஜெட் மற்றும் தேர்தல் நேரங்களில் அதிகப்படியான நேரம் பணிபுரியும் பணியாளர்களுக்கு, அரசு அச்சகத்தில் வழங்கப்படும் சலுகைகள் வழங்கலாம் எனவும் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, தமிழ்நாடு அரசு பணியாளர்கள் அதிகப்படியான நேரம் வேலை செய்வதற்கு வழங்கப்படும் சலுகைகள் சென்னை மாநகராட்சி அச்சகத்தில் நடைமுறைப்படுத்தலாம் என கருத்து தெரிவித்துகொள்ளப்படுகிறது.

எனவே,

அ) 1999–2000ல் (பத்தி எண்.55) மிகை நேரப்படிக்கான ஊதியம் ரூ.24,948/– உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் மறுப்பிற்கு விலக்களிக்க ஆணை வேண்டியும்,

ஆ) அரசு அச்சகத்தில் சாதாரண நாட்களில் பணியாளர்கள், கூடுதல் நேரம் பணி செய்ய நேர்ந்தால் அப்பணியாளர்களுக்கு ஈடு செய்யும் விடுப்பு அளிப்பது போல் மாநகராட்சி அச்சகத்தில் வழங்கவும்,

இ) பட்ஜெட் பணிக்கான வரவு–செலவு ஆவணம் அச்சிடும் நேரத்தில் அப்பணிக்காக ஈடுபடும் பணியாளர்களுக்கு ரூ.60/– வீதம் 10 நாட்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும் நிதிநிலை அறிக்கை தொடர்பான ஆவணங்கள் உள்ளிருப்பு காலத்தில் அச்சிடும் போது பணியாளர்களுக்கு கடைசி நாட்களுக்கான சிறப்புப்படியாக ரூ.225/– மற்றும் மூன்று வேலைக்கான உணவு மற்றும் சிற்றுண்டிக்காக ரூ.350/– அரசு அச்சகத்தில் வழங்குவதுபோல மாநகராட்சி அச்சகத்தில் வழங்கவும்,

ஈ) புத்துணர்ச்சிப்படியாக தேநீர்படி ரூ.200/– அனைத்து தொழில்நுட்ப பணியாளர்களுக்கு கீழ்நிலை மேல்நிலை என்றில்லாமல் அனைவருக்கும் ஒரே மாதிரியாக வழங்வும்,

மேற்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“20.02.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.28/2015 நாள் 20.02.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்தரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.02.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.37/2015, நாள்.23.02.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.DA-3/136/2015</u>**

**<u>முதன்மைச்செயலர்/ஆணையர் அவர்களின்09.02.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.57/2015 **பொருள் எண்.07**

**<u>சென்னை மாநகராட்சி–நிலம் மற்றும் உடைமைத்துறை–திருவல்லிக்கேணி நகர்புற கூட்டுறவு சங்கம் நியாய விலை கடைகளுக்கு மண்டலம்–9 ,பகுதி–26, கோட்டம் 117 தாமஸ் ரோடு பல்நோக்கு கூடம் இடம் ஒதுக்கீடு செய்ய அனுமதி</u>**

12.11.2014 நாளிட்ட திருவல்லிக்கேணி நகர்புற கூட்டுறவு சங்கம், மேலாண்மை இயக்குநர் கூடுதல் பதிவாளரின் கடிதத்தில் டி.யு.சி.எஸ், தி.நகர் போக் ரோட்டில் ஒரே கட்டிடத்தில் மூன்று நியாய விலைக் கடைகள் இயங்கி வருவதாகவும் இதனால் குடிமைப் பொருட்கள் விநியோகிப்பது மிகவும் சிரமமாக உள்ளதாகவும் சென்னை மாநகராட்சி மூலம் தாமஸ் ரோடு பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கூடத்தில் ஒரு கடையினை ஒதுக்கீடு செய்து தர கோரியுள்ளார்.

முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்களின் ஆணையில் மாநகராட்சி கட்டிடங்களை முதல் முறையாக வாடகைக்கு விடுவதற்கு வருவாய் துறை மூலமாக முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்களிடம் ஒப்புதல் பெறும்படி ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி வருவாய்த்துறை , மண்டலம்–9 மூலமாக மாமன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

மண்டலம்–9–ல் வார்டு குழுவின் தீர்மானத்தில் சென்னை மாநகராட்சியில் தாமஸ் ரோட்டில் புதிய கட்டிடத்தில் டி.யு.சி.எஸ் கடை அமைக்க ஒதுக்கீடு செய்திடலாம் என ஒப்புதல் பெறப்பட்டது. பின்னர் வாடகை நிர்ணயம் செய்ய உதவி வருவாய் அலுவலர் மண்டலம்–9 அவர்களின் கருத்துரை பெறப்பட்டது. அதில் அவர் பல்நோக்கு கூட கட்டிடத்திற்கு வரி மதிப்பீட்டாளர் 11.12.2014 அன்று ஆய்வு செய்து அப்பகுதியில் ஒரு சதுரடிக்கு ரூ.5/– (ரூபாய் ஐந்து மட்டும்) வாடகையாக வசூலிக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

எனவே, மண்டலம்–9, வார்டு–117, தாமஸ் சாலையில் 8.50மீX4.50மீ மொத்த சதுர அடி 412 பரப்பளவில் கட்டப்பட்ட பல்நோக்கு கூட கட்டிடத்தில் 412x5=ரூ.2,060/– (ரூபாய் இரண்டாயிரத்து அறுபது மட்டும்) மாத வாடகை மற்றும் 12 மாத வாடகை முன்பணம் செலுத்த வேண்டும் என்றும், கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்ய இருப்பின் அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு டி.யு.சி.எஸ். நிறுவனத்திற்கு நியாய விலை கடை நடத்துவதற்கு ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘23.02.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். 36/2015, நாள்.23.02.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.அ.சொ1/4192/07</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.02.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.58/2015 **பொருள் எண்.08**

**<u>நிலம் மற்றும் உடைமைத்துறை– விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்குநர் அலுவலகம் கட்டுவதற்கு சென்னை மாநகராட்சி காலியிடம் வழங்க மன்றத்தின் ஒப்புதலுடன் முன்மொழிவுகள் அரசிற்கு அனுப்பப் பட்டன– அரசு ஆணை பெறப்பட்டது – ஏற்கனவே பெறப்பட்ட மன்ற தீர்மானம் / அரசாணை ரத்து செய்ய மன்றத்தின் அனுமதி</u>**

மன்றத்தீர்மானம் எண்.103/2008 நாள்.29.02.2008–ன் படி மண்டலம்–8, வார்டு–102 கஜபதி நாயுடு தெரு, அமைந்தகரை வட்டம் (ம) கிராமம், நகர புல எண்கள். 18,19 (ம) 20 பிளாக் எண்.6, 4–கிரவுண்டு 1205 ச.அ. நிலத்தினை விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு துறை அலுவலக கட்டிடம் கட்ட அன்றைய சந்தை விலை அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்து குத்தகைக்கு இடம் ஒதுக்கீடு செய்ய மன்றம் அனுமதி அளித்துள்ளது.

மன்றத்தீர்மானம் எண்.159/2008 நாள்.03.05.2008–ன் படி (ம) அரசாணை நிலை எண்.47, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.1) துறை, நாள்.24.03.2008–ல் அனுமதி வழங்கியபடி சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், அமைந்தகரை கிராமம், கஜபதி தெருவில் நகர புல எண்கள்.= 18,19 (ம) 20 ல் உள்ள 4 மனை மற்றும் 1205 ச.அடி நிலத்தை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை மேற்படி நிலத்தை அலுவலகம் கட்டுவதற்கு மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி அரசாணை (நிலை) எண்.460 வருவாய் (நிமு2) துறை நாள்.04.06.1998–ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள குத்தகைத்தொகை அடிப்படையிலும் மற்றும் நடைமுறையிலுள்ள அரசு விதிமுறைகளின் படியும் 30 ஆண்டுகால குத்தகைக்கு விடுவதற்கும் இந்நிகழ்வில் அவசர அவசியம் கருதி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை மேற்படி நிலத்தில் விதிமுறைகளை அனுசரித்து அலுவலகம் கட்டுவதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியுடன் முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விழிப்பு (ம) ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறை இயக்குநரின் 15.12.2011 நாளிட்ட கடிதத்தில் கஜபதி நாயுடு தெருவில் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான புல எண். 18, 19 (ம) 20–ல் உள்ள 4 1/2 மனை நிலம் ஊழல் தடுப்பு (ம) கண்காணிப்புத்துறை அலுவலகக் கட்டிடம் கட்ட சென்னை மாநகராட்சியால் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும் தற்போது மேற்படி நிலம் அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு உகந்தது அல்ல என்பதால் நிலம் எடுப்பு பெறுவது கைவிடப்பட்டுள்ளதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து மேற்படி நில ஒதுக்கீடு ரத்து செய்தற்கான ஆணைகள் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் முதன்மைச் செயலர் / ஆணையரின் 23.12.2014 ம் நாளிட்ட ஆணையில் ஏற்கனவே மன்ற தீர்மானம் எண்.103/2008, நாள்.29.02.2008–ல் மண்டலம்–8, வார்டு–102 கஜபதி நாயுடு தெரு, அமைந்தகரை வட்டம் (ம) கிராமம், நகர புல எண்கள். 18,19 (ம) 20 பிளாக் எண்.6,4 கிரவுண்டு 1205 ச.அ. நிலத்தினை விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு துறை அலுவலக கட்டிடம் கட்ட அன்றைய சந்தை விலை அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்து குத்தகைக்கு இடம் ஒதுக்கீடு செய்ய மன்றம் அனுமதி அளித்துள்ளது. இம்மன்றத்தீர்மானத்தின் படி மேற்படி இடத்தினை விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு துறை அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு குத்தகை ஒதுக்கீடு செய்வதற்கு கடிதம் அரசிற்கு அனுப்பப்பட்டது என்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு துறை மேற்படி இடத்தை பெறுவதற்கான முன்னேற்றம் (ம) கடிதத்தரப்பு ஏதும் இல்லாததால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள மேற்படி மன்றத்தீர்மானம் ரத்து செய்து நிலத்தை சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக்கொள்வதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே, சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், அமைந்தகரை கிராமம், கஜபதி தெருவில் நகர புல எண்கள்.= 18,19 (ம) 20 ல் உள்ள 4 மனை மற்றும் 1205 ச.அடி நிலத்தில் விழிப்பு (ம) ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறை அலுவலகம் கட்ட குத்தகைக்கு இட ஒதுக்கீடு செய்வதற்காக மன்றத்தின் அனுமதி பெற்ற மன்றத் தீர்மானம் எண்.103/2008 நாள்.29.02.2008–யை மற்றும் மேற்படி நிலத்தில் விதிமுறைகளை அனுசரித்து அலுவலகம் கட்டுவதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியுடன் முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ள மன்றத்தீர்மானம் எண்.159/2008–யையும் ரத்து செய்து மேற்படி நிலத்தை சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் பிறப்பிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.47 நாள்.24.03.2008–யையும் ரத்து செய்து ஆணைகள் பிறப்பிக்குமாறு அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்புவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.02.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.34/2015, நாள்.23.02.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/0635/2014</u>**

**<u>முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 19.02.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.59/2015 **பொருள் எண்.09**

**<u>ஒப்பம் – மழைநீர் வடிகால் துறை – மண்டலம்–6, வார்டு–75ல் ஒப்பம் பெறப்பட்டது – திருவாளர்கள் தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு பணியாணை அளித்தற்கு பின்னேற்பு அனுமதி</u>**

மண்டலம்–6, வார்டு–75ல் பிரிக்ளின் சாலை எஸ்.எஸ்.புரத்திலிருந்து ஓட்டேரி நல்லா வரை 900மிமீ க்கு 900மிமீ அளவுள்ள ஆர்.சி.சி. பெட்டக வடிவ மற்றும் Precast மழைநீர் வடிகால்வாய் புதியதாக கட்டும் பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 25.07.2014 அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டன. இவற்றில் திருவாளர்கள் டி.எம்.சுப்புரமணியம் அண்டு கோ அவர்கள் இரு உறை ஒப்பமான இப்பணிக்கு தொழில் நுட்ப ஒப்பத்தில் 50 சதவீதம் பணி முடித்ததற்கான சான்றிதழ், பணித் தொகையில் 1.5 கூடுதலாக நிதி கையிருப்பு சான்றிதழ் மற்றும் ஆவண தகுதி சான்றிதழ் இணைக்கப்படாததால் இப்பணிக்கு நிதி ஆவணத்திற்கு தகுதியற்றவர் ஆகிறார். எனவே, குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் அளித்த ஒப்ப தொகை ரூ.1,22,75,706.00பை ஆகும். 2013–2014ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.1,38,01,996.68யுடன் ஒப்பிடுகையில் இவ்வொப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை (–)11.06% குறைவாகும். எனவே, 14.08.2014 அன்று ஒப்பந்ததாரருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் தான் ஒப்ப விழுக்காட்டை குறைக்க சம்மதம் தெரிவிக்கவில்லை. இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.1,22,75,706.00 மற்றும் ஒப்ப சதவீதம் (–) 11.06% குறைவு ஆகும். மேலும் 31.05.2014 நாளிட்ட சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 22.75% குறைவாக உள்ளது. 05.09.2014 அன்று நடைபெற்ற உயர் மட்ட ஒப்ப கூர்ந்தாய்வுகுழுவிற்கு சமர்பிக்கப்பட்டதில் தீர்மான எண்.2/2014–2015ன்படி இவ்ஒப்பத்தினை ஏற்க பரிந்துரைக்கப்பட்டது.

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் திருவாளர்கள் தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் அளித்த ஒப்ப விழுக்காடு 2013–2014ம் ஆண்டின் விலை விகிதத்தின் படி (–) 11.06% குறைவு என்பதால் இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள் தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு ரூ.1,22,75,706.00பை மதிப்பிற்கு பணிகள் அளிக்கவும் மற்றும் பொது மக்களின் நலனிற்காக அவசர அவசியம் கருதி விரைவாக இப்பணி முடிக்கவேண்டியிருப்பதினால் மன்றத்தின் பின்னேற்பு ஆணையை எதிர்நோக்கி ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கியதற்கும் ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் (2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“20.02.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.31/2015 நாள்.20.02.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்தரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.02.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.40/2015, நாள்.23.02.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.7.ந.க.எண்.இ1/21057/2013**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 19.2.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.60/2015 **பொருள் எண்.10**

**சென்னை மாநகராட்சி – மண்டலம் – 7 (அம்பத்தூர்) – சென்னை பெருநகர வளர்ச்சித்திட்டம் ( Chennai Megacity Development Mission) சென்னை மாநகர விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – (Grid III) சிப்பம் –6ல் ஒப்பந்ததாரர். திருவாளர்கள். S.P.L Infrastructures(Pvt)Ltd அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. பணி மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. சேமிப்பு தொகையில் மறுவகைப்பாடு ஒப்புதல் அதே ஒப்பந்தகாரருக்கு பணியினை செய்ய அனுமதி**

சென்னை மாநகராட்சி மற்றும் விரிவாக்கப்பட்டப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதற்கிணங்க இச்சிறப்பு திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், நடைபாதைகள், மற்றும் தெருவிளக்குகள் ஆகிய அடிப்படை வசதிகள் மேம்படுத்துவதற்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன் அடிப்பயைில் சென்னை மாநகராட்சி மண்டலம்–7 (அம்பத்தூர்)ல் 8 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை கோரப்பட்டது.இதனை தொடர்ந்து, இப்பணியினை சிப்பம்–6ஐ, மதிப்பீடு தொகை ரூ. 200291852.57/–ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இப்பணிக்கு இரு ஒப்பங்கள் பெறப்பட்டது. இதில், குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள். **S.P.L Infrastructures(Pvt)Ltd** நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி ஆனது மதிப்பீட்டை விட (+) 11.04% கூடுதலாக கொடுத்துள்ளதை தொடர்ந்து மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு செய்யப்பட்டு மதிப்பீட்டை விட கூடுதலாக (+) 10.00 % ஒப்பத்தொகை ரூ. 220321037.76/– க்கு மன்ற தீர்மாணம் எண்.78/2014 ன்படி ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்ததாரர் திருவாளர்கள். **S.P.L Infrastructures(Pvt)Ltd** பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இத்தருணத்தில் சில சாலைகளில் சாலையின் இருபுறமும் ஒழுங்குப்படுத்துதல் (Alignment) மற்றும் நேர் கோட்டில் சீர் அகலம் கொண்ட சாலை அமைக்கும் போது ஏற்பட்ட அளவு குறைவினால், சேமிப்பு தொகையாக ரூ. 38203050/–ரூபாய் மூன்று கோடியே என்பத்தி இரண்டு லட்சத்து மூவாயிரத்து ஐம்பது மட்டும்) உள்ளது.

இந்நிலையில் பொதுமக்கள், வேண்டுதலின்படி, அவசியம் அவசரம் கருதியும் போக்குவரத்தின் நலன் கருதியும் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்–III சேமிப்பு தொகையிலிருந்து புதிதாக சாலைகள் அமைக்க எடுக்கப்பட்ட சாலைகள், ஏற்கனவே சிப்பம்–6ல் எடுக்கப்பட்ட சாலைகள் அருகாமையில் உள்ளது. அப்பணிக்கு அதே சி.பி.ஆர். (CBR) எண் உள்ளதால், முந்தைய வடிவமைப்பு இப்பணிகளுக்கும் பொருந்தும். மேலும் புதிதாக எடுக்கப்பட்டுள்ள சாலையின் பரப்பளவு ஒப்பீடு செய்யப்பட்டதில், அதன் பரப்பளவு 8091 ச.மீ ஆக உள்ளது. எனவே, அதே ஒப்பந்தாரர் மூலம் இம்மாறுப்பாட்டினால் ஏற்பட்டுள்ள பணிகளை செய்யலாமென கருதப்படுகிறது. இந்நிலையில் ஒப்பந்தாரர் திருவாளர்கள்.**S.P.L Infrastructures (Pvt)Ltd** அவர்களின் சிப்பம் 6ல் அளித்துள்ள ஒப்ப சதவீதத்தின் படி பணிகளை மேற்கொள்ள இசைவு கடிதம் அளித்துள்ளார்.

மேற்படி ஒப்பங்கள் இப்பணி இனங்களின் மொத்த அளவுகளுக்காக தயார் செய்யப்பட்டு ஒப்பம் கோரப்பட்டுள்ளதால் முழுமையாக இப்பணியினை மேற்கொண்டு முடிக்க வேண்டியது அவசியமாகிறது.

கீழ்கண்ட சாலைகளில் சேமிப்பு தொகையில் பணிகளை மேற்கொள்வதற்கு பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | கோட்ட எண் | புதியதாக மேற்கொள்ளப்படவிருக்கும் சாலைகளின் பெயர் | பரப்பளவு ச.மீ | தொகை ரூபாய் (லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 90 | வெல்கம் காலனி D Sector 6வது தெரு | 810 | 15.69 |
| 2 | 90 | 6வது அவின்யூ | 1980 | 38.48 |
| 3 | 90 | 7வது அவின்யூ | 1980 | 38.48 |
| 4 | 90 | வெல்கம் காலனி 1வது தெரு | 1540 | 30.38 |
| 5 | 90 | வெல்கம் காலனி 2வது தெரு | 910 | 17.94 |
| 6 | 90 | வெல்கம் காலனி 3வது தெரு | 871 | 13.65 |
| 7 | 90 | 6வது, 7வது அவின்யூ மழைநீர் கால்வாய் | 886 | 128.37 |
| 8 | 91 | ஜஸ்வந்த் நகர் 1வது பிரதான சாலை மழைநீர் கால்வாய் | 315 | 47.28 |
| 9 | 91 | ஜஸ்வந்த் நகர் 2வது பிரதான சாலை மழைநீர் கால்வாய் | 315 | 47.28 |
| மொத்தம் ரூ.381 .35லட்சம் | | | | |

மேற்கண்ட பணிகளை பொது மக்கள் நலன் கருதி பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், ஏற்கனவே, சிப்பம் 6ன் பணியை செய்து வந்த ஒப்பந்தாரரான திருவாளர்கள். **S.P.L Infrastructures (Pvt) Ltd** அவர்களுக்கு சிப்பம் 6ல் செய்யப்பட்டுள்ள பணிகளில் சேமிப்பு தொகை உள்ளதால், அதே ஒப்பந்ததாரரான திருவாளர்கள். **S.P.L Infrastructures (Pvt) Ltd** அவர்களை கொண்டு பணிகளை மேற்கொள்ளவும், அதே ஒப்பந்த சதவீதத்தின்படி 25 சதவீதத்திற்கு மிகாமலும், ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்ப உடன்படிக்கையின்படி பணி மேற்கொள்ளவும், இப்பணிகளை Project Sanction Committee ஒப்புதல் பெற்று செய்திடவும் .

எனவே, மேற்கண்ட பணிக்கு பணியனை வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“20.02.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.33/2015 நாள்.20.02.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்தரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.02.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.41 /2015, நாள்.23.02.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/2163/2014**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 19.02.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.61/2015 **பொருள் எண்.11**

**ஒப்பம் – மழைநீர் வடிகால் துறை –மண்டலம்–8, வார்டு – 107ல் ஒப்பம் பெறப்பட்டது – திருவாளர்கள் தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு ஒப்பம் அளிக்க அனுமதி**

மண்டலம் – 8, வார்டு – 107ல் பச்சையப்பன் கல்லூரி, விடுதி சாலை, பச்சையப்பன் கல்லூரி விளையாட்டு மைதானம் மற்றும் வெங்கடாசலபதி தெருவில் ஓசான் குளம் முதல் கூவம் ஆறு வரை (பகுதி–2) 600மிமீ க்கு 750மிமீ கால்வாயை இடித்து மீண்டும் 900மிமீ க்கு 1750மிமீ அளவுள்ள ஆர்.சி.சி. பெட்டக வடிவ மற்றும் பிரிகஸ்ட் மழைநீர் வடிகால்வாய் புதியதாக கட்டும் பணிக்காக 24.10.2014 அன்று ஒப்பங்கள் கோரப்பட்டதில் ஐந்து ஒப்பங்கள் பெறப்பட்டது. அதில் தொழில்நுட்ப ஒப்பங்கள் பெறப்பட்டதில் நான்கு ஒப்பந்ததாரர்கள் தகுதி பெற்றவர் ஆகிறார்கள். இவ் ஒப்பந்ததாரர்களில் நிதி ஆவண ஒப்பம் திறக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்ததாரான திருவாளர்கள் தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் ரூ.1,05,15,234.36பை குறைவாக அளித்துள்ளனர். 2013–2014ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.1,25,50,157.70யுடன் ஒப்பிடுகையில் இவ்வொப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத் சதவீதம் (–) 16.21% குறைவு ஆகும். எனவே, 20.11.2014 அன்று ஒப்பந்ததாரருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் திருவாளர்கள் தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் மேலும் விலைகுறைப்பிற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை. 02.12.2014 அன்று நடைபெற்ற உயர் மட்ட ஒப்ப கூர்ந்தாய்வு குழுவிற்குசமர்பிக்கப்பட்டதில் தீர்மான எண்.1/2014–2015ன்படி இவ் ஒப்பத்தினை ஏற்க பரிந்துரைக்கப்பட்டது.

இதன்படி திருவாளர்கள் தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.1,05,15,234.36பை மற்றும் ஒப்ப சதவீதம் (–) 16.21% குறைவு ஆகும். மேலும் 31.05.2014 நாளிட்ட சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 39.98% குறைவாக உள்ளது.

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் திருவாளர்கள் தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் அளித்த ஒப்ப விழுக்காடு 2013 – 2014ம் ஆண்டின் விலை விகிதத்தின் படி (–) 16.21% குறைவு என்பதால் இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள் தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு ரூ.1,05,15,234.36பை மதிப்பிற்கு பணிகள் அளிக்க ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் (2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “20.02.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.30/2015 நாள்.20.02.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்தரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.
>
> “23.02.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.39/2015, நாள் 23.02.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**மா.கு.ந.(ம).ம.கு.ந.எண்.எப்1/511 /2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.02.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.62/2015 **பொருள் எண்.12**

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

டாக்டர். N. செல்வபாலினி, மருத்துவ அலுவலர் அண்ணா நகர் மண்டலம் அவர்கள் மருத்துவ அலுவலராக வேலூா் மாநகராட்சியில் 28.10.1988ல் பணியில் சேர்ந்து பின்னர் சென்னை மாநகராட்சிக்கு ஒரு வழி பணி மாறுதல் செய்யப்பட்டு 31.07.1989 முதல் சென்னை மாநகராட்சி , மாவட்ட குடும்ப நலத்துறையில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். இவருடைய பிறந்த தேதி 02.02.1957 வயது முதிர்வு ஓய்வு நாள் 28.02.2015.

இவர் கீழ்கண்டுள்ளபடி பணியில் சேர்ந்து பணிவரன்முறை (ம) தகுதிக்காண் பருவம் முடித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. மருத்துவ அலுவலர் | மன்ற தீர்மான எண் 198/2002 நாள் 21.05.2002ன் படி 28.10.1988 முதல் பணிவரண்முறைபடுத்தப்பட்டுள்ளது. | மன்ற தீர்மான எண் 564/2003 நாள் 20.10.2003ன் படி 29.10.1990 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. |

டாக்டர் .N. செல்வபாலினி, மருத்துவ அலுவலர் அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 07.01.2015 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் துறையில் கடந்த 5 ஆண்டுகளில் குற்றவியல்/ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை என சான்றளிக்கப்படுகிறது.

அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை. சென்னை மாநகராட்சி, குடியிருப்பு R.M.O Quarters உள்ளிருப்பு குடியிருப்பு ஒதுக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு சங்கக் கடன் நிலுவை ஏதும் இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது.

தனியருக்கு R.M.O Quarters உள்ளிருப்பு குடியிருப்பு தனக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தனது கணவர் காலில் அறுவை சிகிச்சை செய்திருப்பதால் ஏப்ரல் மாதம் முடிவில் காலி செய்து ஒப்படைத்துவிடுகிறேன் என்றும் மார்ச் ஏப்ரல் ஆகிய இரண்டு மாதத்திற்கான வாடகை தொகையை செலுத்திவிடுகிறேன் எனவும் தான் ஓய்வு பெறும் நாள் வரை தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ பொறுப்பாக்கி நிதி இழப்பீடு குறித்து தெரியவரின் தனக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன்/ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்து கொள்ள துறைதலைவர் முன்னிலையில் ரூ 20 முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

தனியர் பணிபுரிந்த துறை/மண்டலங்களில் இருந்து தனியர் மீது தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் இழப்பீடுகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் இவருடைய பதவி வகுப்பு 2 என்பதால் இவரை பணியிலிருந்து விடுவிக்க மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது.

எனவே டாக்டர் .N. செல்வபாலினி, மருத்துவ அலுவலர் அவர்களை நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு நீண்ட கால முன் பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு தனியரை 28.02.2015அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ.DA-1/4030/2014**
**முதன்மைச்செயலர் / ஆணையர் அவர்களின் 28.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.63/2015 **பொருள் எண்.13**

**தானப்பத்திரம்**

பெரியமேட் மசூதி, மண்டலம்–5, வார்டு–58க்கு உட்பட்ட சைடன்ஹாம்ஸ் சாலை, கதவு எண்.59/61–ல் அமைந்துள்ள வேப்பேரி கிராமம், பிளாக் எண்–10, வட்டாட்சியர், கோட்டை–தண்டையார்பேட்டை தாலுக்கா அவர்கள் 27.03.1993 நாளில் வழங்கப்பட்ட பட்டாவின்படி R.S.No.288/1–ல் அலுவலகம் மற்றும் குடியிருப்புக் கட்டிடம் கட்டுவதற்காக திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி கோரி உரிமையாளர் விண்ணப்பித்துள்ளார். அதில் சென்னை நகர வளர்ச்சி குழுமம் மேம்படுத்தும் வரைப்படத்தின் (D.D.P) சைடன்ஹாம்ஸ் சாலை, 24 மீட்டர் அகலத்திற்கு சாலை விரிவுப்படுத்தும் உத்தேசம் உள்ள காரணத்தினால் விண்ணப்பதாரரின் மனையின் நீளம் 7.01 மீ மற்றும் அகலம் 1.00 மீட்டராக மொத்தம் 7.01 ச.மீ. பரப்பளவு நிலத்தினை சாலை விரிவாக்கத்திற்காக சென்னை மாநகராட்சியில் ஒப்படைக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து விண்ணப்பதாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டு விண்ணப்பதாரர் அவர்கள் மேற்படி நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்திட ஒப்புதல் அளித்துள்ளார்.

சாலை விரிவாக்கத்திற்காக மேற்படி நிலத்தினை தானப்பத்திரம் மூலமாக சென்னை மாநகராட்சி பெற்று கொள்ள 5–வது வார்டுக் குழுவின் பரிந்துரை தீர்மான எண்.263, நாள்: 20.10.2014 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட தானப் பத்திரத்தை ஆய்வு செய்ததில் இந்நிலத்திற்கு விடுவரி (Quit Rent) நாளது தேதி வரையில் வட்டாட்சியர் அலுவலகத்தில் செலுத்தியதற்கான இரசீது இணைக்கப்படவில்லை. மேலும் மேற்படி இடத்தில் சாலை விரிவாக்கம் செய்யும் போது கூடுதல் இடம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் மற்றும் மாநகராட்சியின் அனைத்து நிபந்தனைகளுக்கு சம்மதிக்கும் பட்சத்தில் இது குறித்து பரிசீலிக்கலாம் என தனி வட்டாட்சியர்/நிமஉது அவர்களால் 20.11.2014 நாளிட்ட புலத்தணிக்கை குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்ட புலத்தணிக்கையில் தெரிவித்துள்ளவாறு விண்ணப்பதாரரிடமிருந்து இந்நிலத்திற்கு விடுவரி (Quit Rent) நாளது தேதி வரையில் கட்டியதற்கான இரசீது பெறப்பட்டது.

எனவே, மண்டலம்–5, வார்டு–58, சைடன்ஹாம்ஸ் சாலை, கதவு எண்.59/61–ல் அமைந்துள்ள வேப்பேரி கிராமம், பிளாக் எண்–10, மறு நில அளவை எண்–288/1ல் கட்டிட அனுமதி கோரிய இடத்தில் சாலை விரிவாக்கத்திற்கான 7.01 ச.மீ. பரப்பளவு இடத்தினை தானப்பத்திரம் மூலம் பெறுவதற்கு நிலைக்குழு (நகரமைப்பு)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டம் 16.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண்.04/2015–ன்படி நிலைக்குழு (நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நி.ம.உ.து.ந.க.எண். DA-1(எல்.இ8)/2383/2014**
**முதன்மைச்செயலர் / ஆணையர் அவர்களின் 28.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.64/2015 **பொருள் எண்.14**

**தானப் பத்திரம்**

திரு. பி.எஸ்.முகமதுஉசேன் (P.O.A) அவர்கள் வார்டு–110, பொன்னங்கிபுரம் 2வது தெரு, நுங்கம்பாக்கம், சென்னை–34, கதவு எண்.10, என்ற இடத்திற்கு கட்டிட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மண்டலம்–9ல் விண்ணப்பித்துள்ளார். அதில் சென்னை பெரு நகர வளர்ச்சி குழுமம் விரிவான மேம்படுத்தும் வரைபடத்தின்படி (DDP) மேற்படி இடத்தின் முன் பகுதியில் நுங்கம்பாக்கம் சாலையில் 25.50 மீட்டர் அகலத்திலிருந்து 27.00 மீட்டர் அகலத்திற்கு சாலை விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். இதில் மனையின் உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக 0.75 மீ. அகலத்திற்கு 6.86 ச.மீ. பரப்பளவு கொண்ட நிலத்தினை தானமாக வழங்க தானப்பத்திரம் அளித்துள்ளார். தானப்பத்திரம் மூலமாக பெற்றுக் கொள்ள மண்டலம்–9ல் வார்டு குழு மூலம் பரிந்துரை அளித்துள்ளது.

சென்னை மாவட்டம், எழும்பூர் வட்டம், மண்டலம்–9, பகுதி–24, கோட்டம்–110, நுங்கம்பாக்கம் பொன்னங்கிபுரம் இரண்டாவது தெருவில் நகர நிலஅளவை எண்.436/12 பரப்பு–00.2030 ச.அடி திருமதி.ஆயிஷா அவர்கள் த/பெ.P.S.M.அபிபுல்லாகான் பெயரில் தாக்கலாகியுள்ளது. மேற்படி திருமதி. ஆயிஷா என்பவர் Serial No.145/2008-ல் Adjusted பவர் பத்திரம் மூலம் திரு.பி.எஸ்.முகம்மது உசேன் s/o.P.S.S.சுல்தான் அப்துல் காதர் என்பவருக்கு சௌகார்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் 18.06.2008–ல் பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர் சாலை விரிவாக்கத்திற்காக சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் விரிவான மேம்படுத்தும் வரைப்படத்தின்படி (DDP) மேற்படி புல எண்ணில் 0.75 மீட்டர் அகலமும் 9.14 நீளத்திற்கும் மனையின் முன்பக்கத்தில் நுங்கம்பாக்கம் சாலை ஒட்டினாற்போல் 6.86 ச.மீ. பரப்பு நிலத்தினை தானமாக கொடுக்க சம்மதம் தெரிவித்துள்ளதின் அடிப்படையில் 9–வது மண்டல வார்டு குழு தீர்மானம் எண்.700/2013 நாள்.18/11/2013–ல் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தனிவட்டாசியர் அவர்கள் 28.11.2014அன்று புல தணிக்கை செய்து கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார். சென்னை மாநகராட்சியில் உள்ள சாலைகள் துறையில் இது குறித்து நேரில் ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில் 25.50 மீ. எனவும் தற்போது நுங்கம்பாக்கம் சாலையில் 25.50 மீட்டரின் இருபக்கமும் சாலை விரிவாக்கத்திற்கு 0.75 மீட்டம் வீதம் மொத்தம் 27.00 மீ சாலையாக விரிவாக்கம் செய்யப்படும் எனவும் பொறியாளரால் தெரிவிக்கப்பட்டது. புலத்தின் முன் பக்கத்தில் நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, கௌடியமடம் சாலையில், வடக்கு புறத்தில் கடையும், மேற்கு புறத்தில் வீடும், தெற்கு புறத்தில் நுங்கம்பாக்கம் சாலையிலிருந்து கௌடியமடம் சாலை வழியாக பொன்னங்கிபுரம் இரண்டாவது தெருவிற்கு செல்வதற்கு தெரு 18 அடி அகலம் உள்ளது. மேற்படி நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை எதிர்காலத்தில் விரிவாக்கம் செய்யும் போது சென்னை பெரு நகர வளர்ச்சி குழுமத்தின் கட்டிடம் அனுமதி நிபந்தனை அடிப்படையில் கட்டிடம் கட்டும் போது முன்புறம் கூடுதலாக இடம் காலியாக விட வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கலாம். மேற்படி நகர நில அளவை எண்.436/12 க்கான (Quit Rent – விடு வரி – உரிமைத் துறப்பு வரி) ரூ.10/– வீதம் பி.எஸ்.முகமது உசேன் என்பவர் 1381–ம் பசலிருந்து 1424 பசலி வரை ரூ.490/– யை 23.09.2014 அன்று எழும்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் செலுத்தியுள்ளார்.

எனவே,

1. திரு.முகமது உசேன் (P.O.A) மூலம் இசைவு பெற்ற தான பத்திரம் மூலம் 6.86 ச.மீ. நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெறவும்,
2. தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப்பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனம் ரூ.1,05,000/–யை கட்டிட உரிமையாளரிடம் ''ஆணையர் சென்னை மாநகராட்சி'' என்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

3. கட்டிட உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ''வளர்ச்சி உரிமை சான்றிதழை'' சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(நகரமைப்பு)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டம் 16.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண்.02/2015—ன்படி நிலைக்குழு (நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ.DA-1/4176/2014**
**முதன்மைச்செயலர் / ஆணையர் அவர்களின் 28.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.65/2015 **பொருள் எண்.15**

**தானப்பத்திரம்**

திரு.டி.வெங்கடேசன், புதிய கதவு எண்.162/2, பழைய எண்.25/2, காளியம்மன் கோயில் தெரு, விருகம்பாக்கம், சென்னை–92 மனை எண்–76, சர்வே எண்–92/1 என்ற இடத்திற்கு வர்த்தக பயன்பாட்டிற்காக கட்டட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மண்டலம்–10ல் விண்ணப்பித்துள்ளார். அவர் கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தினை ஒட்டிய சாலை ''சென்னை பெருநகர வளர்ச்சி குழும திட்டம்–2ன்படி 24.00 மீ அகலம் உள்ள சாலையாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். இதில் மனையின் உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக 7.45 மீ நீளம் X(8.93 + 8.70/2) மீ அகலம் = 65.68 ச.மீ. பரப்பளவு நிலத்தினை தானப் பத்திரம் மூலம் சென்னை மாநகராட்சிக்கு தானமாக கொடுக்க இசைவு தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரர் வழங்கிய தானப் பத்திரத்தின் வரைவை 10–வது மண்டல வார்டு குழு பரிந்துரை செய்து (தீர்மானம் எண்.1157 நாள்: 19.12.2013) தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மேற்படி மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட தானப் பத்திரத்தை ஆய்வு செய்து திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு புதிய தானப் பத்திரம் கேட்டு பெறப்பட்டது.

எனவே, மண்டலம்–10, பகுதி–29, கோட்டம்–127, திரு.டி.வெங்கடேசன், புதிய கதவு எண்.162/2, பழைய எண்.25/2, காளியம்மன் கோயில் தெரு, விருகம்பாக்கம், சென்னை–92, மனை எண்–76, சர்வே எண்–92/1ல் கட்டிட அனுமதி கோரிய இடத்தில் சாலை விரிவாக்கத்திற்கான 65.68 ச.மீ. பரப்பளவு உள்ள இடத்தினை தானமாக பெறுவதற்கு நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டம் 16.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மானஎண்.05/2015–ன்படி நிலைக்குழு (நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ.DA-3/2308/2014</u>**
**<u>முதன்மைச்செயலர் / ஆணையர் அவர்களின் 28.01.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.66/2015 **பொருள் எண்.16**

**<u>தானப் பத்திரம்</u>**

மண்டலம்–15 வார்டுக் குழு தீர்மானத்தின்படி (தீர்மான எண்.823 நாள்.12.09.2013) சாலை விரிவாக்கத்திற்கு 1815 ச.மீ. நிலத்தினையும், திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலத்திற்கு தேவையான 530ச.மீ. நிலத்தினையும் திருமதி. லீலா ஸ்டெல்லா மற்றும் பலர் ஆகியோர்களிடமிருந்து தானபத்திரம் மூலம் பெற்றுக் கொள்வதற்கும் சாலை விரிவாக்கம் செய்வதற்கு தோராய அபிவிருத்தி கட்டணமாக ரூ.15,60,000/– மனுதாரரிடமிருந்து வசூலிப்பதற்கும் நிலைக்குழு நகரமைப்பு மூலமாக மாமன்றத்தின் அனுமதி பெற வார்டுக் குழு தீர்மானம் பெறப்பட்டது.

சென்னை மாநகராட்சி, மண்டலம் 15, வார்டு 196, ஈஞ்சம்பாக்கம் கிராமம், புல எண் 155, புஞ்சை வகைபாட்டில், 0.77.0 ஏர்ஸ் நிலத்தினை மனைப் பிரிவுகளாக பிரிக்க உத்தேசித்துள்ளனர். இம்மனை பிரிவில் 9 மீட்டர் அகலம், 201.67 மீட்டர் நீளத்தில் சாலையும், 530 ச.மீ. பரப்பளவுள்ள பூங்காவிற்கான திறந்தவெளி நிலத்தினை சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்க இசைவு தெரிவித்து அதற்குண்டான வரைவு தானப் பத்திரம் அளித்துள்ளனர். தானப் பத்திரத்தின் அடிப்படையில் மேற்படி புலத்தினை தனி வட்டாட்சியர் கள ஆய்வு மேற்கொண்டு ஆய்வறிக்கையில் மேற்படி புலம் கிராம கணக்குகளில் சோழிங்க நல்லூர் வட்டம், ஈஞ்சம்பாக்கம் கிராமம், புல எண் 155–ல், 0.77.0 ஏர்ஸ், புஞ்சை வகைப்பாட்டில் திருமதி லீலா ஸ்டெல்லா மற்றும் 2 நபர்கள் பெயரில் பதிவாகி உள்ளது. முழு புலமும் சுற்றுசுவர் எழுப்பப்பட்டு உள்ளே 150 தென்னை மரங்கள் உள்ளது எனவும், சாலைக்கான திறந்தவெளி நிலம் கிழக்கு பக்கமாகவும், பூங்காவிற்கான திறந்தவெளி நிலம் வடக்கு பக்கத்திலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது புலம் காலியாக உள்ளது. மேற்படி திறந்தவெளி நிலத்தின் பரப்பு வரைவு கொடை ஆவணத்தின் பரப்புடன் ஒன்றாக உள்ளது. திறந்தவெளி நிலமாக மாநகராட்சி வசம் எடுக்கலாம் என தனி வட்டாட்சியர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தனிவட்டாட்சியர் அவர்களின் ஆய்வறிக்கையின் அடிப்படையில் ஈஞ்சம்பாக்கம் கிராமம், புல எண் 155ல் மொத்த பரப்பான 7605 ச.மீட்டரில் 9 மீ அகலம் X 201.67 மீட்டர் நீளத்திற்கு சாலை மற்றும் பூங்காவிற்கான 530 ச.மீ. பரப்பளவு உள்ள திறந்தவெளி நிலத்தை தானமாக பெறுவதற்கு நிலைக்குழு (நகரமைப்பு)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “ஏற்கனவே நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டம் 16.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண்.03/2015ன்படி நிலைக்குழு (நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.2.ந.க.எண்.இ1/4357 /2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.2.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.67/2015 **பொருள் எண்.17**

**சென்னை மாநகராட்சி, மண்டலம்–2, பகுதி–5, வார்டு–21ல் உள்ள பழமையான சமூக நலக்கூடத்தை இடிப்பதற்கு அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–2, வார்டு–21ல் உள்ள எண்.112, டாக்டர் அம்பேத்கார் தெருவில் உள்ள 30 ஆண்டுகளுக்கு முன் சமூக நல கூடம் ஆஸ்பெஸ்டாஸ் சீட் மற்றும் கான்கீரிட் தளம் கொண்டுள்ளது. இக்கட்டிடத்தை இடித்து அப்புறபடுத்துவது அவசியம் மற்றும் அவசியமான செயலாகும். இக்கட்டிடங்கள் அப்போதைய மணலி நகராட்சியால் கட்டப்பட்டது. இதனுடைய தற்போதைய புத்தக மதிப்பு மற்றும் அனைத்து விவரங்களும் வருமாறு.

| வ.எண் | வார்டு எண்–21 | மண்டலம்–2 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–2, வார்டு–21ல் டாக்டர் அம்பேத்கார் தெருவில் உள்ள ஆஸ்பெஸ்டாஸ் சீட் மற்றும் கான்கீரிட் தளம் கொண்டுள்ள பழமையான சமுதாய நலக்கூடம் |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 30 ஆண்டுகளுக்கு முன் |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | தரைத்தளம் (கான்கீரிட்) – 333அ$^{2}$<br>தரைத்தளம் (ஆஸ்பெஸ்டாஸ்) –300 அ$^{2}$<br>முதல்தளம் – 80அ$^{2}$ |
| 4 | அந்த கட்டிடத்தின் அமைந்துள்ள நிலத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 1600அ$^{2}$ |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.36,000/– |
| 6 | அந்த கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை |
| 7 | அந்த கட்டிடம் இடிப்பதற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | மணலி மற்றும் மணலி சுற்று வட்டார மக்கள் பயன் பெறும் வகையில் சமுதாய நல கூடம் அமைக்கப்படும் |
| 8 | கட்டிடம் இடிப்பதற்கு காரணம் ? | கட்டிடம் பழுதடைந்துள்ளது |
| 9 | கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–2 |
| 10 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண். | 2வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.47, நாள்.12.11.2014 |

எனவே, மண்டலம்–2, வார்டு–21ல் டாக்டர் அம்பேத்கார் தெருவில் உள்ள பழமையான சமுதாய நல கூடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 20.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண்.35 /2015, –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**க.து.ந.க.எண்.பி4/7264/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.02.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.68/2015 **பொருள் எண்.18**

**ஒப்பம் – கட்டடத்துறை – மண்டலம்–2, வார்டு–18, மணலி சி.பி.சி.எல் லேஅவுட்டில் மீதமுள்ள எரிவாயு எரியூட்டகம் கட்டும் பணிக்காக – திருமதி. எஸ். வள்ளி அவர்களுக்கு ஒப்பம் வழங்க மன்றத்தின் அனுமதி**

| | | | |
|---|---|---|---|
| 1 | பணியின் பெயர். | : | மண்டலம்–2, வார்டு–18, மணலி சி.பி.சி.எல் லேஅவுட்டில் மீதமுள்ள எரிவாயு எரியூட்டகம் கட்டும் பணி |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | : | மன்றத்தீர்மான எண்.549/2014,நாள்.25.10.2014 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | : | சுகாதாரத்துறை |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2013-2014 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி. |
| 5 | மதிப்பீட்டின் தொகை | : | ரூ. 1,46,00,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | : | ரூ . 1,25,83,205.13 |
| | (ஆ) மேலான மேற்பார்வை செலவு | : | ரூ. 12,58,320.51 |
| | (இ) சிறு மேற்பார்வை செலவு | : | ரூ. 3,14,580.13 |
| | (ஈ) மற்றைய எதிர்பாரா செலவு | : | ரூ. 2,48,062.18 |
| | (உ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | : | ரூ. 1,25,832.05 |
| | (ஊ) மின்சாரம்/குடிநீர் /கழிவு நீர் இணைப்பு மற்ற பிற இனங்கள் | : | ரூ. 40,000.00 |
| | எ) மற்ற பிற இனங்கள் | : | ரூ. 30,000.00 |
| | மொத்தம் | : | ரூ. 1,46,00,000.00 |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | : | 1.சென்னை மாநகராட்சி செய்தி மலர். நாள்.20.11.2014<br>2. நமது எம்.ஜி.ஆர் தமிழ் நாளிதழ் நாள். 20.11.2014 |
| 7 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | : | 05.12.2014 |
| 8 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும். | : | ஆம் ஒதுக்கப்பட்டுள்ளது. |
| 9 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன? | : | நான்கு (e.Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது) |

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர்கள் பெயர் திரு / திருவாளர்கள்/திருமதி | பணியின் அலுவலக மதிப்பு (ரூ.) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ.) | 2013-2014 ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | S. வள்ளி | 1,25,83,205.13 | 1,24,44,790.00 | (-) 1.1% குறைவு |
| 2 | RTI பவுன்டேஷன் | 1,25,83,205.13 | 1,27,97,120.00 | (+) 1.7% அதிகம் |
| 3 | அன்னை எர்த் மூவர்ஸ் | 1,25,83,205.13 | 1,28,97,785.00 | (+)2.5% அதிகம் |
| 4 | M.R. உதயா | 1,25,83,205.13 | 1,35,88,603.00 | (+)7.99% அதிகம் |

| | | | |
|---|---|---|---|
| 10 | குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | : | ஆம். நாள். 11.12.2014 ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்ப விழுக்காட்டை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார். |
| 11 | பேச்சு வார்த்தைக்குப்பின் /ஒப்பத் தொகை/ ஒப்ப சதவீதம் . | : | ரூ.1,24,44,790.00 (-) 1.1 % குறைவு 2013-2014 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 12 | குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த | : | வகுப்பு –1 |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு | | |
| 13 | பணிக்கான நிதி ஆதாரம்<br>அ) வரவு செலவு திட்ட தலைப்பு | : | மூலதன நிதி–கட்டடத்துறை<br>2014-2015 |
| 14 | ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் . | : | 05.03.2015 |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 05.12.2014 அன்று நான்கு ஒப்பங்கள் (e-tender) மூலமாக பெறப்பட்டன. இதில் குறைந்த ஒப்பந்ததாரரான திருமதி.எஸ்.வள்ளி அவர்களின் ஒப்பத் தொகை 2013-2014ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.1,25,83,205.13யை விட (-)1.1% குறைவாகும். இதன்படி குறைந்த ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.1,24,44,790/- ஆகும். எனவே, 11.12.2014 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் குறைந்த ஒப்பந்ததாரர் திருமதி.எஸ்.வள்ளி அவர்கள் தன்னுடைய ஒப்ப விழுக்காட்டை குறைக்க இயலாது என கூறியுள்ளார். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.1,24,44,790/- ஆகும்.

| | |
|---|---|
| ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை | ரூ.1,24,44,790/- |
| ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2013-2014 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி | (-) 1.1% குறைவு |
| The Hindu (Habitat) dated.31.05.2014 ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் ஒப்ப சதவீதம் | (-) 15.74% குறைவு |

மேலும், மேலே குறிப்பிட்டுள்ளவாறு 30.01.2015 அன்று ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.1,24,44,790/-க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருமதி.எஸ்.வள்ளி அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, குறைந்த ஒப்பந்ததாரரான திருமதி.எஸ்.வள்ளி அவர்களின் ரூ.1,24,44,790/- (ரூபாய் ஒரு கோடியே இறுபத்து நான்கு இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து எழுநூற்று தொண்ணூறு மட்டும்)க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருமதி.எஸ்.வள்ளி அவர்களுக்கு அளிக்க சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919 ல் விதி 80(2) ன்படி நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு(சுகாதாரம்) வின் கூட்டம் **18.02.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.02.2015** அன்று தீர்மான எண்.**01/2015**ன்படி இதற்கு நிலைக்குழு (சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **20.02.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.02.2015** அன்று தீர்மான எண்.**37/2015**, –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **23.02.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.02.2015** அன்று தீர்மான எண். **44/2015**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>க.து.ந.க.எண்.பி4/7263/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12.02.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.69/2015 **பொருள் எண்.19**

**<u>ஒப்பம் – கட்டடத்துறை – மண்டலம்–4,வார்டு–41, காரனேஷன் நகர் சென்னை நடுநிலைப்பள்ளியில் மீதமுள்ள பணிகளுக்கு தரைதளம் மற்றும் தளங்கள் (4+4+4) வகுப்பறைகள், மாடிப்படி அறை மற்றும் கழிவறைகள் கட்டும் பணிக்காக திருவாளர்கள். RTI பவுன்டேஷன் அவர்களுக்கு ஒப்பம் வழங்க மன்றத்தின் அனுமதி.</u>**

| | | | |
|---|---|---|---|
| 1 | பணியின் பெயர். | : | மண்டலம்–4, வார்டு–41, காரனேஷன் நகர் சென்னை நடுநிலைப்பள்ளியில் மீதமுள்ள பணிகளுக்கு 2013-2014 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி தரைதளம் மற்றும் 2 தளங்கள் (4+4+4) வகுப்பறைகள், மாடிப்படி அறை மற்றும் கழிவறைகள் கட்டும் பணி. |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | : | மன்றத்தீர்மானஎண்.550/2014, நாள்.25.10.2014 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | : | கல்வித்துறை. |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2013-2014 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை | : | ரூ. 1,18,00,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | : | ரூ . 1,01,53,086.69 |
| | (ஆ) மேலான மேற்பார்வை செலவு | : | ரூ. 10,15,308.67 |
| | (இ) சிறு மேற்பார்வை செலவு | : | ரூ. 2,53,827.17 |
| | (ஈ) மற்றைய எதிர்பாரா செலவு | : | ரூ. 2,06,246.60 |
| | (உ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | : | ரூ. 1,01,530.87 |
| | (ஊ) மின்சாரம்/குடிநீர் /கழிவு நீர் இணைப்பு மற்ற பிற இனங்கள் | : | ரூ. 70,000.00 |
| | மொத்தம் | : | ரூ. 1,18,00,000.00 |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | : | **1)** சென்னை மாநகராட்சி செய்தி மலர் நாள்.20.11.2014<br>**2)** நமது எம்.ஜி.ஆர். தமிழ் நாளிதழ் நாள். 20.11.2014 |
| 7 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | : | 05.12.2014 |
| 8 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் | : | ஆம் ஒதுக்கப்பட்டுள்ளது |
| 9 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன ? | : | மூன்று (e.Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது) |

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

| வ. எண். | ஒப்பத்தில் பங்கேற்றவர்கள் பெயர் திரு / திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு (ரூ.) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ.) | 2013-2014 ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | RTI பவுன்டேஷன் | 1,01,53,087.00 | 1,03,25,689.00 | (+) 1.7% அதிகம் |
| 2 | ராஜ் டெவலப்பர்ஸ் | 1,01,53,087.00 | 1,04,06,914.00 | (+) 2.50% அதிகம் |
| 3 | யோகலட்சுமி கன்ஷ்ட்ரக்ஷன்ஸ் | 1,01,53,087.00 | 1,16,75,034.00 | (+)14.99% அதிகம் |

| | | | |
|---|---|---|---|
| 10 | குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | : | ஆம். நாள். 10.12.2014 ஒப்பந்ததாரா் தன்னுடைய ஒப்ப விழுக்காட்டை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார் |
| 11 | பேச்சு வார்த்தைக்குப்பின் /ஒப்பத் தொகை/ ஒப்ப சதவீதம் . | : | ரூ.1,03,25,689.00 (+) 1.7 % அதிகம் 2013-2014 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 12 | குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவியின் பதிவு நாள் | : | வகுப்பு –1 நாள் |
| 13 | பணிக்கான நிதி ஆதாரம் அ) வரவு செலவு திட்ட தலைப்பு | : | மூலதன நிதி–கட்டடத்துறை 2014-2015 |
| 14 | ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் . | : | 05.03.2015 ( 8 மாதங்கள்) |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 05.12.2014 அன்று மூன்று ஒப்பங்கள் (e-tender) மூலமாக பெறப்பட்டன. இதில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். RTI பவுன்டேஷன் அவர்களின் ஒப்பத் தொகை 2013-2014ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.1,01,53,087.00யை விட(+)1.7% அதிகமாகும். இதன்படி குறைந்த ஒப்பந்ததாரா் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.1,03,25,689/- ஆகும். எனவே, 10.12.2014 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் குறைந்த ஒப்பந்ததாரா் திருவாளர்கள். RTI பவுன்டேஷன் அவர்கள் தன்னுடைய ஒப்ப விழுக்காட்டை குறைக்க இயலாது என கூறியுள்ளார். இதன்படி ஒப்பந்ததாரா் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.1,03,25,689/- ஆகும்.

| | |
|---|---|
| ஒப்பந்தாரரின் இறுதி ஒப்பத்தொகை | ரூ.1,03,25,689/- |
| ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்ப சதவீதம் 2013-2014 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி | (+) 1.7% அதிகம் |
| The Hindu (Habitat) dated.31.05.2014 ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரா் ஒப்ப சதவீதம் | (-) 14.75% குறைவு |

மேலும், மேலே குறிப்பிட்டுள்ளவாறு 30.01.2015 அன்று ஒப்ப கூா்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.1,03,25,689/-க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். RTI பவுன்டேஷன் அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். RTI பவுன்டேஷன் அவர்களின் ரூ.1,03,25,689/- (ரூபாய் ஒரு கோடியே மூன்று இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து அறுநூற்று எண்பத்தொன்பது மட்டும்)க்கான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். RTI பவுன்டேஷன்அவர்களுக்கு அளிக்க சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919 ல் விதி 80(2) ன்படி நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(கல்வி) வின் கூட்டம் **17.02.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.02.2015** அன்று தீர்மான எண்.**07/2015**ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **20.02.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.02.2015** அன்று தீர்மான எண்.**36/2015**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **23.02.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.02.2015** அன்று தீர்மான எண். **43/2015**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**மநீ.வ.து.ந.க.எண்.பி5/0634/2014**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 23.02.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.70/2015 **பொருள் எண்.20**

**ஒப்பம் – மழைநீர் வடிகால் துறை – மண்டலம்–8, வார்டு – 104ல் ஒப்பம் பெறப்பட்டது – திருவாளர்கள் தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு பணியாணை அளித்ததற்கு பின்னேற்பு அனுமதி**

மண்டலம்–8, வார்டு–104ல் பிரிக்ளின் சாலை மற்றும் எஸ்.எஸ்.புரம் புரசைவாக்கம் நெடுஞ்சாலையிலிருந்து ஓட்டேரி நல்லா வரை 900மிமீ க்கு 900மிமீ அளவுள்ள ஆர்.சி.சி. பெட்டக வடிவ மற்றும் Precast மழைநீர் வடிகால்வாய் புதியதாக கட்டும் பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 25.07.2014 அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டன. இவற்றில் திருவாளர்கள் டி.எம்.சுப்புரமணியம் அண்டு கோ அவர்கள் இரு உறை ஒப்பமான இப்பணிக்கு தொழில் நுட்ப ஒப்பத்தில் 50 சதவீத பணி முடித்ததற்கான சான்றிதழ், பணித் தொகையில் 1.5 கூடுதலாக நிதி கையிருப்பு சான்றிதழ் மற்றும் ஆவண தகுதி சான்றிதழ் இணைக்கப்படாததால், இப்பணிக்கு நிதி ஆவணத்திற்கு தகுதியற்றவர் ஆகிறார். எனவே, குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் அளித்த ஒப்ப தொகை ரூ.1,96,38,478.25பை ஆகும். 2013–2014ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.2,21,68,119.13யுடன் ஒப்பிடுகையில் இவ்வொப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை (–) 11.41% குறைவாகும். எனவே, 14.08.2014 அன்று ஒப்பந்ததாரருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் ஒப்பந்ததாரர் தான் ஒப்ப விழுக்காட்டை குறைக்க சம்மதம் தெரிவிக்கவில்லை. இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.1,96,38,478.25 மற்றும் ஒப்ப சதவீதம் (–) 11.41% குறைவு ஆகும். மேலும் 31.05.2014 நாளிட்ட சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 22.95% குறைவாக உள்ளது. 05.09.2014 அன்று நடைபெற்ற உயர் மட்ட ஒப்ப கூர்ந்தாய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் தீர்மான எண். 3/2014–2015ன்படி இவ்ஒப்பத்தினை ஏற்க பரிந்துரைக்கப்பட்டது.

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் திருவாளர்கள் தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் அளித்த ஒப்ப விழுக்காடு 2013–2014ம் ஆண்டின் விலை விகிதத்தின்படி (–) 11.41% குறைவு என்பதால் இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள் தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு ரூ.1,96,38,478.25பை மதிப்பிற்கு பணிகள் அளிக்கவும் மற்றும் பொது மக்களின் நலனிற்காக அவசர அவசியம் கருதி விரைவாக இப்பணி முடிக்கவேண்டியிருப்பதினால் மன்றத்தின் பின்னேற்பு ஆணையை எதிர்நோக்கி ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கியதற்கும், ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் (2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் ஒப்புதலுடன் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண்.34/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண். 42/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண். ஈ3 / 5737 / 2015**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.02.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.71/2015 **பொருள் எண்.21**

**பணியமைப்பு**

கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர், வருவாய் நிர்வாகம், சென்னை–5, அவர்களின் கடிதம் எண். பணி–1 (3) / DC 13/2015, நாள்: 03.02.2015ன்படி, திருமதி.மு.விஜயா, வட்டாட்சியர், கடலூர் மாவட்ட வருவாய் அலகு, (துணை ஆட்சியராக தற்காலிகமாக பணிநியமனம்) அவர்கள், சென்னை மாநகராட்சி, வடக்கு வட்டார துணை ஆணையர் அலுவலகத்தில், துணை ஆட்சியர்(வருவாய்) ஆக அயற்பணியில் 06.02.2015 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவல் மற்றும் பதிவிற்காகவும் வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண். ஈ3 / 4158 / 2015**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.02.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.72/2015 **பொருள் எண்.22**

**பணியமைப்பு**

கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர், வருவாய் நிர்வாகம், சென்னை–5, அவர்களின் கடிதம் எண். பணி–1 (3) / DC 02/2015, நாள்: 14.01.2015ன்படி, திரு.இரா.சிவகுமார், முன்னாள் உதவிச் செயலர் (குடியிருப்புகள்), தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம், சென்னை அவர்கள், சென்னை மாநகராட்சி, மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகத்தில், துணை ஆட்சியர்(நிர்வாகம்) ஆக அயற்பணியில் 22.01.2015 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவல் மற்றும் பதிவிற்காகவும் வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண். ஈ3 / 4519 / 2015**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.02.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.73/2015 **பொருள் எண்.23**

**பணியமைப்பு**

அரசாணை (2டி) எண்.30, வருவாய் (பணி–1) துறை, நாள்: 22.01.2015ன்படி, திரு. ஏ.ஜி.மூர்த்தி, வட்டாட்சியர், திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலகு, அவர்கள் துணை ஆட்சியராக பதவி உயர்வு பெற்று, சென்னை மாநகராட்சி, மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகத்தில், துணை ஆட்சியர் (வருவாய்) ஆக அயற்பணியில் 30.01.2015 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவல் மற்றும் பதிவிற்காகவும் வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"

*******

**<u>ம.க.கு.ந.க.எண்.அ2/179/2015</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.02.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.74/2015 **பொருள் எண்.24**

**<u>பணியமைப்பு</u>**

அரசாணை எண்.59, நிதி (ஒபி–II) துறை, நாள்.23.01.2015ல், திரு.சு.சீனிவாசகம், நிதி ஆலோசகர் அவர்கள் பணியிடமாற்றம் செய்யப்பட்டு அப்பணியிடத்தில் நிதி துறையை சார்ந்த திரு.எஸ்.ராதாகிருஷ்ணன், அரசு இணைச்செயலர் அவர்கள் சென்னை மாநகராட்சியில் நிதி ஆலோசகராக பணிபுரிய பணியிடமாற்றம் செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையினை தொடர்ந்து, **03.02.2015** நாளிட்ட சென்னை மாநகராட்சி முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, திரு.எஸ்.ராதாகிருஷ்ணன், அரசு இணைச்செயலர், நிதித்துறை அவர்கள் அயற்பணியில் சென்னை மாநகராட்சியில் நிதி ஆலோசகராக 28.01.2015 முற்பகல் பணியில் சேர்ந்தார் என்ற விவரம் மன்றத்தின் தகவலுக்காகவும் கூட்ட நடவடிக்கையின் பதிவிற்காகவும் நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவல் மற்றும் பதிவிற்காக வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”

*******

**பொ.சு.து.ந.க.எண்.சி1/7943/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.02.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.75/2015 **பொருள் எண்.25**

**மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து தகுதி வாய்ந்த நபர்கள் பட்டியல் பெறப்பட்டு அதில் தகுதிவாய்ந்த மருத்துவர்களை நேர்காணலுக்கு அழைத்ததில் எவரும் சரிவர கலந்து கொள்ளாததால் பொது சுகாதாரத்துறையின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில்கொண்டு இனிவரும் காலங்களில் தமிழ்நாடு மருத்துவ பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலம் தகுதிவாய்ந்த நபர் பட்டியல் பெற அரசாணை பெறவும், அரசாணை பெற்றபின் மருத்துவ பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலம் தேர்வு செய்து பணியமர்த்தவும் அனுமதி**

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத் துறையில் காலியாகவுள்ள மருத்துவ அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட பணி விதிகள் பின்வருமாறு:

| **பதவியின் பெயர் மற்றும் ஊதிய விகிதம்** | **நியமன முறை** | **கல்வித்தகுதி** |
|---|---|---|
| மருத்துவ அலுவலர் (Medical Officer) 15600–39100+5400 | By direct recruitment | M.B.B.S. Degree from a recognized University and registered in TamiNadu Medical Council |

09.10.2009 நாளிட்ட மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத் துறையில் காலியாக உள்ள 8 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் நிரப்பிட 37 நபர்கள் அடங்கிய பெயர் பட்டியல் பெறப்பட்டது. அதில் 12 நபர்கள் நேர் காணல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்துக்கொண்டனர். 4 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு மருத்துவ அலுவலர்களாக மண்டலங்களில் பணிபுரிந்து வருகின்றனர்.

இதன் பிறகு சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத் துறையில் காலியாக உள்ள 20 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் நிரப்பிட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெயர் பட்டியல் கோரப்பட்டது. 80 பேர் கொண்ட பெயர் பட்டியல் பெறப்பட்டதில 10 நபர்கள் மட்டுமே நேர்காணல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பில் பங்கேற்றனர். அதில் 7 நபர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அதில் 3 பேர் பணியில் சேர்ந்துள்ளனர். 1 மருத்துவ அலுவலர் பணி துறப்புக்கடிதம் அனுப்பியுள்ளார். மீதமுள்ள 3 நபர்கள் பணியில் சேராததால் பணி ஆணை ரத்து செய்யப்பட்டது.

மீதமுள்ள 17 மருத்து அலுவலர் காலிப்பணியிடங்களை நிரப்பிட மீண்டும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திடம் பட்டியல் கோரப்பட்டது. அதில் 81 நபர்கள் பெயர் பட்டியல் பெறப்பட்டு 3 நபர்கள் மட்டுமே நேர்காணல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்துக்கொண்டனர். அதில் 2 பேர் தேர்வு செய்யப்பட்டதில் ஒரு நபர் தான் ஐதராபாத்தில் மருத்துவ பயிற்சியில் இருப்பதால் 6 மாதங்கள் கழித்து பணியில் சேர கால அவகாசம் கோரி கடிதம் அனுப்பியுள்ளார். மற்றொருவர் பணி நியமன ஆணை பெற்றுக்கொண்டு இந்நாள்வரை பணியில் சேராமலும், எவ்வித தகவலும் தெரிவிக்காமல் உள்ளார்.

சென்னை மாநகராட்சி ஆரம்ப சுகாதார மையங்களில் மருத்துவ அலுவலர் இல்லாததால் தேக்க நிலை ஏற்பட்டுள்ளது. தற்பொழுது வடகிழக்கு பருவ மழையின் காரணமாக ஏற்படும் தொற்றுநோய் நடவடிக்கை மேற்கொள்ளவும், ஆரம்ப சுகாதார மையங்களில் நோயாளிகளின் நலன் கருதியும் மற்றும் பொது சுகாதாரத்தை கருத்தில் கொண்டும் மருத்துவ அலுவலர்களின் பணிகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

மேலும் சென்னை மாநகராட்சியில் தேசிய சுகாதார நலத்திட்டம் (National Urban Health Mission) செயல்படுத்த திட்டமிடப்பட்டு அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நடைமுறைபடுத்தபடவுள்ளதால், பொது சுகாதார துறையில் மருத்துவ அலுவலர்களின் 150 பணியிடங்கள் அவசியமானதொன்றாக கருதப்படுகின்றது. ஏற்கனவே சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலர் பதவியில் 20 பணியிடங்கள் காலியாக உள்ளதாலும், தேசிய சுகாதார நலத்திட்டத்தின் மூலம் மருத்துவ அலுவலர்கள் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டியிருப்பதால் மருத்துவ அலுவலர்களை பணி நியமனம் செய்வது மிக அவசியமாகிறது.

சென்னை மாநகராட்சி பொது சுகாதார துறையில் மருத்துவ அலுவலர் பணியிடங்கள் நிரப்பிட மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்படும் பெயர் பட்டியலில் இடம் பெறும் நபர்கள் நேர்காணல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பில் சரிவர கலந்துக்கொள்ளாததாலும், பணி நியமனம் செய்யப்பட்ட பின்னரும், பணியில் சேராததாலும், மருத்துவ அலுவலர் காலிப்பணியிடங்களை நிரப்பிட மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் (Medical Recruitment Board) மூலம் தேர்ந்தெடுத்து பணி நியமனம் செய்யலாம், மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் (Medical Recruitment Board) மூலம் நியமனம் செய்யப்பட்ட மருத்துவர்கள் அரசாங்க மருத்துவ மனைகளில் மிகவும் சிறப்பாக பணி செய்து வருவதால் இத்தேர்வு வாரியம் தமிழகத்தில் மிகவும் சிறப்பானதாக கருதப்படுகிறது.

மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்படும் பெயர் பட்டியலில் கண்டுள்ளவர்கள் பணி நியமனம் செய்யும் வயதை கடந்தவர்களாய் இருப்பதாலும், வேறு இடங்களில் பணிபுரிந்து வருவதாலும் இவர்களை சென்னை மாநகராட்சியில் பணி நியமனம் செய்தால் அரசின் நடைமுறைகளை பின்பற்றுவது இவர்களுக்கு கடினமாக உள்ளது. இதனால் பணியில் சேராமல் விருப்பமின்மை தெரிவிக்கின்றனர். மேலும் மருத்துவ பணியாளர் தேர்வு வாரியத்தில் தேர்ந்தெடுப்பதன் மூலம் இளம் வயதுடைய மருத்துவர்களை பணி நியமனம் செய்யலாம்.

சென்னை மாநகராட்சியில் காலிப்பணியிடங்களை நிரப்பிட ஒவ்வொரு முறையும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்படும் பெயர் பட்டியலில் இடம் பெறும் நபர்கள் சரிவர நேர்காணலில் கலந்துக்கொள்ளாததால், மருத்துவ அலுவலர்களின் பணிகளின் முக்கியத்துவம் கருதி மருத்துவ அலுவலர்களின் காலிப்பணியிடங்களை நிரப்பிட மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் (Medical Recruitment Board) மூலம் பணி நியமனம் செய்யலாம்.

எனவே,

1. மருத்துவ அலுவலர் பணியிடங்களை மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் (Medical Recruitment Board) மூலம் நிரப்ப அரசாணை வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பவும்,
2. அரசாணை பெற்றப்பின் மருத்துவ பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலம் (Medical Recruitment Board) மருத்துவர்களை தேர்வு செய்து பணியமர்த்தவும்,

மேற்காணும் இரண்டு இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஜி4/7820/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்24.02.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.76/2015 **பொருள் எண்.26**

**<u>சென்னை மாநகராட்சியில் காலியாக உள்ள பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புதல் – நீதிமன்றத்தீர்ப்பு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வது குறித்து அரசின் தெளிவுரை கோர அனுமதி</u>**

சென்னை மாநகராட்சியில் ஒவ்வொரு ஆண்டும் வகுப்பு–2,3 மற்றும் 4ம் நிலையில் ஏற்படும் காலிப்பணியிடங்களை நிரப்ப மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் அரசு விதிகளின்படி இனசுழற்சி முறையில் தகுதியான நபர்களின் பட்டியல் பெற்று எழுத்து தேர்வு மற்றும் நேர்காணல் நடத்தப்பட்டு தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்பட்டு காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகிறது.

இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை மேல்முறையீட்டு மனு எண்.1027/2013 மீதான 09.06.2014 தேதியிட்ட தீர்ப்பில் உச்சநீதி மன்றத் தீர்பாணை குறிப்பிட்டு அரசுத்துறைகளில் உள்ள காலிபணியிடங்களை நிரப்புவது தொடர்பாக வேலை வாய்ப்பு அலுவலகங்களிலிருந்து பதிவு மூப்பு பட்டியல் பெறுவது மட்டுமின்றி இரண்டு பத்திரிகைகளில் காலிப்பணியிடங்களை நிரப்புவது குறித்து விளம்பரம் செய்ய வேண்டுமென்றும், அதில் ஒன்று அதிக நபர்கள் படிக்கக்கூடிய வட்டார மொழியாக இருக்க வேண்டுமென்று அதன் மூலம் வரும் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து பணி நியமனங்கள் மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, சென்னை மாநகராட்சியில் காலியாக உள்ள அனைத்து காலிப்பணியிடங்களை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் தகுதியான நபர்களின் விவரங்கள் பெற்று சென்னை மாநகராட்சியில் நேரடி நியமனம் மூலம் நிரப்புவது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கை குறித்த உரிய தெளிவுரை வழங்க கோரி அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழுவின் மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

‘‘ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பொ.து.ந.க.எண்.ஜி4/53573/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.02.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.77/2015 **பொருள் எண்.27**

**சென்னை மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டபோது சென்னை மாநகராட்சியில் புதியதாக சேர்க்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்த தற்காலிக பணியாளர்கள் சென்னை மாநகராட்சியில் ஈர்த்துக்கொள்ளப்பட்டு பணிபுரிந்து வருபவர்களை நிரந்தரம் செய்ய அரசின் ஒப்புதல் பெற அனுமதி**

சென்னை மாநகராட்சி எல்லை விரிவாக்கத்தின் போது இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்த பணியாளர்கள் அவர்களின் விருப்பத்தின் பேரில் சென்னை மாநகராட்சியில் ஈர்த்துக் கொள்ளப்பட்டனர். இவ்வாறு ஈர்த்து கொள்ளப்பட்டவர்களில் 908 தற்காலிக தினக்கூலி பணியாளர்களும் அடங்குவர். இத்தற்காலிக தினக்கூலி பணியாளர்களின் விவரம் திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர்களால் சென்னை மாநகராட்சிக்கு அளிக்கப்பட்டது. இப்பணியாளர்கள் நிலை குறித்து 18.07.2012 நாளிட்ட அரசாணையில் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

“ The Status quo of 908 daily wages temporary workers (Municipality – 3. Town Panchayat - 159, Village Panchayat – 746) available in the 42 merged Urban Local Bodies be maintained as temporary daily wage workers in Corporation of Chennai”

இந்நிலையில் இத்தற்காலிக தினக்கூலி பணியாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என தொடர்ந்து தொழிலாளர் சங்கங்கள் கோரிக்கை வைப்பதால், இதன் பொருட்டு 30.09.2014 நாளிட்ட சுற்றறிக்கையில் இப்பணியாளர்கள் பணிபுரியும் மண்டலங்கள் 2, 3, 11, 12, 14 மற்றும் 15க்கு அனுப்பப்பட்டு விவரம் பெறப்பட்டது. பெறப்பட்ட இப்பணியாளர்களின் விவரம் சம்பந்தப்பட்ட ஆட்சியர்கள் அளித்த பட்டியலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டதில் கீழ்காணும் விவரங்கள் அறியப்பட்டது.

| வ. எ. | ஈர்த்துக் கொள்ளப்பட்ட தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் பணிபுரியும் மண்டலங்கள் | திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர்கள் அளித்த பணியாளர்கள் எண்ணிக்கை மண்டலம் வாரியாக | சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு சென்ற பணியாளர்கள் | இறந்த பணியாளர்களின் எண்ணிக்கை | நீண்ட காலமாக பணிக்கு வராதவர்கள் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | மண்டலம்–2 | 50 | 29 | 1 | 1 |
| 2 | மண்டலம்–3 | 43 | 22 | – | 2 |
| 3 | மண்டலம்–11 | 171 | 52 | 2 | 4 |
| 4 | மண்டலம்–12 | 126 | 19 | – | 1 |
| 5 | மண்டலம்–14 | 212 | 74 | 10 | 19 |
| 6 | மண்டலம்–15 | 306 | 61 | 3 | – |
| | **மொத்தம்** | **908** | **257** | **16** | **27** |

| மண்டலம் | மாவட்ட ஆட்சியர் அளித்த பட்டியலில் காணும் நபர்களில் மண்டலங்களில் பணியில் இல்லாதவர்கள் | தற்போது மாவட்ட ஆட்சியரின் பட்டியலின்படி மண்டலங்களில் பணிபுரிபவர்கள் | பணி நிரந்தரம் செய்யப் பட்டவர்கள் விவரம் | தாய் துறைக்கு சென்றவர்கள் விவரம் |
|---|---|---|---|---|
| (7) | (8) | (9) | (10) | (11) |
| மண்டலம்–2 | – | 19 | – | – |
| மண்டலம்–3 | 1 | 18 | – | – |
| மண்டலம்–11 | 10 | 101 | 1 | 1 |
| மண்டலம்–12 | 45 | 61 | – | – |
| மண்டலம்–14 | – | 109 | – | – |
| மண்டலம்–15 | 97 | 145 | – | – |
| **மொத்தம்** | **153** | **453** | **1** | **1** |

* இதில் மண்டலம் 11–ல் திரு.கே.பி. முருகன் என்ற பணியாளர் நீதிமன்ற உத்தரவின்படி பணி நிரந்தரம் செய்யப்பட்டு துப்புரவு மேஸ்திரியாக மண்டலம்–11ல் தற்போது பணிபுரிந்து வருகிறார். மற்றொரு பணியாளரான திரு.வி. சுப்ரமணி போரூர் பேரூராட்சி அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டு தாய் துறைக்கு சென்று விட்டார் என அறியப்படுகிறது.

தற்போது மாவட்ட ஆட்சியரின் பட்டியலின்படி சென்னை மாநகராட்சி மண்டலங்கள் 2, 3, 11, 12, 14, மற்றும் 15 ஆகியவற்றில் பணிபுரியும் தற்காலிக தினக்கூலி பணியாளர்களின் விவரம் பதவி வாரியாக கீழ்வருமாறு.

**<u>சென்னை மாநகராட்சி விரிவாக்கத்தின்போது உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து தற்போது மண்டலங்களில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் விவரம்</u>**

| பதவிகள் | மண்டலம் 2 | மண்டலம் 3 | மண்டலம் 11 | மண்டலம் 12 | மண்டலம் 14 | மண்டலம் 15 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| துப்புரவு பணியாளர் | 19 | 12 | 85 | 54 | 59 | 94 | **323** |
| மின் உதவியாளர் | | | 4 | | | | **4** |
| மின் பணியாளர் | | 3 | 10 | 1 | 19 | 23 | **56** |
| பிளம்பர் | | | | | | 2 | **2** |
| தொழில் நுட்ப உதவியாளர் | | | | 1 | | | **1** |
| உதவி எழுத்தாளர் | | | | | 1 | | **1** |
| உதவியாளர் | | | | | 1 | | **1** |
| கணினி இயக்குபவர் | | 2 | 1 | | 3 | 2 | **8** |
| காவலர் | | | | | | 2 | **2** |
| துப்புரவு மேஸ்திரி | | | | | 3 | | **3** |
| அலுவலக உதவியாளர் | | | | 3 | 10 | 6 | **19** |
| சாலை பணியாளர் | | | | | 6 | | **6** |
| ஓட்டுநர் | | 1 | 1 | | 6 | 12 | **20** |
| ஓ.எச்.டி. இயக்குபவர் | | | | | | 4 | **4** |
| வரி வசூலர் | | | | 2 | 1 | | **3** |
| **மொத்தம்** | **19** | **18** | **101** | **61** | **109** | **145** | **453** |

மேலும், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களால் அளிக்கப்பட்ட தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் பெயர் பட்டியலில் இடம் பெறாத தினக்கூலி பணியாளர்கள் மேற்குறிப்பிட்ட மண்டலங்களில் தற்போது பணிபுரிந்து வருகிறார்கள் அதன் விவரம் கீழ்வருமாறு

**<u>மாவட்ட ஆட்சியர்கள் அளித்த பெயர் பட்டியலில் இடம் பெறாத தற்காலிக பணியாளர்கள்</u>**

| மண்டலம் | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| மண்டலம்–2 | – |
| மண்டலம்–3 | 14 |
| மண்டலம்–11 | 69 |
| மண்டலம்–12 | 12 |
| மண்டலம்–14 | 54 |
| மண்டலம்–15 | 10 |
| மொத்தம் | 159 |

**மாவட்ட ஆட்சியர்கள் அளித்த பெயர் பட்டியலில் இடம் பெறாத தற்காலிக பணியாளர்கள் பதவி வாரியான விவரம் கீழ்வருமாறு**

| பதவிகள் | மண்டலம் 11 | மண்டலம் 12 | மண்டலம் 14 | மண்டலம் 15 | மண்டலம் 3 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| மின் உதவியாளர் | 3 | | | | | 3 |
| மின் பணியாளர் | | | 3 | | 2 | 5 |
| பொது சுகாதார பணியாளர் | | | | | 1 | 1 |
| உதவியாளர் | 1 | | | | | 1 |
| கணினி இயக்குபவர் | 5 | 1 | | | | 6 |
| தட்டச்சர் | | | 1 | | | 1 |
| துப்புரவு பணியாளர் | 56 | 11 | 41 | 6 | 11 | 125 |
| அலுவலக உதவியாளர் | 1 | | 1 | | | 2 |
| புள்ளி விவரக்குறிப்பாளர் | 1 | | | | | 1 |
| சாலை பணியாளர் | | | 3 | | | 3 |
| ஓட்டுநர் | 2 | | 5 | 4 | | 11 |
| **மொத்தம்** | **69** | **12** | **54** | **10** | **14** | **159** |

மேற்கண்ட பட்டியல்கள் தவிர 06.02.2013 நாளிட்ட திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அனுப்பப்பட்ட 13 பேர் கொண்ட தற்காலிக தினக்கூலி பணியாளர்களின் பெயர் பட்டியல் பெறப்பட்டுள்ளது. அதில் 9 தற்காலிக பணியாளர்கள் சென்னை மாநகராட்சியில் மண்டலம் 3–ல் பணி புரிந்து வருகின்றனர். (அந்த 9 பணியாளர்களில் திரு.J.கண்ணப்பன், துப்புரவு பணியாளர் என்பவரது பெயர் ஏற்கனவே, மாவட்ட ஆட்சியரால் அளிக்கப்பட்ட பட்டியலில் இடம் பெற்றுள்ளது). 4 தற்காலிக பணியாளர்கள் பற்றிய விவரம் மண்டலம் 3–ல் அளிக்கப்படவில்லை. மேலும் பட்டியலில் இல்லாத 8 நபர்களில் 3 நபர்கள் 01.10.2009–க்கு பின்னர் பணியமர்த்தப்பட்டவர்கள். (இவர்களில் 6 நபர்கள் மின்பணியாளர்களாகவும், 2 நபர்கள் துப்புரவு பணியாளர்களாகவும் பணிபுரிந்து வருகிறார்கள்)

மேலும், சென்னை மாநகராட்சி விரிவாக்கத்தின் போது ஊராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களை 01.10.2009 அன்றுள்ள நிலையில் நிறுத்தம் செய்யும்படியும், எவ்வித பணியாளரையும் அரசின் முன் அனுமதியின்றி புதிதாக நியமனம் செய்யக்கூடாது என 03.02.2010 நாளிட்ட அரசு கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்தும் 30 பணியாளர்கள் 02.10.2009 முதல் ஊராட்சியில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அப்பணியாளர்கள் தற்போது சென்னை மாநகராட்சியில் தற்காலிக தினக்கூலி பணியாளர்களாக மேற்காணும் மண்டலங்களில் பணிபுரிந்து வருவது தெரிய வருகிறது (இப்பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

| வ. எண் | மண்டலம் | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மண்டலம் – 2 | – |
| 2 | மண்டலம்–3 | 14 |
| 3 | மண்டலம்–11 | 11 |
| 4 | மண்டலம்–12 | 1 |
| 5 | மண்டலம்–14 | – |
| 6 | மண்டலம்–15 | 4 |
| | மொத்தம் | 30 |

மேற்காணும் பட்டியலின்படி திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர்கள் அளித்த தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் 908 பேர் கொண்ட பட்டியலில் தற்போது மண்டலங்கள் 2, 3, 11, 12, 14 மற்றும் 15–ல் 453 பேர் மட்டும் தற்போது பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுடன் பட்டியலில் இடம் பெறாத (159+8) 167 தற்காலிக பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். (இவர்களில் 30 பணியாளர்கள் 03.02.2010 நாளிட்ட அரசு கடிதத்திற்கு பின்னர் பணியமர்த்தப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது). இத்தினக்கூலி பணியாளர்கள் 1996 முதல் 2011 ஆண்டு வரை பணியமர்வு செய்யப்பட்டவர்கள். இப்பணியாளர்களில் பெரும்பாலானவர்கள் துப்புரவு பணியாளர்களாகவும்

மற்றவர்கள் அலுவலக உதவியாளர்கள், மின் பணியாளர்கள், கணினி இயக்குபவர்கள் மற்றும் ஓட்டுநர்களாக பணிபுரிந்து வருகிறார்கள்.

மேற்கூறிய பணியாளர்களை பணி நிரந்தரம் செய்யக் கோரி தொழிலாளர் சங்கங்களால் தொடர்ந்து கோரிக்கை வைக்கப்பட்டு வருவதால் சென்னை மாநகராட்சி விரிவாக்கத்தின்போது இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களால் வழங்கப்பட்ட பெயர் பட்டியலில் இடம் பெற்று தற்போது பணிபுரியும் 453 தற்காலிக பணியாளர்களையும், மாவட்ட ஆட்சியர் அவர்களால் அளிக்கப்பட்ட பெயர் பட்டியலில் இடம் பெறாத தற்போது பணிபுரியும் தற்காலிக பணியாளர்கள் 167 நபர்களையும் சென்னை மாநகராட்சியில் நான்காம் நிலை பணியாளர்களின் காலிப் பணியிடங்களில் பணியமர்த்த அரசின் ஆணை வேண்டி அரசுக்கு முன்மொழிவு அனுப்ப மன்றத்தின் அனுமதி பெற 19.02.2015 நாளிட்ட முதன்மைச் செயலர்/ஆணையரின் ஆணை பெறப்பட்டது.

எனவே, சென்னை மாநகராட்சி விரிவாக்கத்தின்போது இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து தற்போது சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் மேற்கண்ட 620 தற்காலிக தினக்கூலி பணியாளர்களை சென்னை மாநகராட்சியில் நான்காம் நிலை பணியாளர்களின் காலிப் பணியிடங்களில் பணி அமர்த்த அரசின் ஆணை வேண்டி அரசுக்கு முன்மொழிவு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.5.சு.து.ந.க.எண்.அ1/2273/14**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.12.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.78/2015 **பொருள் எண்.28**

**சென்னை மாநகராட்சியிலிருந்து நாகர்கோவில் நகராட்சிக்கு ஒருவழி பணிமாறுதலுக்கு அனுமதி**

திருமதி. என்.பிளாரன்ஸ் மேரி, சுகாதார ஆய்வாளர், அவர்கள் அளித்துள்ள மனுவில் தனக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர் எனவும் கணவர் பராமரிப்பில் பிள்ளைகள் உள்ளனர் எனவும் தனது மாமியார் அவர்களுக்கு இருதய நோய் உள்ளதால் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது எனவும், தனது கணவருக்கு இடுப்பு எலும்பு விலகிவிட்டதால் அவருக்கு சிகிச்சை செய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளதால் தனது நிலைமையை கருணையுடன் பரிசீலித்து சொந்த மாவட்டத்திலுள்ள நாகர் கோவில் நகராட்சிக்கு பணியிட மாற்றம் செய்து தருமாறு 13.08.2014 நாளிட்டகடிதங்கள் வாயிலாக கோரியுள்ளார்.

திருமதி.என்.பிளாரன்ஸ் மேரி, சுகாதார ஆய்வாளர், மண்டலம்–5 அவர்கள், சென்னை மாநகராட்சியில் 08.05.2012 அன்று முற்பகல் சுகாதார ஆய்வாளராக மண்டலம்–5ல் பணியில் சேர்ந்துள்ளார். தனியரது பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்டுள்ளது மற்றும் அப்பதவியில் பணிவரண் முறை செய்யப்பட்டுள்ளது. தனியர் மீது துறை ரீதியாக குற்றச்சாட்டுக்களோ, ஒழுங்கு நடவடிக்கைகளோ ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கடித எண்.27274/மாந–6/96–1, நாள்: 08.07.1996ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளில் சம்பந்தப்பட்ட ஆணையர் அவர்கள் தனியரது மனுவை பரிசீலித்து அன்னாரை விடுவிக்கும் மன்றத் தீர்மானம் நிறைவேற்றி தீர்மான நகலுடன் மாற்றம் கோரும் நகராட்சி அல்லது மாநகராட்சிக்கு ஆணையருக்கு அந்த மனுவினை அனுப்பி வைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சென்னை நகர முனிசிபல் சட்ட விதி 1919ன் துணை விதி 97(C)ல் மாநகராட்சியிலிருந்து நகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதல் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, தனியரின் கோரிக்கையினை ஏற்று சென்னை மாநகராட்சியிலிருந்து நாகர் கோவில் நகராட்சிக்கு ஒருவழி பணியிட மாறுதலில் செல்ல அனுமதிக்கலாம் .

எனவே, திருமதி.என்.பிளாரன்ஸ் மேரி, சுகாதார ஆய்வாளர், மண்டலம்–5, அவர்களின் குடும்ப சூழ்நிலையினை கருத்தில் கொண்டு, தனியரை சென்னை மாநகராட்சியிலிருந்து நாகர்கோவில் நகராட்சிக்கு ஒருவழி பணியிட மாறுதலில் செல்ல அனுமதிக்க நியமனக் குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.6.ந.எண்.அ3/0138/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.79/2015 **பொருள் எண்.29**

**சென்னை மாநகராட்சியிலிருந்து மதுரை மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதலுக்கு அனுமதி**

திரு. பா.சரவணக்குமார், சுகாதார ஆய்வாளர், கோட்டம்-64, மண்டலம்-6 அவர்கள் அளித்துள்ள மனுவில் தன்னுடைய தாயார் உடல் நலக்குறைவாக இருப்பதாலும், மனைவிக்கு முழங்காலில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டி இருப்பதாலும், மேலும் இரண்டு வயது குழந்தை கவனிக்கவும், தனது நிலைமையை கருணையுடன் பரிசீலித்து சொந்த மாவட்டத்தில் உள்ள மதுரை மாநகராட்சிக்கு பணியிட மாற்றம் செய்து கொடுக்குமாறு மனு அளித்துள்ளார்.

மேலும், திரு. பா.சரவணக்குமார், சுகாதார ஆய்வாளர் அவர்கள் சென்னை மாநகராட்சியில் 06.02.2009ல் பணியில் சேர்ந்தார். தனியரது பதவியில் தகுதிக்காண் பருவம் முடிக்கப்பட்டுள்ளது மற்றும் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. தனியர் மீது துறை ரீதியாக குற்றச்சாட்டு ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை கடித எண்.27274/மா.ந-6/96-1, நாள்.08.07.1996ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளில் சம்பந்தப்பட்ட ஆணையர் அவர்கள் தனியரது மனுவை பரிசீலித்து அன்னாரை விடுவிக்க மன்ற தீர்மானம் நிறைவேற்றி தீர்மான நகலுடன் மாற்றம் கோரும் நகராட்சி அல்லது மாநகராட்சி ஆணையருக்கு அந்த மனுவினை அனுப்பி வைக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சென்னை நகர முனிசிபல் சட்ட விதி 1919ன் துணை விதி 97 (a) (b)ல் ஒரு மாநகராட்சியிலிருந்து மற்றொரு மாநகராட்சிக்கு ஒருவழி பணியிட மாறுதல் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, தனியரின் கோரிக்கை ஏற்று சென்னை மாநகராட்சியில் இருந்து மதுரை மாநகராட்சிக்கு ஒருவழி பணியிட மாறுதல் செல்ல அனுமதிக்கலாம் என சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே, திரு.பா.சரவணக்குமார், சுகாதார ஆய்வாளர், கோட்டம்-64, மண்டலம்-6 அவர்களின் குடும்ப சூழ்நிலையினை கருத்தில் கொண்டு தனியரை சென்னை மாநகராட்சியிலிருந்து மதுரை மாநகராட்சிக்கு ஒருவழி பணியிட மாறுதலில் செல்ல அனுமதிக்க நியமனக் குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.4.ந.க.எண்.அ5/9722/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 18.2.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.80/2015 **பொருள் எண்.30**

**மண்டலம்–4,வார்டு–48ல் வெங்கட கிருஷ்ணன் தெருவில் உள்ள வணிக வளாக கட்டிடம் இடிப்பதற்கு அனுமதி**

| வ. எண் | வார்டு எண்–48 | மண்டலம் –4 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–4,வார்டு–48ல் வெங்கட கிருஷ்ணன் தெருவில் உள்ள வணிக வளாகம் கட்டிடம் |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | வருடம்–1992ம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 303.34 ச.மீ |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 303.34 ச.மீ |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.34988.97/– |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | தற்போது உபயோகமின்றி உள்ளது. |
| 7 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | வணிக வாளகம் கட்டிடம் கட்டும் பணி |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | கட்டடம் பழுதடைந்துள்ளது |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துறை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–4 |
| 10 | வார்டு குழு (பரிந்துறை) தீர்மான எண் (ம) நாள் . | 4வது மண்டலம் வார்டு குழு தீர்மான எண். 296 நாள்.20.01.2014. |

எனவே, மண்டலம்–4, வார்டு–48ல் வெங்கடகிருஷ்ணன் தெருவில் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகம் கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண்.40/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.அ.4.ந.க.எண்அ5/9723/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.02.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.81/2015 **பொருள் எண்.31**

**<u>மண்டலம்–4, வார்டு–48 திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பழுதடைந்த தாய்சேய் நலவாழ்வு மையக் கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி.</u>**

| வ. எண் | வார்டு எண்–48 | மண்டலம்–4 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–4, வார்டு–48 திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்த தாய் சேய் நலவாழ்வு மையக் கட்டிடம் . |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1950ஆம் ஆண்டு |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 362.00 ச.மீ |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 362.00 ச.மீ |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.7,29,625/– |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | புதிய தாய் சேய் நலமைய கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது. |
| 9. | கட்டித்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–4 |
| 10. | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண், மற்றும் நாள். | மண்டலம்–4, வார்டு குழு தீர்மான எண்.534, நாள்.21.10.2014 |

எனவே, மண்டலம்–4, வார்டு–48, திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்த தாய்சேய் நலவாழ்வு மையக்கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பொதுசுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு(பொது சுகாதாரம்) வின் கூட்டம் 18.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண்.02/2015ன்படி இதற்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண்.41/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.15.ந.க.எண்.ஆர்1/809/2015**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 25.2.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.82/2015 **பொருள் எண்.32**

**மண்டலம் 15, வார்டு 192, கிழக்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ள பழுதடைந்த வணிக வளாக கட்டிடம் இடிப்பதற்கு அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–15 வார்டு 192, நீலாங்கரையில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 8 கடைகளில் ஒரு கடை அம்மா உணவகத்திற்கு எடுத்துக்கொண்டது போக மீதமுள்ள 7 கடைகள் கொண்ட வணிக வளாகம் 20 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்டுள்ளதால் தற்போது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. அதனை இடித்துவிட்டு புதிய வணிக வளாகம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இது குறித்து சென்னை மாநகராட்சி மண்டலம்–15 வார்டு குழுவின் தீர்மான எண்.234 நாள்.18.08.2014 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வார்டு–192, நீலாங்கரையில் அமைந்துள்ள பழுதடைந்த வணிக வளாகக் கட்டிடத்தின் விவரங்கள் பின்வருமாறு.

| வ. எண் | வார்டு எண்–192 | மண்டலம் –15 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம் 15, வார்டு 192, கிழக்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ள பழுதடைந்த நிலையில் உள்ள வணிக வளாக கட்டிடம் |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | நீலாங்கரை ஊராட்சியாக இருந்த காலத்தில் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 193 சதுர மீட்டர் (தரைத்தளம்) |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 193 சதுர மீட்டர் |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.2,25,706/– |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | உள்ளது |
| 7 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்குஉத்தேசிக்கப்பட்டுள்ளது ? | வணிக வளாகம், அலுவலகம் மற்றும் அம்மா உணவகம் |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | கட்டடம் பழுதடைந்துள்ளதால் இடித்துவிட்டு புதிய வணிக வளாகம், அலுவலகம் மற்றும் அம்மா உணவகம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துறை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–15 |
| 10 | வார்டு குழு (பரிந்துறை) தீர்மான எண் (ம) நாள் . | 15வது மண்டலம் வார்டு குழு தீர்மான எண்.239 நாள் 18.08.2014. |

தற்போது பழுதடைந்த நிலையில் உள்ள 7 கடைகள், அம்மா உணவகமாகச் செயல்படும் கட்டடம் ஆகியவற்றை இடித்து புதியதாக வணிகவளாகம், அலுவலகக் கட்டடம் மற்றும் புதிய அம்மா உணவகம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. நீலாங்கரையில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்த 7 கடைகள் மற்றும் அம்மா உணவக கட்டிடத்தை இடிப்பதற்கும்
2. நீலாங்கரையில் அமைந்துள்ள 7 கடைகளின் குத்தகை உரிமம் இரத்து செய்வதற்கும்.

மேற்கண்ட 1 மற்றும் 2 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண்.39/2015, –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண். 46/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.15.ந.க.எண்.பி1 /791 / 2015**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 23.2.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.83/2015 **பொருள் எண்.33**

**மதிப்பீடு–2014–15 மண்டலம்–15, பகுதி–44, கோட்டம்–198 – மூலதன நிதியில் மேற்கொள்ளும் வகையில், 2014–15 ஆம் ஆண்டு விலைப் பட்டியலின் அடிப்படையில், பட்டியலில் கண்டுள்ள பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–15, வார்டு–198ல் மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ளும் வகையில் 2014–15ஆம் ஆண்டு விலைப்பட்டியலின் அடிப்படையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. பணியின் பெயர் : பேவர் இயந்திரம் மூலம் தார் சாலை அமைக்கும் பணி

| வ. எண். | வார்டு எண் | பணியின் விவரம் | நீளம் (மீ) | பரப்பளவு (ச.மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| 1 | 198 | சி.கிளிப் கான்கிலேவில் உள்ள வி.ஜி.பி. சீ கிளிப் பிரதான சாலை (ரீச் ஏ), 1,2,3 மற்றும் 4வது டிரைவ் தெருக்களை பேவர் இயந்திரம் மூலம் தார் சாலை அமைக்கும் பணி | 1456 | 7890 | 11700000 |
| | | மொத்தம் | 1456 | 7890 | 11700000 |

2. பரிந்துரை செய்தவரின் விவரம் : செற்பொறியாளர் /ம–15
3. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் : மண்டலம்–15
4. சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி பெறப்பட்டதா ? : பெறப்பட்டது.
5. தொழில்நுட்ப அனுமதி அளித்த அதிகாரி, செயல்முறை ஆணை எண் மற்றும் தேதி : தலைமைப் பொறியாளர் (பொது) டி.எஸ். எண். 180/2014–2015 நாள்: 24.02.2015
6. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவனை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது : 2014–15 விலைப்பட்டியல்
7. மதிப்பீட்டின் தொகை:
   - (அ) பணியின் செலவினம் : ரூ. 10006362.20
   - (ஆ) மேற்பார்வை செலவு : ரூ. 1000636.22
   - (இ) சில்லரை மேற்பார்வை செலவு : ரூ. 250159.06
   - (ஈ) தரக்கட்டுப்பாடு செலவு : ரூ. 100063.62
   - (உ) கட்டுமான தொழிலாளர் பொது நல நிதி : ரூ. 100063.62
   - (ஊ) மற்ற எதிர்பாரா செலவு : ரூ. 242715.28
   - மொத்தம் : ரூ. 11700000.00
8. மழைநீர் வடிகால்வாய் கட்டுவது நடைபாதை பகுதியா அல்லது சாலைப்பகுதியா அதன் அளவு குறிப்பிடவும் : பொருந்தாது.
9. ஒரு சதுர மீட்டருக்கு மதிப்பீடு : ரூ.1268.23/–
10. வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா : ஆம்
11. மதிப்பீட்டிற்காக ஒப்புதல் அளித்த குழுவின் பெயர், தீர்மான எண் மற்றும் தேதி : பின்னர் பெறப்படும்
12. ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது : புதிய பணி
13. நிதியின் மூலத்தன்மை : மூலதன நிதி
   - (அ) வரவு செலவு ஒதுக்கீடு : ரூ. 70,00,00,000/-
   - (ஆ) மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி : ரூ. 61,00,00,000/-
   - (இ) மீதம் உள்ள நிதி (அ–ஆ) : ரூ. 9,00,00,000/-
   - (ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி : ரூ. 1,17,00,000/-

: 004/35117/23142/2013–14

14. சொத்து குறியீடு எண். (Asset Code No.) : 044/35117/26006/2014–15

: 004/35117/26009/2014–15

15. நிலத்தின் தன்மை ( Land Use) : சென்னை மாநகராட்சி சாலை

மேற்குறிப்பிட்ட பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,17,00,000/–க்கு (ரூபாய் ஒரு கோடியே பதினேழு இலட்சம் மட்டும்) சென்னை மாநகராட்சி சட்டம் 1919 விதி 78ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண்.38/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண்.45/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பா.து.ந.க.எண்.பி3/1684/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.02.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.84/2015 பொருள் எண்.34

**பாலங்கள் துறை – மண்டலம்–6. வார்டு–72ல் உள்ள ஓட்டேரி நல்லாவின் குறுக்கே நரசிம்மா நகர் மற்றும் எம்.எஸ்.நகரையும் இணைக்கும் மீதமுள்ள மேம்பாலம் கட்டுமானப்பணி – திரு. எம். ஆர். உதயா அவர்களுக்கு ரூ. 1,13,96,221.50 மதிப்பில் பணியாணை அளிக்க அனுமதி**

மண்டலம்–6, வார்டு–72ல் உள்ள ஓட்டேரி நல்லாவின் குறுக்கே நரசிம்மா நகர் மற்றும் எம்.எஸ்.நகரையும் இணைக்கும் மீதமுள்ள மேம்பாலம் கட்டுமானப்பணி 2014–2015ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி ரூ.1,21,00,000/–க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

மண்டலம்–6, வார்டு–72ல் உள்ள ஓட்டேரி நல்லாவின் குறுக்கே நரசிம்மா நகர் மற்றும் எம்.எஸ்.நகரையும் இணைக்கும் மீதமுள்ள மேம்பாலம் கட்டுமானப்பணிக்காக 12.12.2014 அன்று ஒப்பம் கோரியதில், ஒப்பங்கள் எதுவும் பெறப்படவில்லை. மீண்டும் 02.01.2015 அன்று மறு ஒப்பம் கோரியதில் 2 ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர். அதன் விவரம் பின்வருமாறு.

(1) திருவாளர்கள். ஆர்.டி.ஐ. பவுன்டேஷன்ஸ்

(2) திரு. எம்.ஆர்.உதயா

| வ. எண் | ஒப்பந்தாரர் பெயர் | 2014–2015 ஆம் ஆண்டு விலை விவரப்படி அலுவலக பணித்தொகை | ஒப்பத்தொகை | ஒப்ப சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள். ஆர்.டி.ஐ. பவுன்டேஷன்ஸ் | ரூ.99,22,240 | ரூ.1,36,52,500.00 | (+) 37.59 % |
| 2 | திரு. எம்.ஆர்.உதயா | ரூ.99,22,240 | ரூ. 1,14,53,800.00 | (+) 15.44 % |

குறைந்த ஒப்பந்ததாரரான திரு.எம்.ஆர்.உதயா அவர்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பத்தொகையானரூ.1,14,53,800.00 2014–2015ஆம்ஆண்டு விலைவி வரப்படி பணித்தொகையை விட (+)15.44 % அதிகம் ஆகும். எனினும், ஒப்பந்ததாரரிடம் 05.01.2015 அன்று விலைகுறைப்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதில் தனது கடித நாள் 07.01.2015 மூலம் விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். மீண்டும் ஒப்பந்ததாரரிடம் 18.02.2015 அன்று விலைகுறைப்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதில் தனது கடிதம் மூலம் 0.5% விலைகுறைப்பு செய்வதாக தெரிவித்துள்ளார்.

தற்போது 2 கட்ட பேச்சுவார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரரான திரு. எம்.ஆர்.உதயா அவர்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பத்தொகையான ரூ. 1,13,96,221.50 2014–2015 ஆம் ஆண்டு விலை விவரப்படி பணித்தொகையை விட (+)14.85 % அதிகம் ஆகும்.

The Hindu (Habitat) dated 07.02.2015 தேதியிட்ட சந்தை விலை மற்றும் நடைமுறையில் உள்ள சந்தை விலைப்படி கணக்கிட்டு ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.1,13,96,221.50 (+) 6.24 சதவீதம் அதிகமாக உள்ளது.

எனவே, திரு.எம்.ஆர்.உதயா அவர்களுக்கு 2014–2015 ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 14.85% சதவீதம் மற்றும் நடைமுறையில் உள்ள சந்தை விலைப்படி கணக்கிட்டு ஒப்பிடுகையில் (+)6.24 சதவீதம் அதிகமான ஒப்பத்தொகை ரூ.1,13,96,221.50 க்கு பணியை வழங்க 25.02.15 அன்று நடைபெற்ற ஒப்ப கூர்ந்தாய்வு குழுமத்தின் பரிந்துரை வேண்டி சமர்பிக்கப்பட்டு அதன்மேல் ஒப்புதல் பெறப்பட்டது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திரு. எம்.ஆர்.உதயா அவர்களுக்கு 2014–2015 ஆம் ஆண்டு விலைவிவரப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 14.85% சதவீதம் மற்றும் நடைமுறையில் உள்ள சந்தை விலைப்படி கணக்கிட்டு ஒப்பிடுகையில் (+)6.24 சதவீதம் அதிகமான ஒப்பத்தொகை ரூ.1,13,96,221.50 க்கு பணி ஆணை வழங்க சென்னை மாநகராட்சி சட்டம் விதி 1919ல் விதிகள் 78 மற்றும் 80 (2)ன் படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண்.42/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண்.47/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.சு.து.ந.க.எண்.பி1/7892 /2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.02.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.85/2015 பொருள் எண்.35

**பல்வேறு மருத்துவ பணிகள் – மருத்துவ அலுவலர்கள் (Medical Officers) ஒப்பந்த அடிப்படையில் வெளி நிறுவனங்கள் மூலமாக பணி அமர்த்துதல் – 28.11.2014 அன்று மின்னணு ஒப்பங்கள் பெறப்பட்டது – ஒப்ப கூர்ந்தாய்வு குழு (Tender scrutinizing Committee) ஒப்பத்தினை தீர்வு செய்து குறைந்த ஒப்பப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரை பரிந்துரை செய்து பெறப்பட்டது– ஒப்பத்தினை ஏற்க மன்றத்தின் பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறையில் 1 முதல் 15 மண்டல சுகாதார அலுவலகங்களில் உட்பட்ட பகுதிகளில் பல்வேறு மருத்துவ பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பொதுசுகாதாரத் துறைக்கான அலோபதி மருத்துவ அலுவலர்கள், மற்றும் சோனாலாஜிஸ்ட் (Medical Officers and Sonologist ) ஆகிய பதவிகள் முழுநேரம் மற்றும் பகுதி நேர பணிகளில் வெளி நிறுவனங்கள் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்திட குறுகிய கால மின்னணு ஒப்பம் (E- Short Tender) கோரப்பட்டு 28.11.2014 அன்று ஒப்பம் திறக்கப்பட்டு 5 ஒப்பங்கள் பெறப்பட்டு தொழில்நுட்ப ஒப்பத்தில் 2 ஒப்பந்ததாரர்கள் ஒப்ப கூர்ந்தாய்வு குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட 2 ஒப்பந்ததாரர்களின் நிதி ஒப்பங்கள் ஒப்ப கூர்ந்தாய்வு குழுவின் முன்னிலையில் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது.

| Sl.No | Description of the Work | No of Qty | Contractor Name & Addrss | |
|---|---|---|---|---|
| | | | XEAM VENTURES PVT LTD, | M/s.Falcon © Security Sevices Pvt.Ltd. |
| 1 | Medical Officer (Full Time) | 40 | 17312160 | 19680000 |
| 2 | Medical Officer (Part Time) | 100 | 31738800 | 24600000 |
| 3 | Sonologist | 8 | 4039488 | 5280000 |
| | **Total** | | **53090448** | **49560000** |

ஒப்பகூர்ந்தாய்வு குழுவானது இதன்மீது ஆய்வு செய்து,

1. நிதி ஒப்பத்தில் குறைந்த ஒப்பப்புள்ளி அளித்துள்ள **M/s.Falcon © Security Sevices Pvt.Ltd.** நிறுவனத்தின் நிதி ஒப்பத்தினை ஏற்றுகொள்ளவும், மற்றும் ஒப்பத்தில் கோரியுள்ள தகுதியுள்ள பணியாளர்களை, தகுதியின் அடிப்படையில் சென்னை மாநகராட்சிக்கு அளிக்க ஒப்புதல் கடிதம் பெறவும்,
2. அதிக நிதி ஒப்பம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் **XEAM VENTURES PVT LTD,** முன் வைப்புத் தொகையாக அளித்துள்ள வங்கி உத்திரவாதத்தினை திரும்ப வழங்கவும்,
3. குறைந்த ஒப்பப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு செய்ய கடிதம் பெறவும்.

ஒப்பகூர்ந்தாய்வு குழு பரிந்துரை செய்துள்ளது.

மேலும், ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு செய்ய கடிதம் 24.12.2014 அன்று ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு கோரியதில் ஒப்பந்ததாரர் ஏற்கெனவே தான் அளித்துள்ள விலைப்புள்ளியானது குறைவான விலைப்புள்ளியாக கருதுவதால் அதனை ஏற்குமாறு பதில் கடிதம் அளித்துள்ளார்.

எனவே

1. சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத் துறைக்கான அலோபதி மருத்துவ அலுவலர்கள், மற்றும் சோனாலாஜிஸ்ட் ( Medical Officers and Sonologist ) ஆகிய பதவிகள் முழுநேரம் மற்றும் பகுதி நேர பணிகளுக்கான ஒப்பம் கோரியதில், குறைந்த ஒப்பப்புள்ளி அளித்துள்ள **M/s.Falcon © Security Sevices Pvt.Ltd.** நிறுவனத்தின் ரூ.**4,95,60,000/-** (ரூபாய் நான்கு கோடியே தொண்ணூற்று ஐந்து லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பத்தினை ஏற்றுகொள்ளவும்,

2. குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரர் **M/s.Falcon © Security Sevices Pvt.Ltd.** அவர்களிடம் பிணைவைப்பு தொகை 2%க்கு ரூ.9,91,200/– (ரூபாய் ஒன்பது லட்சத்து தொண்ணூற்றோரயிரத்து இருநூறு மட்டும்) பெறுவதற்கும், மற்றும் ஒப்பந்தம் செய்வதற்கு அனுமதியும்,
3. இச்செலவினம் தேசிய நகர்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ள அனுமதியும்,
4. இதில் பொது மக்களுக்கு இச்சேவை அளிக்கப்பட வேண்டிய முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டும், அவசர அவசியம் கருதியும், பணி மேற்கொண்டதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பொதுசுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) ஒப்புதலுடன் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (சுகாதாரம்) வின் கூட்டம் 18.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண். 04/2015ன்படி நிலைக்குழு (சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண். 50/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>சு.து.ந.க.எண். பி1 /714 /2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.02.2015 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்.86/2015** **பொருள் எண்.36**

**<u>பொது சுகாதாரத்துறை – வீடற்றோருக்கான இரவு நேர காப்பகங்கள் – 28 காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருவது கூடுதலாக 42 காப்பங்கள் ஆரம்பித்தல்– சென்னை மாநகராட்சியில் புதியதாக காப்பங்கள் கட்டுவதற்கு – HUDCO நிறுவனத்திடமிருந்து நிதி உதவி பெறுவதற்கு அனுமதி.</u>**

சென்னை மாநகராட்சியில் 1 முதல் 15 மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் 28 வீடற்றோருக்கான காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. சென்னை மாநகராட்சியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இணைந்து 28 காப்பகங்களை செயல்படுத்தி வருகின்றன.

மாண்புமிகு மேயர் அவர்களின் 2012–2013 நிதிநிலை அறிக்கை எண்–46ல் அரசு மருத்துவமனைகளில் இதய நோய் சிகிச்சை பெறும் ஏழை எளிய நோயாளிகள் மற்றும் அவருக்கு உதவி புரியவரும் உதவியாளர்களுக்கு காப்பகங்கள் ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேயர் அவர்களின் 2012–2013 நிதிநிலை அறிக்கை எண்–47ல் சென்னை மாநகரில் கூடுதலாக 40 இரவு நேர காப்பகங்கள் ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாகராட்சியில் உச்சநீதிமன்ற உச்சநீதிமன்ற பேராணை. PUCL vs UOI wp no.196/2001 மற்றும் மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பின்படியும், ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு ஒரு காப்பகம் வீதம் சென்னை மாநகரில் உள்ள 70 லட்சம் மக்கள் தொகைக்கு, 70 காப்பகங்கள் துவங்க உத்தேசிக்கப்பட்டு, ஏற்கெனவே உள்ள 28 காப்பகங்களுடன் கூடுதலாக 42 வீடற்றோருக்கான இரவு நேர காப்பகங்கள் துவக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் தொடர் நடவடிக்கையாக, தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இருந்தும் சென்னையில் உள்ள பெரிய மருத்துவமனைகளுக்கு உயர் சிகிச்சைக்கென ஏழை எளிய மக்கள் அதிக அளவில் வருகின்றனர். இவர்களுடன் உதவிக்கென வரும் உறவினர் அல்லது உதவியாளர்களுக்கு போதுமான தங்கும் வசதி இன்றி அவதிப்படுகின்றனர். எனவே இவர்களுக்கு தங்கும் வசதி அளிக்க, கீழ்க்கண்ட அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே உள்ள தங்குமிடங்களை மாற்றி காப்பங்களாக அமைக்க உத்தேசிக்கப்பட்டு மன்றத்தீர்மான எண்.275/2014 நாள்.30.05.2014ல் 12 காப்பங்கள் ஏற்படுத்துவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

| வரிசை எண் | மருத்துவமனையின் பெயர் | புதியதாக அமைக்க உத்தேசிக்கப்பட உள்ள காப்பங்கள் |
|---|---|---|
| 1 | ஆர்எஸ்ஆர்எம் அரசு மருத்துவமனை | 2 |
| 2 | ஸ்டேன்லி அரசு மருத்துவமனை | 2 |
| 3 | அரசு குழந்தைகள் நல மருத்துவமனை | 2 |
| 4 | கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனை | 2 |
| 5 | ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை | 2 |
| 6 | ஐ ஓ ஜி | 2 |
| | மொத்தம் | 12 |

சென்னை மாநகராட்சியில் கூடுதலாக இரவு காப்பகங்கள் கட்டுவதற்கு HUDCO நிறுவனத்திடம் நிதி உதவி கோர தீர்மானிக்கப்பட்டு, கீழ்க்கண்ட 4 இடங்களில் கட்டிடங்கள் கட்டுவதற்கு திட்ட அறிக்கை (DPR) தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டது.

| வ எண் | மண்டலம் /கோட்டம் | இடம் | காப்பங் களின் எண்ணிக் கை | திட்ட மதிப்பீட்டுத் தொகை (லட்சத்தில்) | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (லட்சத்தில்) | முதல் தவணையாக அளிக்கப்பட்ட நிதி உதவி (லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14/186 | கார்பரேசன் ரோடு, பெருங்குடி | 1 | 43.00 | 38.65 | 23.19 |
| 2 | 5/50 | ஆர்எஸ்ஆர்எம் அரசு மருத்துவமனை | 1 | 43.00 | 39.00 | – |
| 3 | 5/52 | ஸ்டேன்லி அரசு மருத்துவமனை | 1 | 43.00 | 39.00 | – |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | 5/61 | அரசு குழந்தைகள் நல மருத்துவமனை | 1 | 43.00 | – | – |
| | | மொத்தம் | 4 | 172.00 | 126.65 | 23.19 |

மேற்கண்ட 4 காப்பகங்கள் கட்டுவதற்கு ரூ.172.00 லட்சம் நிதி உதவி கோரி HUDCO நிறுவனத்திற்கு பிரேரணை அனுப்பப்பட்டது. இதில் மூன்று காப்பகங்கள் கட்டுவதற்கு ரூ.126.65 லட்சம் சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதற்கட்டமாக மண்டலம்– 14க்கு ரூ.23.19 லட்சம் நிதி அளிக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள காப்பகங்கள் கட்டுவதற்கு திட்ட அறிக்கை தயாரித்து அளிக்கும் பட்சத்தில் தேவையான நிதி உதவி சென்னை மாநகராட்சிக்கு அளிக்க HUDCO நிறுவனம் பரிசீலிப்பதாக தெரிவித்துள்ளனர்.

எனவே,

1. இரவு காப்பகங்கள் கட்டுவதற்கு கட்டிடத்துறையின் மூலம் திட்ட அறிக்கை தயாரித்து அளித்து HUDCO நிறுவனத்திலிருந்து நிதி உதவி பெற நடவடிக்கை மேற்கொள்ள அனுமதியும்,
2. சென்னை மாநகராட்சிக்கு HUDCO நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட நிதியினை ஏற்றுக்கொள்ள அனுமதியும்,
3. HUDCO நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட நிதியிலிருந்து புதிய காப்பகங்களை கட்டிடத்துறை மூலமாக கட்டுவதற்கும் அனுமதியும்,
4. இரவு காப்பகங்கள் கட்டுவதற்கு HUDCO நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட நிதிக்கு கூடுதலாக தேவைப்படும் செலவினத்தினை சென்னை மாநகராட்சி தன்னிறைவு திட்ட நிதியிலிருந்து (Self Sufficient Scheme) மேற்கொள்ள அனுமதியும்,
5. சென்னை மாநகராட்சி HUDCO நிறுவனத்திடம் ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (சுகாதாரம்) வின் கூட்டம் 18.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண். 03/2015ன்படி நிலைக்குழு (சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண். 49/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**சு.து.ந.க.எண். பி1 /4365 /2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.02.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.87/2015 **பொருள் எண்.37**

**பொது சுகாதாரத்துறை – வீடற்றோருக்கான இரவு நேர காப்பகங்கள் – 28 காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருவது கூடுதலாக 42 காப்பங்கள் ஆரம்பிக்க 22 விண்ணப்பங்கள் பெறப்பட்டது – காப்பக ஆலோசனைக்குழு–காப்பகங்கள் அமைக்க 7 புதிய தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் 8 இரவு காப்பகங்கள்புதியதாக அமைக்க பரிந்துரை செய்யப்பட்டது – இந்த தொண்டு நிறுவனங்கள் மூலம் 8 காப்பங்கள் அமைக்க அனுமதி**

சென்னை மாநகராட்சியில் 1 முதல் 15 மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் 28 வீடற்றோருக்கான காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. சென்னை மாநகராட்சியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இணைந்து 28 காப்பகங்களை செயல்படுத்தி வருகின்றன. உச்சநீதிமன்ற பேராணை. PUCL vs UOI wp no.196/2001ன்படி ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு ஒரு காப்பகம் வீதம் சென்னை மாநகராட்சி 70 காப்பகங்கள் துவங்க உத்தேசிக்கப்பட்டு, இந்த 28 காப்பகங்களுடன் கூடுதலாக 42 வீடற்றோருக்கான இரவு நேர காப்பகங்கள் துவக்கப்பட வேண்டியுள்ளது.

சென்னை மாநகராட்சியில் துவங்கப்பட உள்ள புதிய காப்பகங்கள் நிர்வகிக்க 21 புதிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களிலிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. ஏற்கனவே வீடற்றோருக்கான காப்பங்கள் நடத்தி வரும் 1 தன்னார்வ தொண்டு நிறுவனம் கூடுதலாக வீடற்றோருக்கான காப்பகங்கள் பராமரிக்க கோரியுள்ளனர்.

**புதியதாக விண்ணப்பங்கள் அளித்துள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் விவரம்**

| வ. எண் | தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | எந்தவகையான காப்பங்கள் நிர்வகித்து வருகின்றனர் | முன் அனுபவம் | பதிவு எண்/ஆண்டு விவரம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | **பார்டிசிபேட்டரி லெர்னிங் ஆக்சன் நெட் வொர்க் & டிரெனிங் டிரஸ்ட் எண்.52எ, ஒரகடம் ரோடு, வெங்கட்டாபுரம் Participatory learning action network and training trust(PLANT)** எண்.52எ, ஒரகரம் ரோடு, வெங்கடாபுரம், அம்பபத்தூர், சென்னை–57 | பெண்கள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு | 5ஆண்டுகள் | 1349/1999 | |
| 2 | **வெல்பர் ஆப் ஆர்பன் அன்டு ரூரல் லீட் டெவலப்மெண்ட் டிரஸ்ட், World – Welfare of orphan &rural lead development trust** எண்.5, நேரு நகர் 3வது தெரு, அம்பத்தூர், சென்னை –53 | பெண்கள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு | – | 169/2003 | |
| 3 | **கேர் பார் சில்ரன்(Care for Childeren)எண்.24/2,2**வது தெரு, பள்ளாளர் தெரு, கோடம்பாக்கம், சென்னை–24 | குழந்தைகள் பராமரிப்பு | – | 63/2013 | |
| 4 | **ரியல் சேரிட்டபிள் டிரஸ்ட், Real charitable trust** எண்.297, 2வது தெரு, வியாசர்பாடி, சென்னை–39 | ஆண்கள் மற்றும் பெண்கள் | – | 4445/2007 | |
| 5 | **சோசியல் ஆக்சன் பார் வேல்யூ எஜூகேசன் டிரஸ்ட், Social action for value education (SAVE) Trust** எண்.19, 1வது மெயின் ரோடு, சின்னைய்யா நியூ காலனி, பெரம்பூர், சென்னை–11 | குடிசை பகுதி குழந்தைகள்/ ஆண்கள்/பெண்கள்/ முதியயோர் பராமரித்தல் | 11 ஆண்டுகள் | 715/2013 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | **இனிய உதயம் சேரிட்டபிள் டிரஸ்ட், Iniya Udaiyam Charitable Trust** எண்.418 MIGTNHB, அக்ரகாரம் தெரு, ஆவடி, சென்னை—54 | குழந்தைகள் பராமரித்தல் | 10 ஆண்டுகள் | 64/2004 | |
| 7 | **ரைட்ஸ் இண்டகிரேட்டட் பார் ஜெண்டர் உறியூமனிடேரியன் சர்வீஸ், Rights integrated forGender humanitarian service (RIGHTS)** எண்.52எ, ஒரகரம் ரோடு, அம்பத்துார், சென்னை—53 | குழந்தைகள் பராமரித்தல் | — | 611/2003 | |
| 8 | **பாரத மாதா பேமிலி வெல்பர் பவுண்டேசன், Bharatha Madha Family Welfare Foundation** எண்.24/2, 2 வது மாடி, வெள்ளாளர் தெரு, கோடம்பாக்கம், சென்னை—24 | முதியோர்கள், கைவிடப்பட்ட பெண்கள் பராமரித்தல் | 25 ஆண்டுகள் | 41/1992 | |
| 9 | **ரீகேபிடேசன் இம்ருமெண்ட் த்துரு செல்ப் எம்ளாய்மெண்ட், Rehabilitation &improvement Through self employment(rise)** எண்.6/2, LIG பிளாட், 86 வது தெரு, அசோக் நகர், சென்னை—83 | பெண்கள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு | — | 88/1994 | |
| 10 | **டான் போஸ்கோ அன்பு இல்லம் சோசியல் சர்வீஸ் சொசைட்டி, Don bosco Anbu illam, Social service society**, எண். 25, குழந்தை தெரு, பார்க் டவுன், சென்னை—3 | குழந்தைகள் பராமரிப்பு | 29 ஆண்டுகள் | 34/1986 | இரண்டு காப்பகங் கள் நடத்த கோரியுள் ளனர் |
| 11 | **பயனீர் டிரேட், Pioneer trade** எண்.10/2, புதிய எண்.31, முதல் தெரு, கிருஷ்ணதாஸ் ரோடு, மங்களபுரம், சென்னை—12 | பெண்கள் மற்றும் முதியோர் | — | 189/1993 | |
| 12 | **சொசைட்டி பார் விமன் எம்பவர்மெண்ட் அன்டு டெவலப்மெண்ட் எஜுகேசன், Society for women empowerment &development education (sweden)** எண்.9 படவேட்டம்மன் கோயில் தெரு, விண்ணரசி மாதா சர்ச் எதிர் தெரு, சிந்தாரிபேட்டை, சென்னை—2 | பெண்கள் மற்றும் குழந்தைகள் | 10 ஆண்டுகள் | 239/1992 | |
| 13 | **எஸ் ஐ பி மெமோரியல் டிரஸ்ட், SIP Memorial Trust** எண்.7, காவங்கரை தெரு, நமச்சிவாயபுரம் மேற்கு, சூளை மேடு,சென்னை—39 | திருநங்கைகள் (முதியோர்) & HIV patients treatment and management | — | 687/2003 | |
| 14 | **காந்தி எஜுகேசனல் டிரஸ்ட், Gandhi Educational Trust** எண்.169/11, என்எஸ்என் டவர், பேராவூரணி, தஞ்சாவூர் | (முதியோர்பராமரித்தல்) HIV patients treatment and management | — | 106/2009 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | **சோசியோ எக்கனாமிக் எஜுகேசன் அன்டு ரீகேபிடேசன் சொசைட்டி, Socio economic education and rehabitation society** எண்.26/27 எஸ் எம் நகர், வியாசர்பாடி, சென்னை–39 | குழந்தைகள் பராமரிப்பு | – | 158/1994 | |
| 16 | **ஹோப் பப்ளிக் சேரிட்டபிள் டிரஸ்ட், Hope public charitable trust** எண்.6பி, 26 சாரங்கபாணி தெரு, கிருஷ்ணாபுரம், அம்பத்துார் (OT), கிருஷ்ணாபுரம், சென்னை–53 | ஆண்கள் மற்றும் பெண்கள் பராமரிப்பு | 8 ஆண்டுகள் | 1125/2007 | |
| 17 | **நியூ லைப் சோசியல் வெல்பர் சென்டர், New life social welfare centre** எண்.32, அண்ணா தெரு, அத்திப்பட்டு, அம்பத்துார் இன்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை–53 | தொழிற்சாலை குழந்தைகளுக்கான சிறப்பு பள்ளி | 4 ஆண்டுகள் | 20/1994 | |
| 18 | **பெரோசிகா சோசியல் சர்வீஸ் கில்டு, Bro.Siga Social Service Guild** எண். 29/16எல், காமராஜர் அவென்யூ, 1 வது பள்ளர் தெரு, வியாசர்பாடி, சென்னை–39 | பெண்கள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு | – | 71/1988 | |
| 19 | **குட் ஷெப்பர்ட் சேரிட்டபிள் டிரஸ்ட், Good Shepherd Charitable Trust** எண்.9, புஸ்பா நகர் மெயின் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை–34 | – | – | 284/1994 | |
| 20 | **அப்லிப்மெண்ட் ஆப் டெமோகிரேட்டிவ் அன்டு வில்லேஜ் இம்ருவ்மெண்ட் சொசைட்டி, Upliftment of democratic and village improvement society (UDAVI)** எண்.8/2, வவூசி நகர், 1வது மெயின் ரோடு,அண்ணா நகர், சென்னை–102 | தெருவோர குழந்தைகள் மற்றும் பணிபுரியும் குழந்தைகள் பராமரிப்பு | 7 ஆண்டுகள் | 138/1993 | |
| 21 | **சுடரொளி பெண்கள் முன்னேற்ற சங்கம், Sudarolipengal munnetra Sangam (Spms)** எண்.78, PWD தெரு, செங்குன்றம், சென்னை–52 | பெண்கள் குழந்தைகள் பராமரிப்பு | 7 ஆண்டுகள் | 101/2012 | |

**<u>ஏற்கனவே சென்னை மாநகராட்சியில் காப்பகங்கள் நடத்தி வரும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் கூடுதலாக காப்பகங்கள் நடத்த கோரி பெறப்பட்ட விண்ணப்பங்களின் விவரம்</u>**

| வ. எண் | தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | எந்தவகையான காப்பங்கள் நிர்வகித்து வருகின்றனர் | ஏற்கெனவே காப்பகங்கள் நடத்தி வரும் மண்டலம் | பதிவு எண்/ ஆண்டு விவரம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | **இண்டியன் கம்யூனிட்டி வெல்பர் ஆர்கனிசேசன், Indian community welfare organization (ICWO),** எண். AB /216, 18வது மெயின் ரோடு, 1 வது பிளாக், 6வது தெரு, | முதியோர்கள் காப்பகம் (ஆண்கள் மற்றும் பெண்கள்) | 6 | 281/1994 | கூடுதலாக ஒரு இரவுநேர காப்பகம் கோரியுள்ளனர். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வள்ளலார் காலனி, அண்ணா நகர்(மேற்கு) சென்னை—40 | | | | |

இது சம்பந்தமாக முடிவெடுக்க காப்பக ஆலோசனை குழு (Shelter Advisory Committee) வில் கீழ்க்கண்டவர்களை கொண்டு இரவு நேர காப்பகங்கள் புதியதாக ஆரம்பிக்க 23.01.2015 அன்று ஆலோசனை கூட்டம் கூட்டப்பட்டது.

| வ. எண் | காப்பக ஆலோசனை குழு | | பதவியின் பெயர் |
|---|---|---|---|
| 1 | டாக்டர்.M. ஜெகதீசன் | மாநகர நல அலுவலர்(பொ) ( City Health Officer( i/c) ) | தலைவர் |
| 2 | டாக்டர். S.மணி | கூடுதல் மாநகர நல அலுவலர் (Addl. City Health Officer) | உறுப்பினர் |
| 3 | டாக்டர்.எ.சரஸ்வதி | கூடுதல் மாநகர நல அலுவலர் (Addl. City Health Officer) | உறுப்பினர் |
| 4 | செல்வி.வனிஷா பீட்டர் | மக்கள் நல சங்க உறுப்பினர் (Civil Society representative) | உறுப்பினர் |
| 5 | திருமதி. வைஜெயந்தி | மக்கள் நல சங்க உறுப்பினர் (Civil Society representative) | உறுப்பினர் |
| 6 | திரு.அருள் சகாயம் | சமூக சேவகர் ( Social worker who are working in the field of urban homeless) | உறுப்பினர் |
| 7 | திரு. சைலேஷ் (Architect/Urbanist ) | சமூக சேவகர் | உறுப்பினர் |
| 8 | செல்வி. சாரா | குழந்தை நலக்குழு உறுப்பினர் ( Member of Child welfare committee) | உறுப்பினர் |
| 9 | செல்வி. அஸ்பி (CWC member) | குழந்தை நலக்குழு உறுப்பினர் ( Member of Child welfare committee) | உறுப்பினர் |

காப்பக ஆலோசனை குழு (Shelter Advisory Committee) பெறப்பட்ட விண்ணப்பங்களை சூர்ந்தாய்வு செய்து, மனுதாரரின் முன்அனுபவம், காப்பக மேலாண்மை திறமை, நன்கொடை மேலாண்மை, கடந்த கால நிதி மேலாண்மை, அரசு திட்டங்களை செயல்படுத்திய முன் அனுபவம் மற்றும் நிலைப்புத்தன்மை (Sustainability) ஆகியவற்றினை கொண்டு கீழ்க்கண்ட தன்னார்வு தொண்டு நிறுவனங்களை தேர்ந்தெடுக்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | எந்தவகையான காப்பங்கள் நிர்வகித்து வருகின்றனர் | முன் அனுபவம் | பதிவு எண்/ ஆண்டு விவரம் | காப்பக ஆலோசனை குழு பரிந்துரை விவரம் |
|---|---|---|---|---|---|
| 1 | **பார்டிசிபேட்டரி லெர்னிங் ஆக்சன் நெட் வொர்க் & டிரெனிங் டிரஸ்ட் எண்.52எ, ஒரகடம் ரோடு, வெங்கட்டாபுரம் Participatory learning action network and training trust(PLANT)** எண்.52எ, ஒரகரம் ரோடு, வெங்கடாபுரம், அம்பபத்துார், சென்னை—57 | பெண்கள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு | 5 ஆண்டுகள் | 1349/1999 | ஒரு இரவு காப்பகம் வழங்கலாம் என பரிந்துரை செய்யப்படுகிறது . |
| 2 | **இனிய உதயம் சேரிட்டபிள் டிரஸ்ட், Iniya Udaiyam Charitable Trust** எண்.418 MIGTNHB, அக்ரகாரம் தெரு, ஆவடி, சென்னை—54 | குழந்தைகள் பராமரித்தல் | 10 ஆண்டுகள் | 64/2004 | ஒரு இரவு காப்பகம் வழங்கலாம் என பரிந்துரை செய்யப்படுகிறது . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | **டான் போஸ்கோ அன்பு இல்லம் சோசியல் சர்வீஸ் சொசைட்டி, Don bosco Anbu illam, Social service society**, எண். 25, குழந்தை தெரு, பார்க் டவுன், சென்னை–3 | குழந்தைகள் பராமரிப்பு | 29 ஆண்டுகள் | 34/1986 | இரண்டு குழந்தை காப்பங்கள் வழங்கலாம் என பரிந்துரை செய்யப்படுகிறது |
| 4 | **ஹோப் பப்ளிக் சேரிட்டபிள் டிரஸ்ட், Hope public charitable trust** எண்.6பி, 26 சாரங்கபாணி தெரு, கிருஷ்ணாபுரம், அம்பத்தூர் (OT), கிருஷ்ணாபுரம், சென்னை–53 | ஆண்கள் மற்றும் பெண்கள் பராமரிப்பு | 8 ஆண்டுகள் | 1125/2007 | ஒரு இரவு காப்பகம் வழங்கலாம் என பரிந்துரை செய்யப்படுகிறது. |
| 5 | **நியூ லைப் சோசியல் வெல்பர் சென்டர், New life social welfare centre** எண்.32, அண்ணா தெரு, அத்திப்பட்டு, அம்பத்தூர் இன்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை–53 | தொழிற்சாலை குழந்தைகளுக் கான சிறப்பு பள்ளி | 4 ஆண்டுகள் | 20/1994 | ஒரு இரவு காப்பகம் வழங்கலாம் என பரிந்துரை செய்யப்படுகிறது. |
| 6 | **அப்லிப்மெண்ட் ஆப் டெமோகிரேட்டிவ் அன்டு வில்லேஜ் இம்ருவ்மெண்ட் சொசைட்டி, Upliftment of democratic and village improvement society (UDAVI)** எண்.8/2, வஊசி நகர், 1வது மெயின் ரோடு,அண்ணா நகர், சென்னை–102 | தெருவோர குழந்தைகள் மற்றும் பணிபுரியும் குழந்தைகள் பராமரிப்பு | 7 ஆண்டுகள் | 138/1993 | ஒரு இரவு காப்பகம் வழங்கலாம் என பரிந்துரை செய்யப்படுகிறது. |

**ஏற்கனவே சென்னை மாநகராட்சியில் காப்பகங்கள் நடத்தி வரும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் கூடுதலாக காப்பங்கள் நடத்த பரிந்துரை விவரம்**

| வ. எண் | தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | எந்த வகையான காப்பங்கள் நிர்வகித்து வருகின்றனர் | ஏற்கெனவே காப்பகங்கள் நடத்தி வரும் மண்டலம் | பதிவு எண்/ ஆண்டு விவரம் | பரிந்துரை விவரம் |
|---|---|---|---|---|---|
| 1 | **இண்டியன் கம்யூனிட்டி வெல்பர் ஆர்கனிசேசன், Indian community welfare organization (ICWO),** எண். AB /216, 18வது மெயின் ரோடு, 1 வது பிளாக், 6வது தெரு, வள்ளலார் காலனி, அண்ணா நகர்(மேற்கு) சென்னை–40 | முதியோர்கள் காப்பகம் (ஆண்கள் மற்றும் பெண்கள்) | 6 | 281/1994 | கூடுதலாக ஒரு இரவு காப்பகம் வழங்கலாம் என பரிந்துரை செய்யப்படுகிறது. |

எனவே,

1. சென்னை மாநகராட்சியில 1 முதல் 15 மண்டலங்களிலும் மேலும் கூடுதலாக வீடற்றவர்களுக்கான 42 காப்பகங்களை ஆரம்பிக்க காப்பக ஆலோசனை குழு **(Shelter - Advisory Committee)** மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ள 6 புதிய தன்னார்வ தொண்டு நிறுனங்களுக்கு சென்னை மாநகராட்சியில் 7 புதிய காப்பகங்கள் அமைக்க அனுமதியும்,
2. ஏற்கனவே சென்னை மாநகராட்சியில் காப்பகம் நடத்தி வரும் 1 தொண்டு நிறுவனத்தின் மூலமாக கூடுதலாக 1 காப்பகம் அமைக்க அனுமதியும்,

3. மொத்தம் 8 காப்பகங்களை (மண்டலம் 1 முதல் 15 வரை) தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நிர்வகிக்க ஒராண்டிற்கு 2015–2016 நிதி ஆண்டில் தோராய செலவினமாக ஒரு காப்பகத்திற்கு ரூ.13,60,000/– வீதம் காப்பகங்களுக்கு (8 x13,60,000= 1,08,80,000) ரூ. 1,08,80,000/– (ரூபாய் ஒரு கோடியே எட்டு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்ய அனுமதியும்,
4. இதற்கான செலவினம் சென்னை மாநகராட்சி மூலதன நிதியில், பிரிவு குறியீடு எண். 30–35–01 மற்றும் கணக்கு குறியீடு எண். 230–20–21–00 ன் கீழ், நிதி ஆலோசகர் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) ஒப்புதலுடன் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (சுகாதாரம்) வின் கூட்டம் 18.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண். 05/2015ன்படி நிலைக்குழு (சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண். 51/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.5.ந.க.எண்.இ4/ 10532/2014**
**முதன்மைச்செயலர் / ஆணையர் அவர்களின் 31.12.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.88/2015 **பொருள் எண்.38**

**தானப் பத்திரம்**

திரு. சி.எஸ். சுந்தரவதனம் பழைய எண்.47/76, புதிய எண்.46, அருணாசலம் சாலை, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை–2 S.No.298, பிளாக் எண்.6, சிந்தாதிரிப்பேட்டை கிராமத்தில் குடியிருப்பு கட்டிடம் கட்ட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மண்டலம்–5ல் விண்ணப்பித்துள்ளார். அவர் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தை ஒட்டிய அருணாசலம் சாலை "சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம்–II"ன் மூலம் இச்சாலையை 10.42மீட்டர் அகலத்திலிருந்து 15.00 மீட்டர் அகலமாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். இதில் மனையின் உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக 7.92 மீட்டர் அகலத்திற்கும் 2.29 மீட்டர் நீளத்திற்கும் இடத்தினை தானபத்திரம் மூலம் மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். இது சம்பந்தமாக கட்டிட உரிமையாளர் அவர்கள் தனது மனையின் முன் பக்கத்தில் 7.92மீ அகலத்திற்கு 2.29மீ நீளத்திற்கும் 19.50 ச.மீ பரப்பளவு நிலத்தினை தானமாக கொடுக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும், அவர் வழங்கிய தானபத்திரத்தின் வரைவை வார்டுகுழு, மண்டலம்–5ல் பரிந்துரை செய்து 10.10.2013 அன்று தீர்மானம் (தீர்மான எண்.58) நிறைவேற்றப்பட்டது.

எனவே,

1. கட்டிட உரிமையாளர் திரு.சி.எஸ்.சுந்தரவதனம் அவர்களின் மூலம் இசைவு பெற்ற தானபத்திரம் மூலம் 19.50 ச.மீ பரப்பளவு நிலத்தினை S.No.298, பிளாக் எண்.6, சிந்தாதிரிப்பேட்டை கிராமத்தில் சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெறவும்,
2. தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனம் ரூ.10,000/–ஐ கட்டிட உரிமையாளரிடம் "ஆணையர், சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் காசோலையாக பெறவும்,
3. கட்டிட உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு "வளர்ச்சி உரிமை சான்றிதழை" சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டம் 16.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மானஎண்.06/2015–ன்படி நிலைக்குழு(நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>ம.து.ந.க.எண்.பி1/1335/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.02.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.89/2015 **பொருள் எண்.39**

**<u>மாண்புமிகு மேயர் அவர்கள் 21.11.2014 அன்று தி கிராண்ட் நியூ டெல்லியில் நடைபெற்ற "Second India Today Group Best Cities Award" விழாவில் கலந்து கொண்டமைக்கு பின்னேற்பு அனுமதி</u>**

இந்தியா டுடே குருப் பத்திரிக்கை ஆசிரியர் திரு.காவேரி பம்சாய் அவர்கள் சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் அவர்களை 21.11.2014 அன்று நடைபெறவுள்ள "**Second India Today Group Best Cities Award**" விழாவில் கலந்து கொள்ளுமாறு 08.11.2014 நாளிட்ட மின்னஞ்சல் கடிதம் மூலம் அழைப்பு விடுத்தார்.

மாண்புமிகு மேயர் அவர்கள் மேற்படி விருது வழங்கும் விழாவில் கலந்து கொள்வதற்காக அரசாணை நிலை எண்.168, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(தேர்தல்) துறை, நாள்.20.11.2014ன்படி அனுமதி வழங்கப்பட்டது.

மேற்படி அரசாணையில் மாண்புமிகு மேயர் அவர்கள் 21.11.2014 அன்று நடைபெறும் "**Second India Today Group Best Cities Award**" The Grand, New Delhi விருது வழங்கும் விழாவில் கலந்து கொள்ளவும், இந்நிகழ்விற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறவேண்டும் என அரசாணையில் தெரிவிக்கப்பட்டது.

இப்பயணத்திற்கான வானூர்தி மற்றும் பயணச்செலவு தொகையினை மாண்புமிகு மேயர் அவர்கள் அவருடைய சொந்த செலவிலேயே மேற்கொண்டார்.

எனவே, மேற்கண்ட அரசாணையின்படி மாண்புமிகு மேயர் அவர்கள் 21.11.2014 அன்று புதுடெல்லி நகரில் நடைபெற்ற "**Second India Today Group Best Cities Award**" The Grand, New Delhi விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்டதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) ஒப்புதலுடன் மன்றத்தின் தகவலுக்காகவும் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண். 52/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

*******

**வ.து.ந.க.எண்.எம்2/9536 /2014.**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்18.02.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.90/2015 **பொருள் எண்.40**

**சென்னை மாநகராட்சி – வருவாய் துறை – விளம்பரவரி – பேருந்து நிறுத்துமிடங்கள்– விளம்பரங்கள் செய்ய அனுமதி**

சென்னை மாநகர முனிசிபல் சட்டம், 1919, பிரிவு எண்.415–ன்படி, சென்னை மாநகராட்சியால் பொதுமக்களின் நலன் கருதி ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் பேருந்து நிறுத்துமிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

சென்னை மாநகர முனிசிபல் சட்டம், 1919, பிரிவு எண்.223எ–ல், சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் விளம்பரங்களை மேற்கொள்ளும் வகையில் வழிவகையினை ஏற்படுத்திக்கொள்ளவும், இவ்விடங்களில் விளம்பரங்களை செய்ய, கட்டணத்தினை வசூலித்துக்கொண்டு அனுமதி வழங்கிடவும் சென்னை மாநகராட்சிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் நான்காவது நிதிக்குழுவின் பரிந்துரை எண்.37ல், உள்ளாட்சி அமைப்புகளின் சட்டப்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள வழிவகைகளை பயன்படுத்தி, விளம்பரங்கள் மூலமாக, உள்ளாட்சி அமைப்புகள் தங்களது வருவாயினை பெருக்கிக்கொள்ளலாம் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இப்பரிந்துரையானது தமிழக அரசால் ஏற்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிறுத்துமிடங்களில் விளம்பரப்பலகைகளை வைக்க அனுமதி வழங்குவதன் மூலம், அனுமதிக் கட்டணம் மூலமாகவும், விளம்பர வரி மூலமாகவும் சென்னை மாநகராட்சிக்கான வருவாயினை பெருக்கிடலாம்.

சேவை வரித் துறையின், 22.06.2006 நாளிட்ட கடிதத்தில், விளம்பரங்கள் செய்வதற்கான இடத்தினை ஒதுக்கீடு செய்யும் நிகழ்வில், சேவைவரியினையும் சேர்த்து வசூலிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1) சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிறுத்துமிடங்களில் விளம்பரப்பலகைகளை மூன்று ஆண்டு காலத்திற்கு வைத்துக்கொள்ள பொது ஏல முறையினை பின்பற்றி அனுமதி வழங்கிடவும்,
2) அனுமதிக் கட்டணம், சேவை வரி மற்றும் விளம்பரப்பலகைகளில் மேற்கொள்ளப்படும் விளம்பரங்களுக்கு விளம்பரவரி ஆகியவற்றை விதிகளின்படி வசூலித்திடவும்,
3) சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிறுத்துமிடங்கள்அமைந்துள்ள பகுதிகளை பார்வையிட்டு, விளம்பரப்பலகைகளை வைப்பது குறித்து சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்து, விரிவான அறிக்கையினை தயாரித்திட, ஒரு கலந்தாலோசகரை (consultant/consulting service) (also through TNUIFSL) சட்டப்படி நியமித்திடவும்

மேற்கண்ட 1 முதல் 3 வரையிலுள்ள இனங்களுக்கு நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.02.2015 அன்று தீர்மான எண். 48/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.வ.அ.ந.க.எண்.எ1/1679/2014**
**: முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 26.02.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.91/2015 **பொருள் எண்.41**

**மத்திய வட்டார அலுவலகத்திற்குட்பட்ட மண்டலம்–6 முதல் 8 வரை உள்ள தெருக்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட திடக்கழிவுகளை பயன்படுத்தி இந்திய அரசின் பாபா அணு ஆராய்ச்சி நிறுவனத்தின் (BARC) தொழில்நுட்பம் மூலம் மின் உற்பத்தி செய்யும் பணியை வானகரம் தெருவில் உள்ள மயான பூமியில் இருந்து அத்திப்பட்டு குப்பை கொட்டும் வளாகத்திற்கு இடமாற்றம் செய்ததற்கு பின்னேற்பு அனுமதி**

மத்திய வட்டார அலுவலகத்திற்குட்பட்ட மண்டலம்–6 முதல் 8 வரை உள்ள கோட்டங்களில் உள்ள உணவகங்கள், அடுக்குமாடி குடியிருப்புகளில் பெறப்படும் குப்பைகளை கொடுங்கையூரில் உள்ள குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டாமல், இக்குப்பைகளை Bio-gas மூலம் மின் உற்பத்தி செய்ய Bio methanation Plant கீழ்க்கண்ட இடங்களில் நிறுவப்பட மன்ற தீர்மானம் எண்.215/2014, நாள்.25.02.2014ல் பெறப்பட்டது.

1. மண்டலம்–8ல் கோட்டம்–101ல் நியூ ஆவடி சாலையில் உள்ள வேலங்காடு மயான பூமி
2. மண்டலம்–8ல் கோட்டம்–104ல் பரிக்ளின் சாலையில் உள்ள ஓட்டேரி மயான பூமி
3. மண்டலம்–7ல் கோட்டம்–85ல் வானகரம் தெருவில் உள்ள மயான பூமி

மேற்கண்ட Bio methanation Plant ஐ இந்திய அரசின் பாபா அணு ஆராய்ச்சி நிறுவனக்குழு (BARC) ஆய்வு செய்ததில், வானகரம் தெருவில் உள்ள மயான பூமி சிறிய இடமாக இருப்பதாலும், Bio methanation Plant அமைக்க ஏதுவாக இல்லை என்றும், அத்திப்பட்டு குப்பை கொட்டும் வளாகத்தை தேர்வு செய்யப்பட்டு அவ்விடத்திலேயே பணியை தொடங்க அக்குழுவினரின் பரிந்துரையை ஏற்று மாற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எனவே, Bio-gas மூலம் மின் உற்பத்தி செய்ய Bio methanation Plantயை மண்டலம்–7 கோட்டம்–85ல் வானகரம் தெருவில் உள்ள மயான பூமிக்கு பதிலாக மண்டலம்–7 கோட்டம்–86ல் உள்ள அத்திப்பட்டு குப்பை கொட்டும் வளாகத்திற்கு மாற்றப்பட்டதற்குநிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)யின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 26.02.2015 அன்று தீர்மான எண்.43/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 26.02.2015 அன்று தீர்மான எண்.54/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

<u>**ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/1901/2009**</u>

<u>**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 26.02.2015 நாளிட்ட குறிப்பு**</u>

தீர்மான எண்.92/2015 **பொருள் எண்.42**

<u>**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – சிப்பம்6 – வேளச்சேரி மற்றும் அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு பணிகளுக்கு மூன்றாம் நபர்தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு ஒப்பம் – பணி கால நீட்டிப்பு வழங்க அனுமதி**</u>

சிப்பம்–6 வேளச்சேரி மற்றும் அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்வழிக்கால்வாய்கள் அமைக்கும் பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தரக்காட்டுப்பாட்டிற்கு திருவாளர்கள் எஸ்.ஜி.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 04.01.2011 அன்று பணி ஒப்புகை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பக்காலம் 24 மாதங்கள், அதாவது 03.01.2013ற்குள் வரையாகும்.

சிப்பம்–6 வேளச்சேரி மற்றும் அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் வேளச்சேரி மற்றும் அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகள் முடிவடையாததாலும் இப்பணிகளுக்கு டிசம்பர்' 2013 வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதால், மூன்றாம் தர உறுதி மற்றும் தர கட்டுப்பாடு செய்வதற்கும் 31.12.2013 வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

26.07.2013 அன்று நடைபெற்ற மன்ற தீர்மன எண்.480/2013ன்படி சிப்பம்–6 வேளச்சேரி மற்றும் அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்வழிக்கால்வாய்கள் அமைக்கும் பணியிடங்களில் நீர்வழிக்கால்வாய்களில் ஆக்கிரமிப்பு, சில இடர்பாடுகளின் காரணமாக அடையாறு நீர்ப்பிடிப்பு பணிகளுக்கு செப்டம்பர்' 2014 வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதால் மூன்றாம் தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடுற்கும் கால நீட்டிப்பு 30.09.2014 வரை வழங்கப்பட்டது.

சிப்பம்–6 வேளச்சேரி மற்றும் அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய்கள் அமைக்கும் பணியிடத்தில் நீர்வழிக்கால்வாய்களில் ஆக்கிரமிப்பு மற்றும் சில இடங்களில் மழைநீர் வடிகால்வாயில் கழிவுநீர் தொடர்ச்சியாக செல்வது போன்ற காரணங்களுக்காக இப்பணியினை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரருக்கு மார்ச்' 2015 வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதால், மூன்றாம் தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடுற்கும் கால நீட்டிப்பு வழங்க கோரியுள்ளனர்.

அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகள் முடிவடையாததாலும் அடையாறு நீர்ப்பிடிப்பில் நீர்வழிக்கால்வாய் பணிக்கு மார்ச்' 2015 வரை காலநீட்டிப்பு வழங்க மன்றத்தின் மூலம் அனுமதி பெறப்பட்டுள்ளதால், மூன்றாம் தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு செய்வதற்கு திருவாளர்கள் எஸ்.ஜி.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு 01.10.2014 முதல் 31.03.2015 வரை பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே, திருவாளர்கள் எஸ்.ஜி.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்ப விதிகளின் கீழ், சிப்பம் 6 வேளச்சேரி மற்றும் அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுப்பாட்டிற்கு 01.10.2014 முதல் 31.03.2015 வரை பணி கால நீட்டிப்பு வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 26.02.2015 அன்று தீர்மான எண்.44/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 26.02.2015 அன்று தீர்மான எண்.55/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.8.வ.து.ந.க.எண்.ஆர்1/ 0595 /2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.02.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.93/2015 **பொருள் எண்.43**

**மண்டலம்–8, வார்டு எண் 101 புதிதாக கட்டப்பட்ட கலையரங்கம்–பொது மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிக்க வாடகை நிர்ணயம் செய்ய அனுமதி**

சென்னை மாநகராட்சி மண்டலம்–8 வார்டு எண் 101, 8வது குறுக்கு தெரு, செனாய் நகர், சென்னை–30ல் சென்னை மாநகராட்சியால் புதிதாக கட்டப்பட்டுள்ள கலையரங்கம் (Auditorium) கட்டுமானப் பணிகள் நிறைவடைந்து பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது. இக்கலையரங்கம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் அதற்கான வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

கலையரங்கத்தின் அளவுகள் விவரம்:– (As per FSI)

| விவரம் | SQMT | SQFT | தன்மை |
|---|---|---|---|
| மொத்த நில அளவு | 12,446.35 | 1,33,973 (1,33,918) | |
| கீழ் தளம் | 1847.80 | 19,890 (19,882.32) | கார் நிறுத்துமிடம் |
| தரை தளம் | 1847.80 | 19,890 (19,882.32) | குளிரூட்டப்பட்ட அரங்கம் |
| இடைப்பட்ட தளம் | 398.17 | 4,286 (4,284.30) | |
| முதல் தளம் | 1,847.80 | 19,890 (19,882.32) | குளிரூட்டப்படாத அரங்கம் |
| மொத்தம் | 5,943.86 | 63,956 (63,955.93) | |

கட்டிடத்தின் இதர விவரங்கள்:–

அடிதளம்:– இப்பகுதி சுமார் 19,890 சதுர அடி அளவில் வாகனம் நிறுத்த ஏதுவாக வசதி செய்யப்பட்டுள்ளது.

தரைதளம்:- தரை தளத்தில் 896 இருக்கைகள் பொருத்தப்பட்டு அறை முழுவதும் குளிர் சாதன வசதி செய்யப்பட்டுள்ளது.

முதல் தளம்:– இப்பகுதி 19,890 சதுர அடியில் கூடமாக கட்டப்பட்டுள்ளது. இப்பகுதி உணவு கூடமாக பயன்படுத்தலாம், இதற்கு தளவாடப் பொருட்கள் ஏதும் இல்லை.

மேற்படி கலையரங்கத்திற்கு வாடகை நிர்ணயிக்க மண்டல அளவில் மண்டல அலுவலர், செயற்பொறியாளர், உதவி வருவாய் அலுவலர், கணக்கு அலுவலர், உதவி பொறியாளர் மற்றும் வரி மதிப்பீட்டாளர் அடங்கிய வாடகை நிர்ணயக் குழுவினால் வாடகை நிர்ணயம் செய்து வார்டு குழு பரிந்துரை அடிப்படையில் மன்றத்துக்குப் பொருள் சமர்ப்பித்து ஒப்புதல் பெற்று செய்யலாம் என ஆணையரின் 02.06.2014 நாளிட்ட உத்தரவு பெறப்பட்டது. அதன்படி வாடகைக்குழு அமைத்து கீழ்கண்டுள்ளவாறு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது.

| Sl. No. | Subject | Amount |
|---|---|---|
| 1. | Rent (A/C Hall ) 12 Hours | 1,75,000/– |
| 2. | Cleaning Charges | 15,000/– |
| 3. | P.A. System | 10,000/– |
| 4. | Deposit (E.B. Charges) | 15,000/– |
| 5. | Service Tax (S.No.1 to 4) | 12.36% |
| 6. | Caution Deposit (Refundable) | 10,000/– |

சென்னை மாநகராட்சி மண்டலம்–8, 28வது வார்டு குழு கூட்டம் தீர்மான எண். 68, நாள்.09–06–2014ல் மேற்கண்டுள்ள அட்டவணைப்படி வாடகை நிர்ணயம் செய்ய ஒப்புதல் அளித்துள்ளது. சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட இடங்களில் செயல்பட்டு வரும் தனியாருக்கு சொந்தமான குளிர்சாதன வசதி மற்றும் வாகன நிறுத்துமிடத்துடன் கூடிய கலையரங்கம் மற்றும் திருமண கூடத்தின் வாடகை வசூல் செய்யப்படும் விவரங்களுடன் ஒப்பிடுகையில் மண்டலம்–8, வார்டு–101ல் புதிதாக கட்டப்பட்டுள்ள கலையரங்கத்திற்கு

வாடகை – ஒரு நாளுக்கு = 2. 50 இலட்சம்

12 Hours = 1.75 இலட்சம்

4 Hours = 30 ஆயிரம்

மற்ற கலையரங்கத்தை விட குறைவாகவே காணப்படுகிறது. இதன் விவரம் ஒப்பீடு அட்டவணை விரிவாக இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், அரங்கத்தின் கீழ்தளம், இடைதளம் மற்றும் முதல் மாடி மட்டும் திருமண நிச்சயவிழா, திருமணம், திருமண வரவேற்பு, சீமந்தம், காது குத்துதல், பணி ஒய்வு பெறும் விழா, பள்ளி / கல்லூரி ஆண்டு விழா, பள்ளி கல்லூரி விளையாட்டு விழா, இசை நிகழ்ச்சிகள், நாடகங்கள், கருத்தரங்கங்கள் மற்றும் திரைப்பட விழாக்கள் ஆகியவற்றிற்கு மத்திய வட்டார செயற்பொறியாளர் (கட்டிட ஒப்புதல்) மற்றும் மண்டலம்–8 உதவி கோட்ட மின் பொறியாளர் ஆகியோர்களின் கருத்துரைகளின்படி,

**கீழ்தளம், முதல் தளம்– 1 நாள் வாடகை – 59,490/–**

வாடகை நிர்ணயம் செய்யவும் அதற்கான சேவைக் கட்டணத்துடன் பின்வருமாறு நிர்ணயம் செய்ய கணக்கிடப்பட்டுள்ளது.

| Sl. No. | Subject | Only Auditorium and Basement Parking Rent –Amount | | | For First Floor and Basement (Non A/c Hall) | |
|---|---|---|---|---|---|---|
| | | Full Day | 12 Hours | 4 Hours | 1 Day | Half Day |
| 01 | Rent | 2,50,000/- | 1,75,000 | 30000/- | 59,490/- | 29,475/- |
| 02 | Cleaning Charges | 15,000/ | 15,000 | 2500/- | 7500/- | 3500/- |
| 03 | P.A. System | 15,000/- | 10,000 | 5000/- | 3000/- | 2000/- |
| 04 | E.B. Charges | 30,000/- | 15,000 | 5,000/- | 7500/- | 4000/- |
| 05 | Service Tax (Sl.No. 1 to 4) | 12.36% | 12.36% | 12.36% | 12.36% | 12.36% |
| 06 | Caution Deposit (Refundable) | 20,000/- | 20,000 | 20,000/- | 10,000/- | 10,000/- |

Genarator உபயோகித்தால் 1 மணி நேரம் வரை ரூ.5,000/– செலுத்த வேண்டும். அடுத்த ஒவ்வொரு மணிநேரத்திற்கும் கூடுதலாக ஒவ்வொரு ரூ.5,000/– செலுத்த வேண்டும்.

இக் கலையரங்கம் (Auditorium) கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் வாடகைக்கு விடலாம்.

1. மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாண்புமிகுமேயர் அவர்கள் கலந்து கொள்ளும் அரசு நிகழ்ச்சிகள் தவிர, பிற அரசியல் மற்றும் அரசியல் சார்பான நிகழ்ச்சிகள் (Political or Quasi-Political programme) நடத்த அனுமதி இல்லை.
2. மதம் சார்புடைய சொற்பொழிவு கூட்டங்களுக்கு (Religious speeches) அனுமதியில்லை.
3. விளம்பர நோக்குடன் செயல்படும் நிகழ்ச்சிகளுக்கு (Publicity events) அனுமதியில்லை.
4. விற்பனையாளர்கள் பொருட்களை விற்பனை செய்வது (Selling vendors) அனுமதியில்லை.

**பிற நிபந்தனைகள்**

1. நிகழ்ச்சி நடைபெறவுள்ள நாளுக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் மட்டுமே கலை அரங்கம் முன்பதிவு செய்யப்படும் (within 3 months),
2. அதிகபட்சம் 24 மணி நேரத்திற்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படும்.
3. சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்காக அலுவலர் கூட்டங்கள், இயற்கை இடர்பாடுகளின்போது பணிகள் மேற்கொள்ளுதல், மற்றும் தேர்தல் பணிகள் போன்ற தவிர்க்க முடியாத அவசர நிகழ்ச்சிகளில் கலை அரங்கம் தேவைப்படின் மனுதாரருக்கு வழங்கப்படும் முன்பதிவானது ரத்து செய்யப்படும்.
4. வாடகைக்கு ஒதுக்கீடு பெற்ற நிகழ்ச்சிக்காக மட்டுமே கலை அரங்கம் பயன்படுத்திட வேண்டும்.
5. முன்பதிவு செய்யப்பட்ட நாள் மற்றும் நேரத்தினை பின்னர் மாற்றுவதற்கோ அல்லது முன்பதிவினை ரத்து செய்வதற்கோ கோரும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படமாட்டாது.
6. கலை அரங்கத்தினை முன் பதிவு பெற்றவர்கள் சென்னை மாநகராட்சியின் சின்னம் மற்றும் சென்னை மாநகராட்சியின் புகைப்படம் போன்றவைகளை உபயோகப்படுத்தக் கூடாது.

7. கலை அரங்கத்தில் நடத்தப்பட உள்ள நிகழ்ச்சிகள் சென்னை மாநகராட்சியின் புகழுக்கு குந்தகம் ஏற்படாத வகையில் நடத்தப்பட வேண்டும்.
8. எவ்விதமான சூழ்நிலையிலும் கலை அரங்கத்தில் அனுமதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கைக்கு மிகையாக நபர்கள் அனுமதிக்க கூடாது.
9. மின்சாரம் தடைப்பட்டால் சென்னை மாநகராட்சி எந்த விதத்திலும் பொறுப்பேற்காது. எனினும் அவசர தேவைக்காக நடமாடும் மின் உற்பத்தி சாதனத்தினை (Generator) பயன்படுத்திக் கொள்ளலாம். அதற்கு 1 மணி நேரத்திற்கு ரூ.5,000/– செலுத்த வேண்டும் அடுத்த ஒவ்வொரு மணி நேரத்திற்கும் கூடுதலாக தொகை செலுத்த வேண்டும். பெடஸ்டல் ஃபேன், ஏர் கூலர் ஆகியவைகளை நிகழ்ச்சி அமைப்பாளர்கள் அவர்களின் சொந்த செலவிலேயே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இந்நிகழ்வில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏதேனும் விசேஷ கட்டணம் செலுத்தப்பட வேண்டியிருந்தால் அக்கட்டணத்தினை நிகழ்ச்சி அமைப்பாளரே சென்னை மாநகராட்சி மூலம் செலுத்தப்பட வேண்டும்.
10. அமைப்பாளரால் நடத்தப்பட உள்ள நிகழ்ச்சிக்கு காவல்துறையிலிருந்து அனுமதி பெறப்பட வேண்டிய அவசியம் இருப்பின், காவல் துறையின் அனுமதியினை பெற்றுக் கொள்ள வேண்டும். அனுமதியின் நகலினை சென்னை மாநகராட்சி, மண்டல அலுவலகம்–8 அலுவலகத்தில் அளிக்க வேண்டும்.
11. கலை அரங்கத்தினை வாடகைக்கு ஒதுக்கீடு பெற்ற விண்ணப்பதாரர், அதன் அசல் ஆணையுடன் நிகழ்ச்சி நடைபெறும் நாள் அன்று சம்பந்தப்பட்ட கோட்ட உதவி பொறியாளர், மண்டல அலுவலகம்–8 செனாய் நகர், சென்னை–30 அவர்களை அணுகி, அதற்குண்டான மண்டலத்தில் பராமரிக்கப்படும் பதிவேட்டில் கையொப்பமிட்டு சாவியினை பெற்றுக் கொள்ள வேண்டும்.
12. கலை அரங்கத்திற்கு உள்ளே எந்த விதமான உணவுப் பொருட்களும் தயாரிப்பதற்கும் அனுமதி கிடையாது.
13. அரசு நிகழ்சிகளுக்கு கட்டணத் தொகையில் சலுகை (Concession) வழங்கப்படும்.
14. சென்னை மாநகராட்சி கலை அரங்கம் ஒதுக்கீடு அனுமதி வழங்கப்பட்ட நபர் தனது அனுமதியை வேறு நபருக்கு மாற்றம் செய்யக்கூடாது.
15. அரங்கத்தினுள்ளே பொருட்களை சேதப்படுத்தினால், அதற்குரிய தண்டத்தொகை வசூலிக்கப்பட்டு சீர் செய்யப்படும்.
16. கலையரங்கத்திற்கான வாடகை தொகை மற்றும் இதர கட்டணங்கள் விவரம் பின்வருமாறு.

| Sl.No. | Subject | | Only Auditorium and Basement parking Rent –Amount | | For First Floor, Mazanine and Basement (Non A/c Hall) | |
|---|---|---|---|---|---|---|
| | | Full Day | 12 Hours | 4 Hours | 1 Day | Half Day |
| 01 | Rent | 2,50,000/- | 1,75,000 | 30000/- | 59,490/- | 29,475/- |
| 02 | Cleaning Charges | 15,000/ | 15,000 | 2500/- | 7500/- | 3500/- |
| 03 | P.A. System | 15,000/- | 10,000 | 5000/- | 3000/- | 2000/- |
| 04 | E.B. Charges | 30,000/- | 15,000 | 5000/- | 7500/- | 4000/- |
| 05 | Service Tax (Sl.No. 1 to 4) | 12.36% | 12.36% | 12.36% | 12.36% | 12.36% |
| 06 | Caution Deposit (Refundable) | 20,000/- | 20,000 | 20,000/- | 10,000/- | 10,000/- |

17. Genarator உபயோகித்தால் 1 மணி நேரத்திற்கு ரூ. 5,000/– செலுத்த வேண்டும்.

<u>சுகாதாரம்:</u>

1. மண்டபத்தினுள்ளே எச்சில் துப்பக்கூடாது.
2. குப்பைகள் சேராமல் அவ்வப்போது சுத்தப்படுத்த வேண்டும். குப்பைகள் தரம் பிரித்து வைக்கப்பட வேண்டும்
3. மது அருந்துதல், சூதாட்டம் போன்றவற்றிற்கு அனுமதி இல்லை.

எந்தவொரு நிகழ்ச்சிக்கும் இக்கலையரங்கத்தினை வாடகைக்கு விடுவது என்பது சென்னை மாநகராட்சியின் முடிவுக்கு உட்பட்டது.

எனவே, சென்னை மாநகராட்சி மண்டலம்–8, வார்டு எண் 101, 8வது குறுக்கு தெரு, செனாய் நகர், சென்னை–30ல் சென்னை மாநகராட்சியால் புதிதாக கட்டப்பட்டுள்ள கலையரங்கம் (Auditorium) மேற்கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அதற்கு வாடகையாக சென்னை மாநகராட்சி மண்டலம்–8, 28வது வார்டு குழு கூட்டம் தீர்மான எண்.68, நாள்.09.06.2014ல் தெரிவித்துள்ளபடி மேலே அட்டவணையில் உள்ள தொகை வாடகையாக நிர்ணயம் செய்யவும் பொது மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிக்கவும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 26.02.2015 அன்று தீர்மான எண்.53/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பே.சா.து.ந.க.எண்.பி1/1554/14**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.02.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.94/2015 **பொருள் எண்.44**

**ஒப்பந்ததாரர்களுக்கு பிணை வைப்புத் தொகை – திரும்ப வழங்குவது –நடைமுறை சிக்கல்களை நிவர்த்தி செய்ய உரிய வழிமுறைகள் பின்பற்றுவது குறித்து மன்றத்தின் அனுமதி**

சென்னை மாநகராட்சியில் உள்ள ஒப்பந்ததாரர்கள் பல்வேறு விதமான பணிகளை செய்து வருகின்றனர். இப்பணிகள் அனைத்து மண்டலங்கள் மற்றும் துறைகளில் நடைபெற்று வருகிறது. அந்த பணிகளுக்கான ஒப்பந்த பராமரிப்பு காலம் மூன்று ஆண்டுகள் மற்றும் பல்வேறு விதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது . மேற்படி பராமரிப்பு காலம் முடிந்தவுடன் ஒப்பந்ததாரர்கள் பிணை வைப்புத் தொகையினை திரும்பப் பெறவேண்டி சம்பந்தப்பட்ட பணிக்கான அளவுப் புத்தகத்தில் குறிப்பிட்டு துறைத்தலைவர் அனுமதியுடன் பெறும் நடைமுறை தற்போது பின்பற்றப்பட்டு வருகிறது.

பல்வேறு பணிகள் ஒரே அளவுப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டு அந்தப் புத்தகம் ஏதாவதொரு பணிக்கான கோப்பில் இணைக்கப்பட்டு பிற பணிகளுக்கு அளவுப் புத்தகம் இல்லாத நிலை உள்ளது. மேற்படி அளவுப்புத்தகத்தை கண்டறிய இயலாத நிலையும் உள்ளது. இவ்வாறான இனங்களில் பிணை வைப்புத் தொகையை ஒப்பந்ததாரர்கள் பெற முடியாமல் கிடப்பில் உள்ளது.
இதற்கு தீர்வு காணவேண்டி சென்னை மாநகராட்சி ஒப்பந்ததாரர்கள் நீண்டநாள் கோரிக்கை நிலுவையில் உள்ளது.

கீழ்க்காணும் சில வழிமுறைகளை பின்பற்றி அளவுப்புத்தகம் இல்லாத பணிகளுக்கு பிணை வைப்புத் தொகையை திரும்ப வழங்க விதி தளர்வு செய்ய முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்.

1. பணி செய்யப்பட்ட துறைக்கான பகுதி கணக்குக் குழுமத்தின் கணக்கு அலுவலரிடமிருந்து குறிப்பிட்ட பிணை வைப்புத் தொகை திரும்ப அளிக்கப்படவில்லை என்று உறுதிபடுத்திக்கொள்ளவேண்டும்.
2. மேற்கண்ட பிணை வைப்புத்தொகையினை இன்னும் திரும்பப் பெறவில்லை என்று ஒப்பந்ததாரரிடமிருந்து பிணை உறுதிப் பத்திரம் பெறப்படவேண்டும்.
3. ஒப்பந்ததாரரிடமிருந்து பிணை வைப்புத் தொகை பெறுவதற்கான முன் பண பற்றுச் சீட்டு வில்லை பெறப்படவேண்டும்.
4. பணி செய்யப்பட்ட துறையிடமுள்ள ஆவணங்களின் அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு பிணை வைப்புத்தொகை திரும்ப வழங்கப்படவில்லை என்று உறுதி செய்யப்படவேண்டும்.

குறிப்பிட்ட அளவுப் புத்தகம் இல்லாத பணிகளுக்கு மேற்கண்ட விதி தளர்வினை பின்பற்றி ஒப்பந்ததாரருக்கான பிணை வைப்புத் தொகையினை விடுவித்திடலாம் .

இனி வரும் காலங்களில் இந்த நடைமுறை சிக்கல்களை தவிர்க்கும்பொருட்டு பின்வரும் வழிமுறைகள் தவறாமல் பின்பற்றப்படவேண்டும்.

1. ஒரே அளவுப் புத்தகத்தில் பல்வேறு பணிகளுக்கு மாற்றி எழுதுவதை தவிர்க்க ஒவ்வொரு பணிக்கும் ஒவ்வொரு அளவுப் புத்தகத்தை பயன்படுத்த ஏதுவாக 20, 50 மற்றும் 100 பக்கங்கள் கொண்ட அளவுப் புத்தகங்களை அச்சிடவும்;
2. இதற்காக ஒரு தனியான படிவம் தயாரிக்கப்பட்டு அதில் பணியின் பெயர், தொகை, பிணை வைப்புத்தொகை, பிணை வைப்புத் தொகை கேட்பு தேதி, மற்றும் ஒப்பந்ததாரர் பெயர் போன்றவற்றை உள்ளடக்கி பணிக்கான இறுதிப் பட்டியல் தீர்வு செய்யும்பொழுது ஒப்பந்ததாரருக்கு ஒரு சான்று வழங்கப்படவேண்டும். இப்படிவத்துடனான சான்று துறை மற்றும் மண்டலத்திலும் பராமரிக்கப்படவேண்டும்.
3. ஒப்பந்தாரர் மேற்படி படிவத்துடனான சான்றுடன் பிணை வைப்புத் தொகை திரும்ப வழங்க கோரும்போது துறை மற்றும் மண்டலத்தில் உள்ள படிவத்துடனான சான்றுடன் சரிபார்க்கப்பட்டு பிணை வைப்புத்தொகை விடுவிக்கப்படவேண்டும்.

4. மேற்சொன்னபடி ஏற்கனவே முடிக்கப்பட்ட பணிகளில் அளவுப் புத்தகம் இல்லாத இனங்களுக்கு விதித்தளர்வு செய்து ஒப்பந்ததாரர்களுக்கு பிணை வைப்புத்தொகை திரும்ப வழங்குவற்கும்,

மேற்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக நடைமுறைப்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 26.02.2015 அன்று தீர்மான எண்.45/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.02.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 26.02.2015 அன்று தீர்மான எண்.56/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/48028/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.02.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.95/2015** **பொருள் எண்.45**

**உதவி கணக்கு அலுவலர் பதவிக்கான தெரிவு பட்டியலுக்கு அனுமதி**

சென்னை மாநகராட்சியில் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது :–

| | | |
|---|---|---|
| 1 | பதவி உயர்வுக்கான பதவியின் பெயர் | உதவி கணக்கு அலுவலர் |
| 2 | மைய நாள் | 15.05.2014 |
| 3 | ஊதிய விகிதம் | ரூ.15600–39100 + தர ஊதியம் 5400 |
| 4 | காலிப்பணியிட மதிப்பீடு<br>(Estimate of vacancies) | 1) அனுமதிக்கப்பட்ட பணியிடம் – 29<br>(அ) தற்காலிக பணியிடம் – –<br>(ஆ) நிரந்தர பணியிடம் – 29<br>2) பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் – 1<br>3) மைய நாளன்று உள்ள காலிப்பணியிடம் – 12<br>4) 5 சதவீதம் விடுப்பு காலிப்பணியிடம் – 1<br>5) பட்டியல் ஆண்டில் பதவி உயர்வினால் ஏற்படும் காலிப்பணியிடம் –<br>6) பட்டியல் ஆண்டில் புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் – –<br>––––<br>14 |
| 5 | வளர் நிலை பதவியின் பெயர் மற்றும் தகுதிகள் | நிர்வாக அலுவலர்<br>(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தால் வழங்கப்பட்ட பட்டம்.<br>(ஆ)கண்காணிப்பாளராக பதவியில் ஓராண்டு காலம் தகுதி பணி முடித்தவராக இருக்க வேண்டும். (மன்ற தீர்மான எண்.403/2010, நாள்.31.08.2010.)<br>(இ) சார்நிலை அலுவலருக்கான கணக்கு தேர்வு பாகம்–I மற்றும் II மற்றும் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| 6 | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ? | கடந்த ஆண்டு உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தகுதியான நபர்கள் வளர் நிலை பதவியில் இல்லாததால் பட்டியல் தயாரிக்கப்படவில்லை. |

சென்னை மாநகராட்சி பொது பணி விதிகள் –1970ன்படி உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊட்டப்பதவி பட்டதாரி கண்காணிப்பாளர் (Superintendent) {தற்போது நிர்வாக அலுவலர் (Administrative Officer)} மற்றும் ஊட்டப்பதவியில் மூன்றாண்டு பணி நிறைவு செய்திருக்க வேண்டும் என்பதாகும். ஆனால் உதவி கணக்கு அலுவலர் பதவியில் ஏற்படும் பல காலிப்பணியிடங்களை மூன்றாண்டு பணி நிறைவு செய்த பட்டதாரி நிர்வாக அலுவலர்களைக் கொண்டு பதவி உயர்வு மூலம் நிரப்ப தகுதிவாய்ந்த நபர்கள் இல்லாத காரணத்தால் பொதுப்பணி விதிகளில் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட பணித்தகுதியான நிர்வாக அலுவலர் பதவியில் மூன்றாண்டு பணி நிறைவு செய்திருக்க வேண்டுமென்ற விதியினை தளர்வு செய்து ஓராண்டு பணி நிறைவு செய்தவர்களைக் கொண்டு நிரப்பிட பொதுப்பணி விதிகளில் திருத்தம் மேற்கொள்ள வேண்டி மன்ற தீர்மான எண்.403/2010, நாள்.31.08.2010 நிறைவேற்றப்பட்டு அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டு அரசின் ஆணையை எதிர்நோக்கிய நிலையில் உள்ளது.

உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள 29 பணியிடங்களில் 16 கணக்கு அலுவலர்கள் அயற்பணி அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். 1 உதவி கணக்கு அலுவலர் மட்டும் சென்னை மாநகராட்சியை சார்ந்தவர். தற்போது 12 காலிப்பணியிடங்கள் இன்றைய தேதியில் உள்ளன, மேலும் வயது முதிர்வின் அடிப்படையில் சென்னை மாநகராட்சியின் உதவி கணக்கு அலுவலரும் பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளதால் 13 காலிப்பணியிடங்கள் ஏற்படவுள்ளது. தற்போது சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் நிர்வாக அலுவலர்களின் பட்டியல் பின்வருமாறு

**அட்டவணை–1**

**சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் நிர்வாக அலுவலர்களின் பணி மூப்பு பட்டியல்**

| வ. எண் | பெயர் | பட்டதாரி /பட்டதாரி அல்லாதவர் | நிர்வாக அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | எச்.மஹமூதாபி | பட்டதாரி அல்லாதவர் | 2009 | பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை. |
| 2 | கோகிலா | பட்டதாரி அல்லாதவர் | 2011 | பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை. |
| 3 | என்.மைதிலி | பட்டதாரி அல்லாதவர் | 2011 | பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை. |
| 4 | எஸ்.கௌரி | பட்டதாரி அல்லாதவர் | 2012 | பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை. |
| 5 | எஸ்.சுரேஷ் | **பட்டதாரி** | 2012 | **துணை விதி 9(2)ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கையில் இறுதியாணையாக தனியருக்கு வருடாந்திர ஊதிய உயர்வினை மூன்று மாதங்களுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து தண்டனை நிலுவையில் உள்ளதால் பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 6 | எஸ்.கோதைநாயகி | பட்டதாரி அல்லாதவர் | 2013 | பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை. |
| 7 | என்.ஏ.ரமாதேவி | பட்டதாரி அல்லாதவர் | 2013 | பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை. |
| 8 | ஜி.சுகுனா | **பட்டதாரி** | 14.03.2013 மு.ப. | **மையநாளன்று ஓராண்டு பணி நிறைவு செய்துள்ளார்** |
| 9 | ஆர்.அன்பரசு | **பட்டதாரி** | 25.07.2013 மு.ப. | **மையநாளன்று 9 மாதம் 21 நாட்கள் பணி நிறைவு செய்துள்ளார்.** |
| 10 | எம்.சந்திரபுஷ்பம் | பட்டதாரி அல்லாதவர் | 2013 | பட்டதாரி அல்லாதவர் என்பதால் இப்பட்டியலில் சேர்க்க தகுதி பெறவில்லை. |
| 11 | எல்.வெண்மதி | **பட்டதாரி** | 23.10.2013 | **மைய நாளன்று 6 மாதம் 23 நாட்கள் பணி நிறைவு செய்துள்ளார்.** |

மேற்கண்ட சூழலில் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்க ஓராண்டு பணி நிறைவு செய்த பட்டதாரி நிர்வாக அலுவலர்களின் பணி விவரங்கள் கோரி **11.12.2014** நாளிட்ட சுற்றறிக்கை அனுப்பப்பட்டது.

அதன்படி, சென்னை மாநகராட்சி மண்டலம்–7ல் நிர்வாக அலுவலராக பதவி வகிக்கும் திருமதி.ஜி.சுகுணா, திருமதி.எல்.வெண்மதி, நிர்வாக அலுவலர் மண்டலம்–2 மற்றும் திரு.ஆர்.அன்பரசு, நிர்வாக அலுவலர், வட்டார துணை ஆணையர் (மத்தியம்) ஆகியோரின் பணி விவரம் மற்றும் பரிந்துரைப்பட்டி பெறப்பட்டது.

தற்போது சென்னை மாநகராட்சியில் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட மையநாளான 15.05.2014 அன்று ஓராண்டு பணிநிறைவு செய்துள்ள பட்டதாரி நிர்வாக அலுவலர் இரண்டு நபர்கள் மட்டும் உள்ளனர்– அட்டவணை–1ல் வரிசை எண்.5 மற்றும் 8. இதில் வரிசை எண்.5ல் உள்ள திரு.எஸ்.சுரேஷ் என்பவர் மீது துணை விதி 9(2)ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு நிலுவையில் உள்ளது என சமர்ப்பிக்கப்படுகிறது.

திரு.ஆர்.அன்பரசு மற்றும் திருமதி.எல்.வெண்மதி ஆகிய நிர்வாக அலுவலர்கள் தாங்கள் 25.07.2013 மற்றும் 24.10.2013 ஆகிய தேதிகளில் நிர்வாக அலுவலர்களாக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வருவதாகவும், தாங்கள் இருவரும் கணக்கு அலுவலர் பதவியில் பொறுப்பு வகித்து வருவதாகவும் மைய நாளான 15.5.2014 அன்று ஓராண்டு பணிநிறைவு செய்யாத போதும் இன்றைய தேதியில் (22.1.2015) ஓராண்டு பணிநிறைவு செய்துள்ளனர் என்றும் தெரிவித்து தங்களது பெயர்களையும் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தயாரிக்கப்பட்டுள்ள தெரிவுப்பட்டியலில் சேர்த்து தங்களுக்கு உதவி கணக்கு அலுவலர்களாக பதவி உயர்வு வழங்கும்படி கோரிக்கை விடுத்துள்ளனர்.

**அட்டவணை–2**

| வ.எண். | பெயர் மற்றும் துறை/மண்டலம் ( திருவாளர்கள்) | நிர்வாக அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | மையநாளன்று நிர்வாக அலுவலர் பதவியில் பணிநிறைவு செய்துள்ள காலம் | பணிகாலத்தகுதி தளர்வு செய்யப்படவேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 1 | ஜி.சுகுணா, நிர்வாக அலுவலர், மண்டலம்–7 | 13.04.2013 | 1 வருடம் 1 மாதம் | – |
| 2 | ர.அன்பரசு, நிர்வாக அலுவலர், மண்டலம்–1 | 25.07.2013 | 9 மாதங்கள் 21 நாட்கள் | 2 மாதம் 10 நாட்கள் |
| 3 | எல்.வெண்மதி, நிர்வாக அலுவலர், மண்டலம்–2 | 23.10.2013 | 6 மாதங்கள் 23 நாட்கள் | 5 மாதம் 7 நாட்கள் |

தற்போது சென்னை மாநகராட்சியில் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு ஒப்பளிக்கப்பட்ட 29 பணியிடங்களில் 12 பணியிடங்கள் சென்னை மாநகராட்சியின் நிர்வாக அலுவலர்களாக பணிபுரிபவர்கள் உதவி கணக்கு அலுவலர்களாக பொறுப்பு வகித்து வருகின்றனர். எஞ்சிய 16 பணியிடங்கள் தமிழ்நாடு கருவூலகம் மற்றும் கணக்குத்துறையிலிருந்து கணக்கு அலுவலர் மற்றும் உதவி கணக்கு அலுவலர் பதவிகளிலிருந்து அயற்பணி அடிப்படையில் பணி புரிந்து வருகின்றனர். மற்றும் ஒருவர் மட்டும் சென்னை மாநகராட்சியின் உதவி கணக்கு அலுவலராக பணிபுரிந்து வருகிறார். ஊட்ட பதவியான நிர்வாக அலுவலர் பதவியில் பணித்தகுதிகள் பெற்றுள்ள நிர்வாக அலுவலர்கள் இல்லாத காரணத்தால் இந்த பதவிகள் நீண்ட காலமாக காலிபணியிடங்களாக உள்ளன.

சென்னை மாநகராட்சியில் உதவி கணக்கு அலுவலர் பதவியில் பொறுப்பு அலுவலர்களாக பணிபுரிந்து வரும் நிர்வாக அலுவலர்களின் கோரிக்கை மற்றும் நிர்வாக நலன் கருதி காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டிய அவசியம் முன்னிட்டும், இதற்கு முன்பு கடந்த 15.5.2008ஐ மைய நாளாக கொண்டு தயாரிக்கப்பட்ட தெரிவுப்பட்டியலுக்கும் 15.5.2012ஐ மையநாளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட தெரிவுப்பட்டியலுக்கும் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தயாரிக்கபட்ட தெரிவுப்பட்டியலில் இதே போன்று கண்காணிப்பாளர் பதவியில் மூன்று ஆண்டு பணி நிறைவு செய்யாத கண்காணிப்பாளர்களை அரசின் பின்னேற்பு / உறுதியாக்கத்திற்குட்பட்டு பணி கால தகுதியினை தளர்வு செய்து பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், இதற்கு அரசாணை (ப) எண்.209, ந.நி.ம.கு.வ.துறை நாள் 25.09.2009 மற்றும் அரசு ஆணை (ப) எண்.19, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை, நாள்17.01.13ல் உதவி கணக்கு அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் உறுதியாக்கம் செய்து ஆணையிடப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், ஒருவர் மட்டும் ஓர் ஆண்டு காலத்திற்கு மேலாக நிர்வாக அலுவலர் பதவியில் பணி நிறைவு செய்துள்ளதன் அடிப்படையிலும், மேலும் இரண்டு நபர்கள் ஓராண்டிற்கு குறைவாக நிர்வாக அலுவலர் பதவியில் பணிநிறைவு செய்துள்ளதால், மேற்படி நபர்களின் பெயர்களை உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தகுதியற்றவராக கருதி, திருமதி.சுகுணா, நிர்வாக அலுவலர் அவர்களது பெயரை உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வு வழங்க பரிசீலிக்கலாம்.

<u>அட்டவணை–3</u>

| வ. எண். | பெயர் திருவாளர்கள் | நிர்வாக அலுவலராக பணியில் சேர்ந்த நாள் | குறிப்பு |
|---|---|---|---|
| 01 | எஸ்.சுரேஷ், நிர்வாக அலுவலர், கல்வித்துறை | 2012 | **இன்றைய தேதியில் துணை விதி 9(2)ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கையின் மீது விசாரணை மேற்கொண்டு, தனியர் அளித்த விளக்கத்தின்மீது இறுதியாணையாக தனியருக்கு வருடாந்திர ஊதிய உயர்வினை மூன்று மாதங்களுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து தண்டனை நிலுவையில் உள்ளதால் பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 02. | ஜி.சுகுணா, நிர்வாக அலுவலர், மண்டலம்–7 | 13.04.2013 | நிர்வாக அலுவலர் பதவியில் 1 வருடம் 1 மாதம் பணி நிறைவு செய்துள்ளதாலும் , இன்றைய தேதியில் தனியர் மீது எந்த விதமான விசாரணைகளோ ஒழுங்கு நடவடிக்கைகளோ நிலுவையில் இல்லாததால் தனியரின் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம். |
| 03. | ர.அன்பரசு, நிர்வாக அலுவலர், மண்டலம்–1 | 25.07.2013 | நிர்வாக அலுவலர் பதவியில் ஓராண்டிற்கு குறைவாக, அதாவது 9 மாதங்கள் 21 நாட்கள் பணி நிறைவு செய்துள்ளதால் தனியரின் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம். |
| 04. | எல்.வெண்மதி, நிர்வாக அலுவலர், மண்டலம்–2 | 23.10.2013 | நிர்வாக அலுவலர் பதவியில் ஓராண்டிற்கு குறைவாக, அதாவது 6 மாதங்கள் 23 நாட்கள் பணி நிறைவு செய்துள்ளதால் தனியரின் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம். |

வ.எண். 1ல் இடம்பெற்றுள்ள திரு.எஸ்.சுரேஷ், நிர்வாக அலுவலர் அவர்கள் மீது துணை விதி 9(2)ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கையில், தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தனியரின் விளக்கம் விசாரணை அலுவலர் அறிக்கை மற்றும் தனியர் அளித்துள்ள கூடுதல் விளக்கம் ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, இந்நிகழ்வில் நிதி இழப்பீடு ஏதுமில்லை எனினும் தனியர் கணக்கு அலுவலர் (பொ) பணியில் மேற்பார்வை மற்றும் இதரபணியில் கவனக்குறைவுடன் செயல்பட்டுள்ளார் என தெளிவாக புலப்படுகிறது. எனவே திரு.எஸ்.சுரேஷ், முன்னாள் கணக்கு அலுவலர் (பொ) அவர்களின் வருடாந்திர ஊதிய உயர்வினை மூன்று மாதங்களுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து உதவி ஆணையர் பொ.நி.ம.ப அவர்களின் செயமுறை ஆணை பொ.து.ந.க.எண்.5/32491/2013, நாள்.6.2.2015.ல் இறுதி ஆணை வழங்கப்பட்டுள்ளது. வ.எண். 3 மற்றும் 4ல் இடம்பெற்றுள்ள நபர்கள் நிர்வாக அலுவலர் பதவியில் ஓராண்டிற்கு குறைவாக பணி நிறைவு செய்துள்ளதால் தனியர்களின் பெயர்களை பட்டியலிலிருந்து நீக்கலாம்.

உதவி கணக்கு அலுவலர் பதவிக்கான நியமன விதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட பட்டப்படிப்பு மற்றும் ஊட்டப்பதவியான நிர்வாக அலுவலர் பதவியில் 3 ஆண்டு பணி நிறைவு என்ற நியமன விதிகளில் ஊட்டப்பதவியான நிர்வாக அலுவலர் பதவியில் 3 ஆண்டுக்கு பதிலாக 1 ஆண்டு பணி நிறைவு செய்தால் போதும் என விதி திருத்தம் செய்ய வேண்டி மன்ற தீர்மான எண்.403/2010, நாள்.31.08.02010. நிறைவேற்றப்பட்டு அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டு அரசின் ஆணை எதிர்நோக்கியுள்ள நிலையில், மேற்காணும் அட்டவணையில் வரிசை எண்.2 முதல் 4வரை உள்ள நபர்களில் வரிசை எண்.2ல் உள்ள நபர் நிர்வாக அலுவலர் பதவியில் 1 வருடம் பணிநிறைவு செய்துள்ளதால் பணிக்கால தகுதியினை மட்டும் தளர்வு செய்து தனியரது பெயரை பதவி உயர்வுக்கு பரிசீலிக்கலாம். உதவி கணக்கு அலுவலர்களின் சம்பள விகிதம் ரூ.15600–39100+5400 தரஊதியம் ஆகும்.

எனவே,

1. உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊட்டப்பதவியில் 3 ஆண்டுகாலம் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற விதியை தளர்வு செய்து 15.05.2014ஐ மைய நாளாகக் கொண்டு திருமதி.ஜி.சுகுணா, நிர்வாக அலுவலர் அவர்களை கொண்ட உதவி கணக்கு அலுவலர் பதவிக்கான ஒரு நபர் தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வேண்டியும்,

2. மேற்படி தெரிவுப்பட்டியலின் ஒப்புதலுக்குட்பட்டு மைய நாளுக்கு முன்பு ஏற்பட்டுள்ள காலிப்பணியிடங்களை தேர்ந்த இப்பெயர் பட்டியலிருந்து ரூ.15600 – 39100 + தர ஊதியம் ரூ.5400 என்ற ஊதிய விகிதத்தில் உதவி கணக்கு அலுவலராக பதவி உயர்வு வழங்கவும், அரசின் ஆணை வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பவும்,

மேற்காணும் இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

********

**இ.டி.பி.செல்.ந.க.எண்.சி2/118/2015**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்25.02.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.96/2015** **பொருள் எண்.46**

**முறைப்பகுப்பாய்நர் பதவிக்கான தெரிவு பட்டியலுக்கு அனுமதி**

சென்னை மாநகராட்சி, திட்டம் மற்றும் பயிற்சி துறையின் கீழ் வரும் தகவல் தொழில் நுட்பத் துறை (கணிப்பொறி மையத்தில்) முறைப்பகுப்பாய்நர் (System Analyst) பதவி காலியாக இருப்பதால், இப்பதவியினை நிரப்பும் பொருட்டு 2014–2015ம் ஆண்டு 01.09.2014 மைய நாளாகக் கொண்டு இப்பதவியினை நிரப்பிட 30.01.2015 நாளிட்ட முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டு, 30.01.2015 நாளிட்ட இவ்வலுவலக சுற்றறிக்கை மூலம் கீழ்கண்ட விதிகள் அடிப்படையில் விவரங்கள் கோரப்பட்டது.

| பதவியின் பெயர் / வகுப்பு | பணி நியமன வழி முறை | தகுதி | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| முறைப்பகுப்பாய்நர் (System Analyst) | நேரடி நியமனம் | அரசால் அங்கீகரிக்கப்பட பல்கலைக் கழகத்திலிருந்து பெறப்பட்ட இளநிலை பட்டம் B.E. கணினி அறிவியல் (Computer Science) / தகவல் தொழில் நுட்பம் (Information Technology) (அல்லது) M.C.A / M.Sc., (Computer Science) ( கணினி அறிவியல் / தகவல் தொழில் நுட்பம் (I.T) உடன் 2 வருடம் மென்பொருள் அனுபவம் உள்ளவர்கள் | ரூ.15600–39100 + 5400 (தனி ஊதியம்) |
| | பதவி உயர்வு மூலம் | சென்னை மாநகராட்சியில் முறை நிகழ்ச்சி நிரலரக (Programmer) குறைந்தது 5 வருடம் பணிப்புரிந்திருக்க வேண்டும். மேலும் நேரடி நியமனத்திற்குண்டான கல்வி மற்றும் தொழில் நுட்ப தகுதி பெற்றிருக்க வேண்டும். | |
| | அயற்பணி | முறைப்பகுப்பாய்நர் ஆக மாநில அரசு அல்லது அரசு சார்ந்த பொதுத் துறையில் மூன்று ஆண்டுகள் குறையாமல் அனுபவம் உள்ளவர்கள். | |

காலியாக உள்ள முறைப்பகுப்பாய்நர் (System Analyst) பதவிக்கு 30.01.2015 நாளிட்ட சுற்றறிக்கை மூலம் தகுதியானவர்களின் விவரங்கள் கோரப்பட்டதில், மண்டலம் மற்றும் பிற துறைகளில் இருந்து தகுதியனவர் எவரும் இல்லை என இன்மை அறிக்கை பெறப்பட்டுள்ளது. திரு.வெங்கடேசன் தட்டச்சர் மற்றும் முருகேசன், நிகழ்ச்சி நிரலர் ஆகியோர் தங்கள் பெயர்களை சேர்க்க கோரியுள்ளனர்.

இதுகுறித்து பரிசீலனை செய்ததில், திட்டம் மற்றும் பயிற்சி துறையின் கீழ் வரும் தகவல் தொழில் நுட்பத் துறை (கணிப்பொறி மைய)த்தில் பணிபுரியும் திருமதி.ஜி.ராஜேஷ்வரி, அவர்கள் கடந்த 28.06.1999 முதல் உதவி நிகழ்ச்சி நிரலராக அம்பத்தூர் நகராட்சியில் பணிநியமனம் செய்யப்பட்டு, அம்பத்தூர் நகராட்சி சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட நாள் முதல் சென்னை மாகராட்சியில் பணிபுரிந்து வருகிறார். தனியர் கடந்த 13.11.2013 முதல் நிகழ்ச்சி நிரலரக (Programmer) பதவி உயர்வு பெற்று கணிப்பொறி மையத்தில் பணிபுரிந்து வருகிறார்.

திருமதி.ஜி.ராஜேஷ்வரி, நிகழ்ச்சி நிரலர் (Programmer) அவர்கள் அம்பத்தூர் நகராட்சியில் உதவி நிகழ்ச்சி நிரலராக கடந்த 28.06.1999ல் பணியில் சேர்ந்த நாள் முதல் முறைப்பகுப்பாய்நர் (System Analyst) பதவிக்கான முழு கல்வி தகுதி பெற்று சுமார் 14 ஆண்டுகளாக உதவி நிகழ்ச்சி நிரலராகவும், 1 வருடம் 3 மாதங்களாக நிகழ்ச்சி நிரலராகவும் பணிபுரிந்துள்ளார். முறைப்பகுப்பாய்நர் (System Analyst) பதவிக்கான துணை விதியில் இப்பதவியினை பதவி உயர்வின் மூலம் நிரப்புவதற்கு சென்னை மாநகராட்சியில் நிகழ்ச்சி நிரலராக (Programmer) குறைந்தது 5 வருடம் பணிப்புரிந்திருக்க வேண்டும் மற்றும் நேரடி நியமனத்திற்குண்டான கல்வி மற்றும் தொழில் நுட்ப தகுதி பெற்றிருக்க வேண்டும் என விதி வகுக்கப்பட்டு அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது 5 வருடம் நிகழ்ச்சி நிரலராக பணிபுரிந்து மற்றும் உரிய கல்வி தகுதியுடையவர் எவரும் இல்லை என்பதால், முறைப்பகுப்பாய்நர் (System Analyst) பதவிக்கு உரிய கல்வி தகுதியுடன் 14 ஆண்டுகளாக உதவி நிகழ்ச்சி நிரலராகவும், 1 வருடம் 3 மாதங்களாக நிகழ்ச்சி நிரலராகவும் பணிபுரிந்து வரும் திருமதி.ஜி. ராஜேஷ்வரி, நிகழ்ச்சி நிரலராக (Programmer) அவர்களுக்கு விதி தளர்வு செய்து முறைப்பகுப்பாய்நர் (System Analyst) பதவி உயர்வு வழங்க பரிந்துரை செய்யலாம்.

சென்னை மாநகராட்சியில் முறைப்பகுப்பாய்நர் (System Analyst) பதவி வகுப்பு–IIன் கீழ் வகைப்பத்தப்பட்டுள்ளதால், இப்பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பதவி உயர்வு அளித்து பணியமர்வு ஆணை வழங்கும் அதிகாரம் மாமன்றம் பெற்றுள்ளதால், முறைப்பகுப்பாய்நர் (System Analyst) பதவிக்கு உரிய கல்வி தகுதியுடன் 14 ஆண்டுகளாக உதவி நிகழ்ச்சி நிரலராகவும், 1 வருடம் 3 மாதங்களாக நிகழ்ச்சி நிரலராகவும் பணிபுரிந்து வரும் திருமதி.ஜி. ராஜேஷ்வரி, நிகழ்ச்சி நிரலராக (Programmer) அவர்களுக்கு முறைப்பகுப்பாய்நர் (System Analyst) பதவி உயர்வு வழங்க அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பி உரிய ஒப்புதல் பெற நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

01. முறைப்பகுப்பாய்நர் (System Analyst) பதவிக்கு 5 வருடம் நிகழ்ச்சி நிரலராக (Programmer) பணிபுரிந்து மற்றும் உரிய கல்வி தகுதியுடையவர் எவரும் இல்லை என்தாலும், இப்பதவி மண்டலங்கள் மற்றும் பிற துறைகளில் தகுதியான நபர் இல்லை என்பதாலும் நேரடி நியமனத்திற்கான உரிய கல்வி தகுதியுடன் 14 ஆண்டுகளாக உதவி நிகழ்ச்சி நிரலராகவும், 1 வருடம் 3 மாதங்களாக நிகழ்ச்சி நிரலராகவும் பணிபுரிந்து வரும் திருமதி.ஜி. ராஜேஷ்வரி, அவர்கள் இப்பதவிக்கான உரிய கல்வி தகுதி பெற்றுள்ளதாலும், மேலும், கீழ்நிலை பதவியில் மையநாளில் (01.09.2014) 9 மாதங்கள் பணிபுரிந்துள்ளதால், இப்பதவி உயர்வுக்காக கீழ்நிலை பதவியில் 5 ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும் என்பதலிருந்து விலக்கு அளிக்கவும்,
02. திருமதி.ஜி. ராஜேஷ்வரி, நிகழ்ச்சி நிரலராக (Programmer), அவர்களுக்கு ரூ.15600–39100 + 5400 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் முறைப்பகுப்பாய்நர் (System Analyst) பதவி உயர்வு வழங்கவும்,
03. 05.02.2015 நாளிட்ட கணிப்பொறி மையம் வெளியிட்ட சுற்றறிக்கையின்படி திரு.கே.வெங்கடேசன், வகிக்கும் தட்டச்சர் பதவி, முறைப்பகுப்பாய்நர் பதவிக்கு கீழ்நிலை பதவி இல்லை என்பதாலும், திரு.முருகேசன் அவர்கள் மைய நாளுக்கு பின்னர் 12.12.2014 நிகழ்ச்சி நிரலர் பதவியில் சேர்ந்துள்ளதாலும் இவர்களின் பெயர்களை நிராகரிக்கவும், மேற்கண்ட நிகழ்வுக்கு அரசுக்கு முன்மொழிவு அனுப்பி உரிய அனுமதி பெறவும்.

“பிப்ரவரி மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளை பொருத்தமட்டில் அரசுக்கு உரிய குறிப்பு அனுப்பவும், அரசின் உரிய ஒப்புதல் பெறலாம் என நியமனக்குழு தீர்மானித்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**இ.டி.பி.செல்.ந.க.எண்.சி2/119/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.02.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.97/2015** **பொருள் எண்.47**

**முதுநிலை முறை மேலாளர் (Senior System Manager) தெரிவு பட்டியலுக்கு அனுமதி**

சென்னை மாநகராட்சி, திட்டம் மற்றும் பயிற்சி துறையின் கீழ் வரும் தகவல் தொழில் நுட்பத் துறை (கணிப்பொறி மையம்)ல் முதுநிலை முறை மேலாளர் (Senior System Manager) பதவி காலியாக இருப்பதால், இப்பதவியினை நிரப்பும் பொருட்டு 2014–2015ம் ஆண்டு 01.10.2014 மைய நாளாகக் கொண்டு இப்பதவியினை நிரப்பிட 30.01.2015 நாளிட்ட முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டு, 30.01.2015 நாளிட்ட இவ்வலுவலக சுற்றறிக்கை மூலம் கீழ்கண்ட விதிகள் அடிப்படையில் விவரங்கள் கோரப்பட்டது.

| பதவியின் பெயர் / வகுப்பு | பணி நியமன வழி முறை | தகுதி | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| முதநிலை முறை மேலாளர் (Senior System Manager) | நேரடி நியமனம் | அரசால் அங்கீகரிக்கப்பட பல்கலைக் கழகத்திலிருந்து பெறப்பட்ட இளநிலை பட்டம் B.E. கணினி அறிவியல் (Computer Science) / தகவல் தொழில் நுட்பம் (Information Technology) மற்றும் அதனுடன் மென் பொருளில் 3 வருடம் அனுபவம் உள்ளவர்கள் (அல்லது) M.C.A / M.Sc., (Computer Science) ( கணினி அறிவியல் / தகவல் தொழில் நுட்பம் (I.T) உடன் 5 வருடம் மென்பொருள் அனுபவம் உள்ளவர்கள் | ரூ.15600–39100 + 6600 (துனி ஊதியம்) |
| | பதவி உயர்வு மூலம் | சென்னை மாநகராட்சியில் முறை பகுப்பாய்நராக (System Analyst) குறைந்தது 5 வருடம் பணிப்புரிந்திருக்க வேண்டும். மேலும் நேரடி நியமனத்திற்குண்டான கல்வி மற்றும் தொழில் நுட்ப தகுதி பெற்றிருக்க வேண்டும். | |
| | அயற்பணி | முதுநிலை முறை மேலாளர் ஆக மாநில அரசு அல்லது அரசு சார்ந்த பொதுத் துறையில் மூன்று ஆண்டுகள் குறையாமல் அனுபவம் உள்ளவர்கள். | |

காலியாக உள்ள முதுநிலை முறை மேலாளர் (Senior System Manager) பதவிக்கு 30.01.2015 நாளிட்ட சுற்றறிக்கை மூலம் தகுதியானவர்களின் விவரங்கள் கோரப்பட்டதில், மண்டலம் மற்றும் பிற துறைகளில் இருந்து தகுதியனவர் எவரும் இல்லை என இன்மை அறிக்கை பெறப்பட்டுள்ளது. முறைப்பகுப்பாய்நராக பணிபுரியும் திரு.எம்.எம்.அர்னால்டு அவர்கள் இப்பதவிக்கான கல்வித் தகுதி பெறவில்லை.

இந்நிலையில் திட்டம் மற்றும் பயிற்சி துறையின் கீழ் வரும் தகவல் தொழில் நுட்பத் துறை (கணிப்பொறி மையம்)ல் செல்வி.எம்.வி.கிருஷ்ணகுமாரி, அவர்கள் கடந்த 11.04.2001 முதல் நிகழ்ச்சி நிரலராக சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்து, கடந்த 10.05.2013 அன்று முறை பகுப்பாய்நராக (System Analyst) பதவி உயர்வு பெற்று கணிப்பொறி மையத்தில் பணிபுரிந்து வருகிறார்.

செல்வி. எம்.வி. கிருஷ்ணகுமாரி, முறை பகுப்பாய்நராக (System Analyst) அவர்கள் கடந்த ஜூலை 2014 முதல் முதுநிலை முறை மேலாளர் (Senior System Manager) ஆக கூடுதல் பொறுப்பு வகித்து வருகிறார். முதுநிலை முறை மேலாளர் (Senior System Manager) பதவிக்கான துணை விதியில் இப்பதவியினை பதவி உயர்வின் மூலம் நிரப்புவதற்கு சென்னை மாநகராட்சியில் முறை பகுப்பாய்நராக (System Analyst) குறைந்தது 5 வருடம் பணிப்புரிந்திருக்க வேண்டும் மற்றும் நேரடி நியமனத்திற்குண்டான கல்வி மற்றும் தொழில் நுட்ப தகுதி பெற்றிருக்க வேண்டும் என விதி வகுக்கப்பட்டு அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது 5 வருடம் முறை பகுப்பாய்நராக பணிமுடிந்தவர் மற்றும் உரிய கல்வி தகுதியுடையவர் எவரும் இல்லை என்பதால், முதுநிலை முறை மேலாளர் (Senior System Manager) ஆக பொறுப்பு வகிக்கும் செல்வி. எம்.வி. கிருஷ்ணகுமாரி, முறை பகுப்பாய்நராக (System Analyst) அவர்கள் முறையாக கல்வி தகுதி பெற்றுள்ளதால், தனியருக்கு விதி தளர்வு செய்து முதுநிலை முறை மேலாளர் (Senior System Manager) பதவி உயர்வு வழங்க பரிந்துரை செய்யலாம்.

சென்னை மாநகராட்சியில் முதுநிலை முறை மேலாளர் (Senior System Manager) பதவி வகுப்பு–1Bன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால், இப்பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பதவி உயர்வு அளித்து பணியமர்வு ஆணை வழங்கும் அதிகாரம் அரசு பெற்றுள்ளதால், முதுநிலை முறை மேலாளர் (Senior System Manager) பதவிக்கு உரிய கல்வி தகுதி பெற்றுள்ள செல்வி.எம்.வி.கிருஷ்ணகுமாரி, முறை பகுப்பாய்நர் (System Analyst) மற்றும் முதுநிலை முறை மேலாளர் (Senior System Manager) கூடுதல் பொறுப்பு, அவர்களுக்கு முதுநிலை முறை மேலாளர் (Senior System Manager) பதவி உயர்வு வழங்க அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பி உரிய அனுமதி பெற நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

01. முதுநிலை முறை மேலாளர் (Senior System Manager) பதவிக்கு 5 வருடம் முறை பகுப்பாய்நராக பணிபுரிந்து மற்றும் உரிய கல்வி தகுதியுடையவர் எவரும் இல்லை என்தாலும், முதுநிலை முறை மேலாளர் பதவியில் கூடுதல் பொறுப்பு வகிக்கும் செல்வி.எம்.வி.கிருஷ்ணகுமாரி, அவர்கள் இப்பதவிக்கான நேரடி நியமனத்திற்கு உரிய கல்வி தகுதி பெற்றுள்ளதால், கீழ்நிலை பதவியில் மையநாளில் (01.10.2014) ஒரு வருடம் 6 மாதங்கள் 20 நாட்கள் பணிபுரிந்துள்ளதால், இப்பதவி உயர்வுக்காக கீழ்நிலை பதவியில் 5 ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும் என்பதிலிருந்து விலக்கு அளிக்கவும்,
02. செல்வி. எம்.வி. கிருஷ்ணகுமாரி, அவர்களுக்கு ரூ.15600–39000+6600 முதுநிலை முறை மேலாளர் (Senior System Manager) பதவி உயர்வு வழங்கவும், அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பி உரிய அனுமதி பெறவும்.

“பிப்ரவரி மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளை பொருத்தமட்டில் அரசுக்கு உரிய குறிப்பு அனுப்பவும், அரசின் உரிய ஒப்புதல் பெறலாம் என நியமனக்குழு தீர்மானித்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

ம.து.ந.க.எண்.அ1/143/2015

சென்னை மாநகராட்சி
மன்றத்துறை.

**குறிப்பு**

2015ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27ஆம் நாள் நடைபெற்ற ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தில் பொருள் எண்.48 முதல் 50 வரை தீர்மான எண்.98/2015 முதல் 100/2015 வரை உள்ள வரிசை எண்ணில் எவ்வித பொருள்களும் வைக்கப்படவில்லை. இந்த மூன்று எண்களில் எந்தவித தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லை.

மன்றச் செயலாளர்